உ
சிவமயம்

வேலணை மேற்கு சங்கத்தார்கேணி ஆதி வைரவப் பெருமானின்

# வைரவப் பிரசாதம்



கும்பாபிஷேக தினத்தன்று வெளியிடப்பட்டது

06.02.2014

உ
சிவமயம்

# வைரவப்பிரசாதம்



லஷ்மி அச்சக வெளியீடு
வேலணை ஞான வைரவப்பெருமான்
கும்பாபிஷேக தினத்தின்போது வெளியிடப்பட்டது

# நூல் விபரம்


கும்பாபிஷேக தினம் :- 06 / 2 / 2014

நூலின் பெயர் :- வைரவப்பிரசாதம்


நூல் அமைப்பு :- இந்திரா திருநீலகண்டன்

கணனிப்பதிப்பு :- லங்கேஸ்வரன் சுகந்தினி


வெளியிடுவோர் :- குலசேகரம்பிள்ளை வரதராஜன்
நடராஜா ஜெயக்குமார் - கனடா

அச்சுப்பதிப்பு :- லஷ்மி அச்சகம்
195, ஆட்டுப்பட்டித் தெரு
கொழும்பு - 13.
தொலைபேசி: 2586751.

சிவமயம்



பெரிய புராணம் செய்தருளிய
சேக்கிழார் நாயனார்



உ

# முன்னாள் ஆலய பிரதம குருக்களின் ஆசியுரை



ஆலயம் தொழுவது சாலவும் நன்று என்பதற்கிணங்க ஆன்மாக்கள் லயிக்கும் இடம் ஆலயமாகும். நமது இந்து சமயத்தில் ஆகம முறைப்படி எந்த தெய்வத்தை மூலமாக வைத்து ஆலயங்களை அமைத்தாலும் அவை எங்களுக்கு எந்த இடத்திலும் எப்பவும் நிம்மதியையும் அமைதியான நல்ல வாழ்க்கையை தரும் என்பதில் ஐயமில்லை.

அந்த வகையில், வேலணை மேற்கு சங்கத்தார் கேணி ஞானவைரவப் பெருமான் ஆலயகும்பாபிஷேகம் சிறப்பாக நடைபெறுவதற்கு அவ்வூர் மக்கள் வெளிநாடுகளிலும் உள்நாட்டிலும் வாழ்ந்தாலும் தங்கள் குலதெய்வமான வைரவப்பெருமானுக்கு நித்திய நைமித்திய பூசைகள் ஒழுங்காக நடைபெற வேண்டும் என்ற நோக்கத்தோடு நிதி உதவிகளை வழங்கியமையால் மகாகும்பாபிஷேகம் என்கின்ற பெருஞ்சாந்திவிழா நடாத்துவதற்கு வைரவப் பெருமானின் திருவருள் கை கூடியுள்ளது. இக்கும்பாபிஷேகத்தை சிறப்பாக நடாத்துவதற்கு முன்னின்று அரும்பணியாற்றிய அடியார்கள். சிவாச்சாரிய பெருமக்கள் அனைவருக்கும் வைரவப் பெருமானின் திருவருள் கிடைக்க பெருமானின் திருவடிகளைப் பிரார்த்தித்து நல்லாசிகளை வழங்குகின்றேன்.

சுபம்

முன்னாள் பிரதமகுரு
சிவாகமகிரியாரத்தினம்
சிவஸ்ரீநடராஜக்குருக்கள் - உமேந்திரக்குருக்கள்
(உமா ஐயா)

உ

# வாழ்த்துரை

ஆதி வைரவப் பெருமான் திருவருள் துணை! சங்கத்தார் கேணி ஆதி வைரவப் பெருமானின் கும்பாபிஷேகவிழா செய்தியைக் கேட்டவுடன் ஆனந்தக்கண்ணீர் என் கண்களில் நிறைந்துவிட்டது. எவ்வளவு இனிமையான செய்தி தலமாகிய அரசமரமும் - தீர்த்தமாகிய சங்கத்தார் கேணியும் கூட என் கண்முன்னே நிழலாடுகின்றன. எனது பேரனார் சின்னத்தம்பி ஒரு சிறு கொட்டிலில் வைரவப் பெருமானை வைத்து தன் சகாக்களுடன் வழிபாடு ஆற்றி வந்தார். அவரைத் தொடர்ந்து அவரது வழித் தோன்றல்களும் பின்னர் நாமும் சிறப்புறப் பரிபாலித்து இடையிடையே கும்பாபிஷேகமும் செய்து வழிபாடாற்றி வந்து கொண்டிருந்தோம்.

நாட்டு நிலைமை மோசமாகப் பாதிக்கப்பட்டதால் அநேகமானோர் வயிரவரை விட்டுவிட்டு வெளியேற நேர்ந்தது பின்னர் படிப்படியாக அவரைப் பரிபாலித்து வர திருவருள் கூடி இன்று எல்லோரும் சென்று வழிபட வைத்த இறைவன் கருணையை என்னென்று செல்வது.

இன்று அவருக்குப் பெருவிழா! என்னால் இவ்விழாவில் பங்கேற்க முடியாவிட்டாலும் வைரவப் பெருமானும் அவரது சுற்றம் சூழலும் என் மனக் கண்ணுள்ளே தான் என்றும் இருக்கின்றன என்றால் மிகையாகாது. இக்கும்பாபிஷேகத்தை என்னைச் சேர்ந்தோர் திறம்பட நடாத்துவார்கள் என்று எண்ணிப் பெருமைப்படுகிறேன்.

மேலும் என் அன்பு வேண்டுகோளை ஏற்று எனக்குப்பின் இன்றுவரை பராமரித்துக் கொண்டிருக்கும் வேதவல்லிக்கும்



தலைவர். முத்துத்தம்பி குலசேகரம்பிள்ளை
தலம், தீர்த்தத்துடன்

கொடிய கால கட்டத்தில் வைரவப் பெருமானை ஆதரித்து கைவிடாமல் எண்ணெய் இல்லாத காலத்திலும் விளக்காவது எரிய வைத்த பரஞ்சோதி என்ற பரத்துக்கும் அந்த வேளைகளில் வைரவரை ஆதரித்த அன்புள்ளங்களுக்கும் எமது அன்பு கலந்த நன்றிகள். மற்றும் வைரவப் பெருமானுக்குத் தம்மாலான உதவிகள் ஒத்தாசைகள் புரிந்த சகலருக்கும் புலம் பெயர்ந்து வாழ்ந்தாலும் வைரவரை மறவாமல் தம்மாலான பண உதவியைச் செய்து கொண்டிருக்கும் அனைவருக்கும் நாம் என்றும் கடமைப்பட்டுள்ளோம்.

எனது பேரனார் தொடங்கிய இவ்வைரவ வழிபாடு இன்று எனது மகன் வரதராஜன் அவர் மகன் ரணா (பேரன்) வரை ஐந்தாவது தலைமுறையாக வழிவழியாக வந்து இன்று நாம் புலம் பெயர்ந்து கனடாவில் வசிப்பதால் என் மகனோ, பேரனோ பொறுப்பெடுக்க முடியாத நிலையில் உள்ளனர். ஆனால்எனது உறவுக்காரர் கோவிலை நன்கு பராமரிக்கக் கூடியவர்கள் தம்மாலான மட்டும் பராமரித்து வருவார்கள் என்ற நம்பிக்கையும் எனக்குள்ளது. எனவே வைரவப் பெருமான் தன்னை நம்பியவர்களை என்றென்றும் கைவிடமாட்டார். அவர் தம் பணி தொடர்ந்து கொண்டே இருக்க அவரிடம் வேண்டுகின்றேன்.

**சைவத்தின் மேல் சமயம் வேறில்லை அதில் சார் சிவமாம்**
**தெய்வத்தின் மேல் தெய்வம் இல்லெனும்**
**நான்மறை செம் பொருள் வாய்மை வைத்த சீர்**
**திருத் தேவாரமும் திருவாசகமும் உய்வைத்தரச் செய்த**
**நால்வர் பொற்றாள் எம்உயிர்த் துணையே!**

சைவத்தின் மேல்சமயம் வேறில்லை, இம்மானிடப்பிறவி எமக்கு வாய்த்ததே பிறவிப்பிணியை நீக்கி முத்தியின்பம்

பெறும் பொருட்டேயாம் என்றார் ஆறுமுகநாவலர். மற்றைய சமயங்களில் இக்கருத்து வெளிப்படவில்லை. எமது இந்து சமயத்தில் தான் நாம் ஏன் பிறவி எடுத்தோம் என்பது விளக்கமாகச் சொல்லப்பட்டிருக்கின்றது. அதாவது "சமயநெறி நின்று அதன் படி ஒழுகி மண்ணில் வாழ்வாங்கு வாழ்ந்து பிறவி வேண்டாம் என்று சலித்து முத்தியின்பத்தைத் தேடி, இறைவனை அடைந்துய்ய வேண்டும் என்பது தான் நாம் பிறவி எடுத்ததன் நோக்கம்" என்று சைவவினாவிடையில் கூறியிருக்கின்றார் நாவலர் பெருமான்.

எனவே! மேலாம் சமயமாம் சைவத்தில் நாம் பிறவி எடுத்தது ஏன் என்று விளங்கிக் கொள்ளாமல் நீர்க்குமிழி போல் தோன்றி மறையும் சிலநாள் இன்பதுன்பம் நிறைந்த வாழ்வுக் காகவும் அற்ப இன்பங்களுக்காகவும் நம்மை நாமே ஏமாற்றி இந்த உண்மையை மறந்து யோக சுவாமி கூறிய 'எப்பவோ முடிந்த காரியம்' என்பதையும் உணராமல் வாழ்கின்றோம். பிறப்பு ஒன்றிருந்தால் இறப்பும் உண்டு என்பது அனைவரும் அறிந்ததே. நம்மில் எத்தனை பேர் ஏன் பிறந்தோம், இவ்வாழ்வு தேவையா என்று சலித்துக் கொள்கின்றோம். பிறந்து நோய், நொடி, துன்பம், கவலை, முதுமை, இயலாமை, போட்டி, பொறாமை, வறுமை, இடம்பெயர்வு, எத்தனை எத்தனை சுமைகள் இவை அத்தனையும் சுமந்து வாழும் ஒரு வாழ்வு தேவை தானா என்று அங்கலாய்க்கின்றோம்.

காரைக்காலம்மையார் "பிறவாமை வேண்டும் மீண்டும் பிறப்பு உண்டேல் உன்னை என்றும் மறவாமை வேண்டும்" என்றார். பிறப்பே வேண்டாம் அப்படி நான் செய்த கர்மப் பயன் நிமித்தம் மீண்டும் பிறந்துவிட்டால் உன்னை என்று;ம் மறவாமலிருக்க வேண்டுமென்று ஏன் கேட்கின்றார். அவனை

அடைந்தால் தானே பிறவிப்பிணியை நீக்க முடியும். மாணிக்கவாசகர் தன் திருவாசகத்தில் எத்தனையோ பாடல்களில் இப்பிறவி என்னும் கொடிய நோயைப் பற்றிக்குறிப்பிட்டு வருந்துகின்றார். “பிறந்து பிறந்து தளர்ந்தேன் எம்பிரான் என்னைத் தாங்கிக் கொள்ளே” என்றும் “இன்னும் ஓரிடத்தில் இங்கு இவ்வாழ்வு ஆற்றகில்லேன்” என்றும் இறைவனை இரந்து அழுதழுது அவன் திருத்தாளடைந்தார். இப்படியாக எத்தனை நாயன்மார்கள், அருளாளர்கள். “அன்பருள்ளம் கரந்து நில்லாக் கள்வனே நின்தன் வார்கழல் கட்கன்பு எனக்கு நிரந்தரமாய் அருளாய்” என்று இரந்து அவன் தளிர் பொற்பாதம் அடைந்துள்ளார்கள்.

நாமும் சிறிதாவது பிறப்பின் உண்மைப் பொருளை உணர்ந்து வேறு சமயத்தில் பிறவாமால் மேலாம் சமயமாகிய ஆதியும் அந்தமும் இல்லாது தொட்டு வளர்ந்து வருகின்ற சமயமாம் இந்து சமயத்தில் பிறந்ததையிட்டு பெருமைப்பட்டு அதன்படி ஒழுகி மேன்மக்களின் வாழ்க்கை வரலாறுகளைப் படித்து மண்ணில் நல்ல வண்ணம் வாழ்ந்து ஏனையோருக்கும் வழிகாட்டியாகத் திகழ்ந்து மேனிலை அடைவோமாக!

எங்கள் குல தெய்வமாகிய வைரவப் பெருமானின் திருகுடமுழுக்குப் பெருவிழா சிறப்பாக நடைபெறவும் அதைத் தொடர்ந்து அவர் தம் பூசைகள் வழிபாடுகள் பொங்கல்கள் செவ்வனவே நடைபெற வேண்டுமென்று மனமார அவன் திருவடிகளை இறைஞ்சி வேண்டி நிற்கின்றேன்.

மு.குலசேகரம் பிள்ளை<br>ஆதி வைரவப்பெருமான்<br>ஆலய தலைவர்

# சங்கத்தார் கேணி
# ஆதி வைரவ ஆலய வரலாற்றுச் சிறப்பு

**தள்ளா விளையுளும் தக்காரும் தாழ்விலாச்**
**செல்வமும் சேர்வது நாடு.**

குறையாத விளை பொருட்களும், பெரியோர்களும், குறைவற்ற செல்வமும் ஒருங்கே பொருந்தியுள்ள நாடே நாடாகும் என்றார் வள்ளுவப் பெருந்தகை. இத்தகைய சிறப்புக்களைத் தன்னகத்தே கொண்டது தான் எமது வேலணை என்னும் ஊர். வேலை அணையாகக் கொண்டது தான் வேல் - அணை (வேலணை) வேலைத்தூக்கியாடும் சிற்பனை முருகன் பக்கத்தில் வீற்றிருக்க, கிழக்கில் முத்துமாரியம்மனும், மேற்கில் மாரியம்மனும் புடைசூழ நீர்வளம் குன்றாத சங்கத்தார் கேணியைத் தீர்த்தமாகவும், உயர்ந்து பரந்து சுற்றம் சூழலுக்கு நிழல் தந்து இதமான தென்றற் காற்றின் குளுகுளுப்பில் திகழும் அந்த அரசமரத்தைத் தலமாகவும் கொண்டு மூர்த்தியாக கோவில் கொண்டு அருள் பாலிப்பவர் தான் சங்கத்தார் கேணி ஆதிவைரவப் பெருமான். எனவே வேலணை மேற்கில் மூர்த்தி, தலம், தீர்த்தம் ஒருங்கே அமையப் பெற்ற திருத்தலமாக அமைந்து சிறப்பைப் பெற்றவர் தான் ஆதிவைரவப் பெருமான்.

இந்த அற்புதமான ஆனந்தமான இடத்தைவிட்டு நாட்டுப் பிரச்சினையால் புலம்பெயர்ந்து உலகெங்கும் பரந்து வாழும் ஊர் மக்களுக்கு வைரவப் பெருமான் குடிகொண்டிருக்கும் இச்சூழலை நினைக்கும் தோறும் மனத்துக்கு எவ்வளவு

இதமாக இருக்கும் என்பதை எண்ணிப் பார்க்கிறேன். அவர்களுக்கு இந்த இடம் தான் அந்த வேளை சொர்க்கமாகப்படும் என்றால் மிகையாகாது. ஊர் மக்களுக்கு மட்டுமல்ல பறவைகள், ஆடு, மாடுகள் போன்ற வாயில்லப் பிராணிகளுக்கும் இந்த இடம் இதம் தருவது என்றால் மிகையாகாது.

ஊரின் மத்தியில் வேலணை மகாவித்தியாலயமும் அமைந்து மேலும் சிறப்பைத் தந்தது. படித்த சைவப்பழக்கங்களையும், சைவர்களையும் கொண்டு திகழும் மக்கள் சமய நெறி நின்று சமயத்தை வளர்த்து மற்றவர்களுக்கும் வழிகாட்டியாகத் திகழ்ந்து வேலணை மேற்கைப் பெருமைப்படுத்தி வாழ்ந்தார்கள். சைவ ஒழுக்கத்தைப் பேணுபவர்கள் மட்டுமன்றி சிவபூசை செய்யும் சைவசீலர்களையும் உடையது இவர்களில் பலர் அர்ச்சகர்களாகவும் இருந்துள்ளனர். நாவலர் பெருமான் அடிச்சுவட்டையொற்றி கந்தப்பு வாத்தியார், ராசா வாத்தியார், பண்டிதை வேதநாயகி, பண்டிதர் நாகரத்தினம், தம்பு வாத்தியார் போன்றோர் ஊரின் உயர்வுக்கு வித்திட்டனர்.

வேலணை மேற்கு கல்வியால் சைவப்பண்பால் மட்டுமல்ல பொருளாதாரத்திலும், விவசாயத்திலும் பெருமை பெற்றது. கற்பகதருவென்று சொல்லும் பனை வளத்தையும் தன்னகத்தே அடக்கி மக்களுக்கு குறைவற்ற செல்வத்தை வழங்கியது. இவ்வூர் நெற்பயிர்ச் செய்கையை விட புகையிலை உற்பத்தி பண்ணும் காலமும் வந்ததும் இடையிடையே வயல்வெளிகளில் பச்சைக் கம்பளம் விரித்தது போல் தோற்றமளிப்பது கண்கொள்ளாக் காட்சியாக இருக்கும்.

வேலணை மேற்கு குடியிருப்புகளுக்கு ஊடாக கோயிலின் வடக்காக முருகன் வீதிக்கும், தெற்காக சங்கத்தார் கேணி வைரவர் வீதிக்கும் இடையே கோவில் கொண்டிருக்கும் வைரவப் பெருமானை நினைத்து வந்து போபவர் பலர். அத்தோடு ஆலயத்தின் *முன்னுள்ள குறுக்கு வீதியால் செல்பவர்கள் (முருகண்டிப்பிள்ளையார் போல்) நின்று வைரவப் பெருமான் சந்நிதியை வணங்காமல் செல்வதில்லை தினமும் விடிய நாலு மணிக்கு கோவிலை அண்டிய பகுதிகளைச் சுற்றி மணி ஓசை கேட்கும். வைரவர் அப்பகுதி மக்களின் பாதுகாப்புக்காகச் சுற்றி வந்து காவல் செய்கிறார் என்ற கருத்தும் அப்பகுதி மக்களிடம் நிலவி வந்தது. தன் மேல் நம்பிக்கை வைத்தவரைப் பாதுகாக்கும் கருணை அவரிடம் உண்டு என்பது அவ்வூர் மக்களின் அபிப்பிராயம்.

அதற்கு ஒரு சிறு சம்பவம். கோவில் அருகில் உள்ளதோட்டத்தில் கத்தரி நன்கு காய்த்திருந்தது. ஒருநாள் இரவு ஒருவன் அவற்றை ஆய்ந்து இரண்டு சாக்குகளில் நிரப்பி விட்டான். அத்தருணம் உரிமைக்காரர் நித்திரையில் இருந்த போது யாரோ பெயர் சொல்லி அழைத்து "கத்தரிக்காய் களவு போகிறது" என்ற குரல் கேட்டு உரியவர் ஓடிச்சென்ற போது களவெடுத்தவன் ஓடிவிட்டான். இருமூடை கத்தரிக்காய்களும் கிடைத்து விட்டன.

அத்துடன் வைரவசுவாமி நோய் தீர்க்கும் வைத்தியநாதனாகவும் இருந்தார். அவரின் வீபூதி, தீர்த்தம் இரண்டும் பிணியகற்றும் சக்தி வாய்ந்தவை. வைரவப் பெருமானின் முன்னிலையில் அடிக்கடி பொங்கல் நிகழும். அவை வேண்டுதல்

நிறைவேறிய பக்தர்களால் செய்யப்படும்

சித்திரை பௌர்ணமி வைரவரின் பெருவிழா. அரிவுவெட்டு, புகையிலைவெட்டு இரண்டையும் முடித்த பக்தர்கள் வைகாசிப் பௌர்ணமி அன்று ஆலயத்தில் வந்து நிறைவர். வயல்களில் விளைந்த பச்சை அரிசியும் தோட்டங்களில் விளைந்த மரக்கறிகளும் கூடை கூடையாக வரும் வைரவருக்கென நேர்ந்து விடப்பட்ட பூசணிக்காய்கள், மரக்கறிகள், தேங்காய்கள், ஏராளம் ஏராளம். கிடாரங்களில் கஞ்சி நிறைந்து வழியும் ஆலயத்தின் தென் பகுதி பனை வளம் நிறைந்து. அவற்றின் அகன்ற பச்சை ஓலைகளில் கஞ்சி பெறுவதற்கு பிளாக்கன் முதியவர்களால் கோலப்படும். அதிலும் பெரியவனவற்றைப் பெறுவதில் சிறியவர்கள் போட்டியிடுவது கண் கொள்ளாக் காட்சி.

அடுத்து வருவது விசாகப் பொங்கல். தமது வயல்களில் விளைந்த (நெல்) அரிசியில் பொங்கல் நீண்ட வரிசையில் வைரவர் முன்னிலையில் நடைபெறும். பலாப்பழம், வாழைப்பழம் பெரிதாகவே இருக்கும். புகையிலை நடத்தொடங்கும் போதே நேர்த்தி வைத்து விடுவர். நல்ல விளைச்சல் எனில் பொங்கல் படையல் பெரிதாக மகிழ்ச்சிகரமான போட்டியும் நிலவும். கோயிலின் தெற்கு கிழக்கு பகுதி மக்களும் வந்து இந்நிகழ்ச்சியில் பங்கேற்பர்.

இற்றைக்கு ஐந்து தலைமுறைகளுக்கு முன் சின்னத்தம்பி என்பவரால் ஒரு சிறு கொட்டிலில் வைரவப்பெருமானை வைத்து அவரும் அவரைச் சேர்ந்தவர்களும் வழிபட்டு

வந்தனர். அவரைத் தொடர்ந்து அவர் பிள்ளைகளான வைத்தியலிங்கம், முத்துத்தம்பி, நாகலிங்கம், கந்தையா ஆகியோர் தந்தை வழிநின்று கோவிலைத் திறம்பட நடாத்தி வந்தனர். அதன்பின் முத்துத்தம்பி பொறுப்பில் வந்த நிர்வாகம் அவருக்குப் பின் குலசேகரம்பிள்ளை சிறுவனாக இருந்தபடியால் இளையதம்பி என்பவர் பொறுப்பேற்று நிர்வகித்து வந்தார். அவரைத் தொட்டு தருமம்மான் என்று எல்லோராலும் அழைக்கப்படுபவர் ஊருக்குப் பெருமகனாகவும் திகழ்ந்தவர் (தருமலிங்கம்) அவர் நிர்வாகத்தை முறைப்படி நடாத்தி வந்தார். அவருக்குப் பின் குலசேகரம்பிள்ளை பொறுப்பேற்று தன்னாலான மட்டும் நல்ல முறையில் ஊர் மக்களுக்கு உதவிபுரிந்தும் நல்ல சேவைகள் செய்தும் தன் பணிகளை செய்து கொண்டிருந்தார். அவருக்கு செல்லம்மா கந்தசாமியும் உறுதுணையாக இருந்தா. அந்த வேளை மைத்துனர் நடராஜா மாஸ்ரரின் உறுதுணையும் அவருக்குச் கிட்டியது. பூரணக்காவும் பார்வை குறைந்த போதிலும் வைரவருக்கு விளக்கேற்றத் தவறுவதில்லை

இந்த நிலையில் 1983ம் ஆண்டு சிறப்பாக தம்பி கைலாயபிள்ளை, திருநீலகண்டன், ஆகியோரின் துணையுடனும் ஊரவரின் விடாமுயற்சியின் விளைவாகவும் கும்பாபிஷேகத்தையும் சிறப்புற நடாத்தி கிருபானந்த வாரியாரையும் அழைத்து அவரின் காலடியும் பதிக்க வைத்துப் பெருமை பெறச் செய்தார்.

அதனைத் தொடர்ந்து ஒழுங்காக பூசைகள் பொங்கல்கள் என்று நடைபெற்றுக் கொண்டிருக்கும் வேளையில் நாட்டுப்

பிரச்சனை தொடங்கிகட்டுக்கடங்காமல் போகவே வைரவரைத் தனியே விட்டு வெளியேற வேண்டிய நிலை அவருக்கும் ஊர் மக்களுக்கும் ஏற்பட்டது. பூசையும் இல்லை விளக்கு வைப்பதற்கு யாருமில்லாத நிலைகூட வந்து விட்டது. அந்த நேரம் நான்கு குடும்பங்களே கோயிலின் அயலில் இருந்தார்கள். பரம் குடும்பம், சகலன் குடும்பம், மயில்வாகனம் கமலாம்பிகை (கண்ணாடியம்மா) ஆகியோர். வேலணை கிழக்கை சேர்ந்த நித்தியானந்தன் கோயிலை கழுவி சுத்தம் செய்தவர். பரமும் கண்ணாடியம்மாவுந்தான் வைரவருக்கு வேண்டிய தொண்டுகள் பூ வைத்தல் விளக்கு வைத்தல் எண்ணெய் தொடக்கம் எந்த உணவுப்பொருட்களும் கிடைக்காத காலம் செய்து வந்தனர். மேற்படி நான்கு குடும்பங்களின் தொண்டும் அவர்களின் பூர்வ புண்ணிய பலனாகும். அவர்களுக்கு வைரவரின் பரிபூரண கடாட்சம் கிட்டுவது திண்ணம்.

வைரவசுவாமியின் தனது பணியைத் தொடர்ந்தவர் ஆயுர்வேதிய வைத்தியர் திரு.பரம் (பரஞ்சோதி) அவர்கள். அவர் வைரவ பக்தர் நாரந்தனையில் உயர் குடும்பமான தபாலதிபர் திரு.அம்பிகாபதி உடையார் மகன். அந்த நேரம் அவர் தொழில் இல்லை, கையில் பணம் இல்லை, ஆனால் கஷ்டமான குடும்ப நிலையை எண்ணாமல் வீட்டைக் கவனியாமல் ஞான வைரவரின் பணியில் ஈடுபட்டார். யாரோ ஒருவர் எனக்கு கூறினார் "பரம் முழங்கால் மேலுள்ள வெள்ளத்தில் இருட்டு வேளையில்1/4 போத்தல் தேங்காயெண்ணையுடன் போனார்" என்று எனக்கு மெய்சிலிர்த்தது. ஞான பைரவரின் சூலம் நூற்றாண்டு பழமையானது ஒளியுடையது ஆலயத்தில் தங்கிய விஷமிகளால் மூலஸ்தானத்தில் இருந்து பிடுங்கி உடைத்து

முன்னுள்ள குளத்தில் எறியப்பட்டு விட்டது. குளம் வற்றிய பின்பே அதன் உண்மை தெரிந்தது.

இவ்விடயம் திரு.பரஞ்சோதி அவர்களுக்குக் கவலையளித்தது. சிலமாதம் கழிந்தன. வேலணை ம.ம.வி வித்தியாலயத்தில் சிவகாமி அம்மை சமேத நடராசப்பெருமான் கல்லூரி இயங்காமையால் அவரும் கவனிப்பாரற்று இருந்தார். கல்லூரி ஆரம்பமாகவும் பிராயச்சித்த அபிஷேகம் செய்ய வேண்டும். உதவிக்கு நான் பரத்தை அழைத்தேன். ஆலயத்தில் வரிசையாக சுவாமி படங்கள், சிலைகள் அடுக்கப்பட்டிருந்தன. யாரோ ஏனைய மதங்களையும் தெய்வங்களையும் மதிப்பவரும் பக்திமான்களும் அங்கு இருந்திருக்கிறார்கள் போலும். அவற்றுள் இருந்த வைரவசுவாமியின் சூலம் வைத்தியர் பரஞ்சோதியின் கண்ணில் பட்டுவிட்டது. அவருக்குப் பெருமகிழ்ச்சி அபிஷேகம் முடிந்து எல்லோரும் அகலும் வேளை என்னைக் கேட்டார். "எடுத்துச் செல்லவா" என்று ஆம் என்றேன். பின் ஆளைக் காணவில்லை - வைரவசூலத்துடன் பிள்ளையை இடுப்பில் வைத்து தாய் சேயைக் கொண்டு செல்வது போல் சென்றுவிட்டார். இன்று எமக்கு அருள்பாலிப்பவர் அவரே. அந்த சூலம் முறைப்படி கிரியைகளுடன் மூலஸ்தானத்தில் பிரதிஸ்ட்டை செய்யப்பட்டுள்ளது. உடைந்த வைரவ சூலம் பாஸ்கரன் ஆசாரியால் ஓட்டி எழுந்தருளி வைரவருடன் வைக்கப்பட்டுள்ளது. பரஞ்சோதியின் பக்தியின் மகிமையை என்னென்று சொல்வது!

இதேவேளை இன்னொரு அதிசயத்தையும் சொல்ல வேண்டும் வைகாசிப் பொங்கல் திறம்பட நடந்து கொண்டிருந்த வேளை,

நாட்டின் நிலைமை காரணமாக அவருக்குரிய பொங்கல் தடைப்பட்டுவிட்டது. இதனால் வேதனைப்பட்டவர் பலர். அவருள் ஒருவராகிய இந்திராவின் கனாவில் அவர் அடிக்கடி வரத்தொடங்கிவிட்டார். வயிரவரின் பொங்கல் தடைப்பட்டதால் தான் இப்படி வைரவர் இங்கு வந்து கொண்டிருக்கிறார் என்று வியந்து அன்று தொட்டு அதாவது 1996 தொடக்கம் இன்று வரை வடை, வெள்ரொட்டி, முறுக்கு, பழங்கள் போன்றவற்றுடன் ஜிந்துப்பிட்டி முருகன் கோவிலுக்கு எதிராக இருக்கும். சிவராஜ விநாயகர் ஆலயத்தில் தனியாக அமர்ந்திருக்கும் வைரவப் பெருமான் முன்னிலையில் பொங்கிப் படைத்து அங்குள்ளவர்களுக்கும் பரிமாறி மகிழ்வார்கள். வைரவர் கொழும்பு சென்று தன் பங்கைப் பெற்றிருக்கின்றார் என்பதும் தன் அடியவரை எவ்வாறு தன் அடியின் கீழ் வைத்து பக்கத் துணையாக உள்ளார் என்பதும் இதிலிருந்து புலனாகிறது.

இதற்குள் இன்னுமொரு விசயத்தையும் நான் குறிப்பிட வேண்டும். தலைவர் குலசேகரம் பிள்ளை இரண்டு வருடத்திற்கு முன் தன் வைரவர் வெள்ளத்துக்குள் இருக்கிறார் என்று சொல்லிப் புலம்பியிருக்கிறார். இதே நேரம் அவரின் மருமகள் இந்திரா கொழும்பிலிருந்து ஊருக்குப் போய் குளம் நிறைந்து காணப்படும் காட்சியையும் வைரவப் பெருமான் கோவிலையும் படம் எடுத்துக் கொண்டு இரண்டு, மூன்று நாட்களுக்கு முன் திரும்பியிருந்தார். இதே நேரம் கனடாவில் அவரின் மகன் வரதராஜன் இதைக் சொன்ன போது "வைரவரின் குளம் நிறைந்து காணப்படுகின்றது. ஆனால் வைரவர் வெள்ளத்துள் இல்லை" என்று பதிலளித்தார். எனவே வைரவபெருமான்

வேலணை மேற்கு சங்கத்தார் கேணியடியில் நிலை கொண்டிருந்தாலும் அவரை நினைந்து வணங்கிய அனைவரின் உள்ளத்திலும் உள்ளார் என்பது புலனாகின்றது. இவ்வாறாக எத்தனையோ அதிசயங்கள் நிகழ்ந்திருக்கலாம். தெரிந்தவற்றை குறிப்பிட்டுள்ளேன்.

படிப்படியாக ஊருக்கு போகக் கூடியதான நிலைவந்ததும் அவரைத் தரிசித்து பேறுபெற்றவர்கள் ஊர் சென்று வைரவரை வணங்கி எண்ணெய் குறையாமல் பார்த்து சிறிய அளவில் கும்பாபிஷேகத்தையும் நடாத்தி படிப்படியாக மீண்டும் வைரவரின் பூஜை, பொங்கல் போன்றவைகள் களைகட்டத் தொடங்கிவிட்டன. அதைத் தொடர்ந்து புலம் பெயர்ந்து வாழ்பவர்களின் உதவியுடனும் இங்குள்ளவர்களின் உதவியுடனும் இக் கும்பாபிஷேகத்தை நடாத்த இறைவன் திருவருள் கூடியுள்ளது.

வைரவருக்கு தம்மாலான மட்டும் உதவிபுரிந்தவர்கள். பலனடைந்தவர்களை கூடிய மட்டும் நினைவு கூர வேண்டும். இளையதம்பி கைலாய பிள்ளையின் தொண்டை மறக்க முடியாது. பேரம்பலம் குடும்பம், அருணகிரி, சகோதரர்கள், மற்றும் தியாகராஜா மகன் நாதன் உட்பட அனைவரும், மற்றும், அருட்செல்வம், போன்றோர், வைரவப் பெருமானை ஆதரித்து வழிபட்டு பேறுபெற்றனர். அருளின்பநாதன் இன்று வரை மின்சாரக் கட்டணத்தைச் செலுத்திய வருகின்றார். மற்றும் ராசசெல்வம், உலோகநாதன், சிவமணி, சிவலிங்கம் ஆகியோரும் வைரவரின் நெருங்கிய அடியவர்களே, அவர்களையும் நினைவுகூரக் கடமைப்பட்டுள்ளோம்.

அக்கம்பக்கத்தில் உள்ளவர்களும் அதனை அடுத்து தொலைவில் உள்ளவர்கள் என்று வைரவரைக் கவனித்து அவரால் சிறப்படைந்த அனைவருக்கும் நாம் நன்றிக்கடன் பட்டிருக்கிறோம். கோயிலை அண்டியுள்ளவர்கள் அவரால் பேறுபெற்றவர்கள் வைரவப் பெருமானை மறவாது உதவியவர்கள், அன்பு கொண்டவர்கள் அனைவரையும் தனித்தனியாக நினைவுகூற முடியாமைக்கு வருந்துகின்றோம். அனைவருக்கும் எம்நன்றி என்றும் உள்ளது.

தற்போதைய அறங்காவலரான திரு. முத்துத்தம்பி குலசேகரம் பிள்ளை அவர்கள் நினைத்ததைச் செய்து முடிப்பவர் தந்தையார் ஆதரித்த ஆலயத்தை நன்னிலையில் வைக்க வேண்டும் என்ற ஆர்வம் உடையவர். வைரவர் வீதிக்கும், முருகன் வீதிக்கும் இடையே வயல்கள் இருந்தன. வைரவர் வீதியில் இருந்து முருகன் வீதியை இணத்தால் போக்குவரவு இலகு இல்லாவிட்டால் மக்கள் நீண்ட தூரம் பயணிக்க வேண்டும். இதனால் இவர் தன் சுயமுயற்சியாலும் பணச் செலவும் இன்றி வைரவரின் முன்றலின் முன்னால் வீதியமைத்து விட்டார். அந்த நாட்களில் இது ஒருவராலும் முடியாத விடயம். போக்குவரவும் இலகுவாகி விட்டது. திருமுருக கிருபானந்த வாரியார் 1983ல் கொழும்பு வந்த போது அவரை ஞான வைரவரின் கும்பாபிஷேகத்துக்கு அழைத்து அவரின் சொற்பொழிவாற்றவைத்து எமது வேலணை மண்ணைப் புனிதமாக்கியவர். இவரது சிந்தனை செயல் முழுதும் ஞான வைரவரைப் பற்றியே இருந்தது. இவர் தான் யாழை விட்டு மகனிடம் கனடா செல்ல ஆயத்தமான போது கோயிலின் தனது பொறுப்புகளை என்னிடம்

ஒப்படைத்துவிட்டாலும் தேவையான வசதிகளைச் செய்து கொண்டார்.அவரிடம் ஆட்பலமோ, பொருட்பலமோ இல்லாவிட்டாலும்இல்லாவிட்டாலும் தனியொருவனாக நின்று எதையும் வெற்றிகரமாக சாதித்து விடுவார். திரு.குலசேகரத்தின் மகன் தந்தையைப் போலன்றி எதையும் அமைதியாக இருந்து சாதித்து விடுவார். அவரிடம் பதவி, புகழ் ஆசை இல்லை. "வைரவ சுவாமி தான் முதலாளி எல்லோரும் கோயிலுக்கு உரித்துடையவர்" என்று கூறுவார். பிள்ளைகள், பெற்றோரை வயோதிகர் வீடுகளில் தள்ளி கிழமைக்கொரு முறை காணும் காலம் இது. ஆனால் வரதராசனோ தந்தையைக் கண்ணும் கருத்துமாகப் பராமரித்து வருகிறார்.

ஆலயத்தோடு பந்தம் இல்லாவிட்டாலும் அதில் அக்கறையுடைய ஒருவர் வே.திருநீலகண்டன் அவர்கள் 1982ம் ஆண்டு நடந்த குடமுழுக்கு அன்று திரு.முருக கிருபானந்த வாரியை அழைத்து எமது மண்ணைப் புனிதமாக்கியவர். அவரது மனைவி திருமதி. இந்திரா அவர்களும் கொழும்பில் இருந்தாலும் தமது உரிமையை மறவாது பல உதவிகள் செய்பவர் இன்று நடக்கும் கும்பாபிஷேகத்தில் அவர்கள் செய்யும் உதவிகள் பல அவரது ஆலோசனையும் பங்களிப்பும் மகத்தானது.

அவரின் மருமகன் இந்திரலிங்கத்தையும் குறிப்பிட வேண்டும். அவர் லண்டனில் இருந்து மாமனாரின் விருப்பங்களை இனிதே நிறைவேற்றுகிறார். கோயிலுக்குரிய செலவுகளுக்கு கோயிலைச் சேர்ந்த சகலரிடமும் நிதி சேகரித்து அனுப்புவது தொடக்கம

வைரவருக்குரிய விரதங்களில் மிகவும் ஈடுபாடுடையவராகவும் இருக்கிறார். மாமனாருக்கு 92 வயது வந்து விட்டபடியால் அவர் இருக்கும் போதே இந்தக் கும்பாபிஷேகத்தை நடத்திவிட வேண்டுமென்பது அவரது பேரவா. அவரால் தான் இந்த கும்பாபிஷேகம் நடைபெறுகின்றது என்றால் மிகையாகாது எல்லாப் பொறுப்பையும் என்னிடம் ஒப்படைத்துத் திறம்பட ஆற்றும்படி கூறியிருக்கிறார்.

வேலணை மேற்கில் நாம் கண்டது மக்களிடையே உள்ள உறவின் நெருக்கம். இங்கு தொழில் பிரிக்கப்பட்ட போதும் வசதிவாய்ப்பால் ஏற்றத் தாழ்வு இருந்தாலும் மக்கள் எல்லோரும் உறவின் முறைகளாலும் அன்பாலும் பிணைக்கப்பட்டிருந்தார்கள் என்றால் அது மிகையில்லை. அதுவே வேலணை மேற்கின் பலமாகும்.

வைரவப் பெருமானின் திருக்குடமுழுக்கு விழா வெகு சிறப்பாக நடக்கவும் தொடர்ந்து அவர் தம் பூஜைகள், பொங்கல் போன்றவை திறம்பட நடைபெறவும் ஞான வைரவப் பெருமானை வேண்டி அவர் பொற்பாதம் வணங்கி அவர் பணியைத் தொடர விழைகின்றேன்.

வேதவல்லி அரசரட்ணம்

**வான்முகில் வழாது பெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்**
**கோன்முறை யரசுசெய்க குறைவிலா துயிர்கள் வாழ்க**
**நான்மறை யறங்க ளோங்க நற்றவம் வேள்விமல்க**
**மேன்மைகொள் சைவநீதி விளங்குக வுலகமெலாம்**

உ

# வாழ்த்துரை

மருத நிலம் சூழ்ந்த இயற்கை அழகு நிறைந்த சைவக் கிராமம் வேலணை இவ்வூரின் மேற்கில் நீரின் சுவையாகவும் சூரியனின் ஜோதியாகவும் வானின் ஓசையாகவும் மண்ணின் நறுமணமாகவும் தீயின் சுடராகவும் உயிர்களுக்கு உயிர்ப்பாகவும் உறைந்திருப்பவர் ஞான வைரவர். வேலணை மேற்கு கரையில் தும்பளைப் பிட்டியில் சங்கத்தார் கேணியின் மேற்குக் கரையில் அமர்ந்து, அருள் பாலிப்பவர் ஞானவைரவர். வைரவர் தன் சக்தி அனைத்தையும் கர்ப்பக்கிரகத்தில் தேக்கி வைத்திருக்கிறார். வேண்டுவார் வேண்டுவதை பெருமாளிடம் பெற்றுக் கொள்ள முடியும். வேலணை மக்களின் இந்த அசையாத நம்பிக்கையே இன்று மீண்டும் ஆலயம் புது மெருகுடன் அடியார் குறைதீர்க்கும் அருளின் ஊற்றாக உருவாகி உள்ளது.

வேலணை மண்ணில் ஐந்து தலைமுறைக்கும் மேலாக மக்களின் பக்தி சின்னமாகவும் பண்பாட்டுக் கோலமாகவும் ஒற்றுமை உணர்வின் ஊற்றாகவும் விளங்கி வருபவர் பெருமாள். தை மாதம் நெல் அறுவடையின் போது பொங்கல், வைரவர் மடை. சித்திரையில் சித்திரைக் கஞ்சி வேலணை கிழக்கு பெருங்குள அம்மன் வேட்டைத் திருவிழாவின் போது அம்மனின் வருகை, சிற்பனை முருகன் கோவில் திருவிழாவின் வேட்டைக்காக வரும் முருகனின் வருகை இவை வேலணை மக்களை ஒன்று திரட்டி குதூகலிக்கச் செய்து மகிழ வைக்கும். இத்திருநாட்களில் வெளியூரில் தொழில் பார்ப்பவர்கள் கூட எல்லாவற்றையும் மறந்து ஒன்று கூடி வைரவர் சந்நிதியில் ஓர் அழகிய

கிராமத்தின் அழகு அனைத்தையும் வெளிப்படுத்தி நிற்பவர் வைரவர். எனது சிறு வயது அனுபவங்கள் பலவற்றில் நீங்காத நினைவுகளுடன் ஒன்றியிருப்பது வைரவர் ஆலயமும் சூழ இருந்த சுனையும், ஆலமரமும், அரசமரமும், அதில் வீசி வரும் மெல்லிய தென்றலும் ஆகும். மாரிகாலத்தில் அவரது சுனையில் நீர் வழிந்தோட அரசமரக் கிளையில் அமர்ந்து மெய்மறந்த நாட்கள் பல. அறிவு வள்ளல் திரு. கிருபானந்த வாரியார் ஒருமுறை ஆலயத்திற்கு வருகை தந்த போது வைரவர் அமர்ந்து அருள்பாலித்த சூழலைப் பார்த்து மெய்மறந்து இவ்வூர் மக்களிற்கு வைரவர் தந்திருக்கும் அருட்கொடை இவ் ஆலயம் எனவும் மக்கள் பெரும் பாக்கியம் செய்தவர்கள் எனவும் கூறி வாழ்த்தியதை என்றும் மறக்க முடியாது.

தைத்திங்கள் இருபத்திநான்காம் திகதி (6.2.2014) நடைபெற இருக்கும் குடமுழுக்கு திருவிழா இறைவன் திருவருளால் சிறப்புற குறைவின்றி நடைபெற்று அவர் அருளை நாம் எல்லாம் பெற்று மகிழ இறைவன் அருளை வேண்டி நிற்கின்றோம்

இவ்வண்ணம்

அன்புடன்

அருணகிரி சிறிசெல்வம்

உதவிப் பொலிஸ் அத்தியட்சகர்

(வவுனியா)

உ

# செல்லம்மா கந்தசுவாமி வாழ்வில் வைரவர்



என் அப்பனே வைரவா என்று எந்தவேளையும் வைரவரையே தியானித்து அவர் பணியை அண்ணன் குலசேகரம்பிள்ளையுடன் சேர்ந்து தன்னாலானமட்டும் செய்து நிறைவுகண்டவர். வைரவர் விஷயத்தில் இருவருக்குமிடையில் (அண்ணன் - தங்கை)வாக்கு வாதமும் வந்து நல்லபடியாக நடந்தேறும். வைரவரின் சகல தேவைகளையும் அயலில் இருந்தமையால் கலனித்து வந்தவர். பூஜைகளோ, பொங்கலோ, என்ன நடந்தாலும் முன்னின்று கவனித்து வந்தார். அண்ணன் தலைவராக இருந்தாலும் வைரவரின் முழுத்தேவைகளையும் இவரே கவனித்து வந்தார் என்றால் மிகையாகாது.

1976ம் ஆண்டு இருவருக்குமாகச் சேர்ந்து வைரவகோவிலை நல்ல முறையில் கட்ட வேண்டுமென்று ஆசையில் உடைத்து கட்ட தொடங்கி ஒருவாராக கட்டி முடித்து 82ல் கும்பாபிஷேகத்தையும் சிறப்பாக நடாத்த உதவியதில் இவரின் பங்கு மகத்தானது. இவருக்கு உதவியாக அயலில் வசித்து கைலாய பிள்ளையும் தன்னலான பணிகளைச் செய்து பேறுபெற்றார்.

பாதகஞ் செய்தோர்க் கெல்லாம்
பரிவினால் றண்ட மாற்றித்
தோதக பாவ நீக்கித்
துகளறும் புனிதராக்கி
மேதகு முத்தி சேர்க்கு
போதக முடைய கால — மெய்யன் முத்தலைச் சூற்கையன்
வயிரவன் பொற்றாள் போற்றி.

உ

# நன்றி மறப்பது நன்றன்று

அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்
ஆலயம் தொழுவது சாலவும் நன்று -

இந்நன்நெறிக் கிணங்க ஆலய வழிபாடு பண்டுதொட்டு இன்றுவரை இந்து சமயத்தவர்கள் உலகெங்கணும் வாழ்ந்தாலும் ஆலயங்கள் அமைத்து வழிபாடு செய்து கொண்டு இருக்கின்றார்கள். இவ்வகையில் திருமுருக கிருபானந்த வாரியார் சொற்பொழிவு இடம் பெற்ற திருத்தலமான வேலணை மேற்கூரில் அமைந்துள்ள சங்கத்தார் கேணி வைரவர் ஆலயத்தை இரண்டாவது தடவையாக குடமுழுக்கு நிகழ்த்துவதற்குப் பங்களிப்பை நல்குவதற்கு வழிகாட்டிய வைரவப் பெருமானுக்கு என் முதற்கண் வணக்கம்

என்னை இறைபணியில் ஈடுபடவைத்த இளைப்பாறிய ஆசிரியையும், பட்டதாரியுமாகிய திருமதி. வேதவல்லி அரசரெத்தினம் அவர்களுக்கும் எனது நன்றியை தெரிவித்துக் கொள்கின்றேன். குடமுழுக்கு திருவிழாவுக்கு பண உதவி நல்கிய திருவாளர்கள் வி.யோகநாதன், வே.தவநேசன், சதா அருட்சிவம், ஆனந்தன், அ.விஜயன், மு.சு.மனோகரலிங்கம், ஸ்ரீதரன் மு.கந்தசாமி (மன்னாதி) திருமதி.ம.துரைசிங்கம் பிள்ளைகளும் - அனைவரது குடும்பத்தாருக்கும் வைரவபெருமான் அருள் கிடைக்க வேண்டுகிறேன். ''கோயிலுக்கு முதலாளி எவரும் இல்லை எல்லோரும் தொண்டர்களே'' என்று திரு.குலசேகரம்பிள்ளை வரதராஜன் சொல்லுவார். எல்லோரும் தொண்டர்களாக இருப்போம் ஊர் சிறக்க. கல்வி, செல்வம், தழைத்தோங்க இறைவனை பிரார்த்திப்போமாக! ஒன்று பட்டால் உண்டு வாழ்வு இம்மலருக்கு எனது சிறிய உள்ளக்கிடக்கையை எழுத வாய்ப்பு தந்த திரு.திருமதி. வே.திருநீலகண்டன் அவர்களுக்கு எனது நன்றி. மேன்மை கொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்

இவ்வண்ணம்
அன்புடன்
சோமசுந்தரம் இந்திரலிங்கம்

# வைரவப் பெருமானே!

அடர்ந்த நெல் வயல் தொடர்ந்த வான் மழை
கடந்து உயர்ந்த நெற்கதிராடிக்
கிடந்த சுற்றமும் மறந்த குற்றமும்
திறந்த முற்றமும் எனப் பாடிப்
படர்ந்த கொடி பட நடந்த காலடி
தொடர்ந்த சுவடுகள் பல மாறிப்
பிரிந்த போதிலும் சரிந்திடா தருள்
சொரிந்த வைரவப் பெருமானே!

மறைந்த அருள் மொழி சிறந்த வாரியார்
திறந்த மடையெனச் சொல்லாற்றப்
பிறந்த மண்ணது நிறைந்த வளமெனச்
சிறந்த வேலணை மேற்கூரில்
குறைந்த தெனஒரு குறையு மிலாதிருக்
குளமும் கொண்டொரு கரையேறி
நிறைந்த அருளொடும் துறந்த உருவொடும்
உறைந்த வைரவப் பெருமானே!

புலர்ந்த காலையில் மலர்ந்த வேளையில்
அலம்பிக் குடமதில் புனலாடித்
தளர்ந்த எம்மவர் வளர்ந்த பூமியைக்
கிளர்ந்து காத்திட வர வேணும்!
குலைந்த தலைமுறை இணைந்து செயல்பட
கலைந்த கனவுகள் நிறைவேற
சலங்கை கால்களில் முழங்கக் காத்திடும்
இலங்கை தேசத்துப் பெருமானே!

அ.ஹரிசன்

உ
சிவமயம்

# சைவத்தின் சிறப்பு

திகட சக்கரச் செம்முக மைந்துளான்
சகட சக்கரத் தாமரை நாயகன்
அகட சக்கர விண்மணி யாவுறை
விகட சக்கரன் மெய்ப்பதம் போற்றுவாம்

சைவம் சிவனை முழுமுதற் கடவுளாகக் கொண்ட சமயம் அது எப்பொழுது தோன்றியது, எவரால் தோற்றுவிக்கப்பட்டது என்று கூற முடியாத வரலாற்றுப் பழமை வாய்ந்தது.

சைவ சமயம் ஆரியர் வருகையோடு வேத காலத்திற்றான் தோன்றியதென்று முன்பு கருதப்பட்டது. ஆனால் இந்த நூற்றாண்டில் நடைபெற்ற சில அகழ்வாராய்ச்சிகளின், பயனாக சைவசமயமும் சில வழிபாடும் வேத காலத்திற்கு முற்பட்ட வரலாற்றுப் பெருமை கொண்டதென்பது நிரூபணமாகியது. மொகெஞ்சதாரோ - கரப்பா அகழ்வாராய்ச்சிகளிலிருந்து, ஆரியர் வருகைக்கு முன்பே ஒரு நாகரிகம் இந்தியத் துணைக் கண்டத்திலிருந்ததென்பதற்கும், அது திராவிட நாகரிகம் என்பதற்கும் சான்றுகள் கிடைத்தன. இதன் அடிப்படையில் ஜி.யு.போப் என்ற மேனாட்டறிஞர் கூறுவது குறிப்பிடத்தக்கது.

ஆரியர் வருகைக்கு முன்பே தென்னிந்தியாவில்
நிலவிய வரலாற்றுக்கு முற்பட்ட சமயமே சைவம்

திருமுறைகளும் சைவசித்தாந்த நூல்களும் சைவத்தில் முக்கிய இடம் பெறுகின்றன. இந்நூல்கள் காட்டும் சைவநெறியில் செல்வது சைவர்களின் இன்றியமையாத கடனாகும்.

சைவத்தில் நாம் வணங்கும் தெய்வங்களான பிள்ளையார், சிவன், அம்மன், முருகன், வைரவர் வழிபாடுகளுள் வைரவ வழிபாடு யாழ்மாவட்டத்தில் அனேகர் மத்தியில் நிலை கொண்டிருந்தாலும் வைரவப் பெருமானின் மகிமைகள் வழிபடும் முறைகள் அவர் பற்றிய பாக்கள் நம்மில் அனேகருக்கு தெரிந்தில. எனவே இந்த வைரவப் பிரசாதம் மூலம் ஓரளவுக்கு வைரவர் பற்றிய விடயங்களை உட்புகுத்தி இருக்கிறோம்.

# வைரவரின் மகிமை

வைரவக் கடவுளை பல நாமங்களால் அழைப்பார்கள். சூடாமணி நிகண்டு:-

"முத்தனே குமரன் பிள்ளை
மூடுவல் வெம் படையோன் காரி
சித்தன் கேத்திரபாலன் னே
செந்தொடைக்குரிய கோமான்
வித்தகன் ஞாளியூர்தி
விறற் கருங்கு திரையாளி
வைத்த சீர்வடுக னின்ன
வைரவ நாமமே"

முத்தன், குமரன், பிள்ளை, முடுவற் படையோன், காரி, சித்தன், கேத்திர பாலன், செந்தொடைக்குரிய கோமான், வித்தகன், ஞாளியூர்தி, கருங்குதிரையாளி, வடுகன் இப்பெயர்கள் காரணங் கொண்டும் இயல்பாகவும் வந்தன. இயன்றளவு காரணங் கண்டெழுதியுள்ளேன். இவைகளை விட

அபிதான சிந்தாமணியில்:-

கண்டாவைரவர், உன்மத்தவைரவர், கபாலவைரவர், விபூஷண வைரவர், மார்த்தாண்ட வைரவர், சுதந்திர வைரவர், சுவேச்சர வைரவர், உலோகவைரவர், உக்கிர வைரவர், பிரச்சயனவைரவர், நிர்வாண வயிரவர், பூஷண வைரவர் என்று கூறப்பட்டிருக்கிறது.

நம் பெரியோர்கள் திகாலவைரவர், மஹாவயிரவர், க்ஷேத்திரபாலர், பிரும்ம சிரஸ்சேதமூர்த்தி என்று பலவாறு கூறுவர். வடுகதேவர், சட்டநாதர், நரசிம்ம வைரவர் என்பன தமிழ் நூல்களால் எடுத்தாளப்படும் பெயர்களாகும்.

## புராணங்களில் கூறப்பட்டுள்ள வைரவ மூர்த்தங்கள்:-

**மஹாவயிரவர்:-**

ஒளி பொருந்திய உக்கிரமும், எண்கரங்களில் சர்ப்பம், டமருகம், அங்குசம், கட்கம், அமிர்தம், கபாலம், வரம், அபயம் ஆகியவற்றைத் தாங்கியும் உள்ளவர். மரகதம் போன்ற நிறமுடையவர், சந்திரனைச் சிரசில் கொண்டவர், ஜடாமுடியும், மூன்று கண்களுமுடையவர் என்று சிற்ப சாஸ்திர நூல்கள் கூறுகின்றன. இவரது வாகனம் சுவானம் (நாய்): ஆயுதம் சூலம்.

**காலவைரவர்:**

கபாலத்தைக் கையில் ஏந்தியவர், காதுகளில் அழகிய குண்டலங்களைத் தரித்திருப்பவர், கையில் தண்டம் இருக்கும். கருமை நிறமுடையவர், சர்ப்பத்தைப் பூணூலாகக் கொண்டவர். போர்க் கோலக் காட்சியால் இடையூறுகளை மாய்த்த தன் பக்தர்களுக்கு இன்பமளிப்பவர்.

**உக்கிர வைரவர்:**

காண்போரை மிளிரச் செய்யும் உக்கிர வடிவமாய் இருப்பார். முகத்தில் கோபக்கனல் கொந்தளிக்க ஆவேசத்துடன் இருந்து பிரம்ம சிரச்சேதம் செய்தவரும் இவரே. ஆலய சிற்பங்களில் காண்கின்ற உக்கிர வைரவர் எனப்படுபவர். ஜடாமுடி, தீச்சுடர், பயங்கர ஆயுதம் என்பனவற்றைக் கொண்டு இருப்பார்.

**வடுகநாதர்:**

சுவான (நாய்) வாகனத்தை உடையவராய் அருள் பாலிப்பவர். சாதாரணமாக இப் பெயரையே பேசுவார்கள். காண்போர்க்கு எளிமையான முறையில் அருள் பாலிப்பார்.

வடுகநாதர் கருணைமிக்கவர். அட்சமாலை, கமண்டலம் ஆகியவற்றைக் கொண்ட இவர் வாக்தேவியுடன் இருப்பார். தன்னை உள்ளன்போடு வணங்குபவர்களுக்குக் குறையாத அருளைக் கொடுப்பார். பல ஆலயங்களில் வடுகநாதருக்கு வேறான ஸ்தாபனமும், சிற்ப வேலை அமைந்த கோபுரங்களுமுண்டு. தஞ்சை, மதுரை, காஞ்சி, காசி இவைகள் விசேடம் பெற்றன. பிரமதேவர் செருக்கடைந்த காலத்து அவரது ஐந்து சிரங்களுள் ஒன்றைக் கிள்ளிய சிவன் திருவுரு.

### சட்டைநாதர்

வைரவமூர்த்தியின் மற்றோர் வடிவம். நரசிம்ம உக்கிரத்தைக் குறைத்தவர். சட்டைநாதருக்கு தஞ்சை மாவட்டத்து சோழர்களினது பழைய கோயில்களில் சிற்ப படிமக்கோலங்கள் உண்டு. ஆவேசமான நரசிம்மத்தைக் கௌவி அதன் உக்கிரத்தைக் குறைக்க இரத்தத்தை உறிஞ்சிக் குடிக்கின்ற பாணியில் சிற்பத்தைக் காணலாம். சீர்காழியில் தோணியப்பர் கோயிலில் வைரவரின் ஆபத்துத் தாரண மூர்த்தம் எனப்படுஞ் சட்டைநாதரைக் காணலாம். விஷ்ணு மூர்த்தியின் செருக்கடக்க எடுத்த நரசிம்ம சாபத் திருவுருவுக்குப் பின்பு விஷ்ணு மூர்த்திக்குத் தரிசனம் தந்த திருவுரு.

### சீர்காழிப்புராணம்

**துங்கமாமணித் தூணில் வந்து இரணியன் தோள் வலிதனை வணங்கும்**
**சிங்கரத்து உரிய அரைக்கு அசைத்து உலகு எலாம் தேர்ந்து அளந்து அவன் மேனி**
**அங்கம் யாவும் ஓர் கதையதாய்க் கொண்டு அதன் அங்கியாய்ப் புனைகாழி**
**சங்கவார் குழைச் சட்ட நாயகன் துணைத் தாமரைச் சரண் போற்றி**

இவ்வாறு கூறுகிறது.

திருவண்ணாமலை, அருணாசலேஸ்வரர், ஆலயங்களில் உள்ள வைரவசந்நிதி ஏகப்பிரபல்யமாக விளங்குகிறது. இன்றும் பெருமையுடன் விளங்குகிறார் அண்ணாமலை வைரவர். இது பார்ப்பதற்கு மிக அழகிய சிற்பம். தஞ்சை மாவட்டம் பட்டீச்சுவரத்தின் ஆலயத்திலுள்ள வைரவ மூர்த்தியும். ஷேத்திரபால புரத்திலுள்ள மூர்த்தியும் மிக அழகானதாகும். பிரசித்தமானதும் கூட.

## அஷ்ட வைரவர்

"பராக்கியம" என்னும் நூல் எட்டு வைரவர்களின் சிறப்பைப் பற்றிக் கூறும். இவைகள் காலவைரவர், கல்பாந்த வைரவர், உக்குரோதவைரவர், கபாலவைரவர்., ஸம்ஹாரவைரவர், உன்மத்தவைரவர். சண்ட வைரவர், உக்கிர வைரவர் என்னும் பெயர்களாகும். சென்னைக்கடுத்த திருவான்மியூரில் சந்நிதிகள் உண்டு. ஆலய பலிபீடத்தில் அட்ட வைரவர்கள் உறைவதால் பலிபீடத்தின் பூசையின் போது இவர்களுக்கும் பூசை உண்டு.

ஆலயங்களில் வைரவமூர்த்தி காவல் தெய்வமாக அமைந்துள்ளார். கோவிற் பூசைகள் எல்லாம் முடிந்து கடைசியாக இவரைப் பூசித்து "இவ்வாலயத்தைக் காப்பாயாக" என்று வணங்கி திறப்பை ஒப்புவிப்பதும் வழக்கமாயுள்ளது. இவற்றை விட முனீஸ்வரர் என்ற பெயரோடு அமர்ந்திருப்பதையும் காணலாம். ஆலயங்கள் திறந்து பூசிப்பதன் போதும் இவர் பூசிக்கப்படுகிறார்.

நதி தீரங்களில் நீராடச் செல்பவர்களும் முதலில் வைரவக்கடவுளை வணங்கியே நீராடச் செல்வார்கள்: ஆன காரணங்களால் காவல் தெய்வம் என்பது பொருந்தும்.

## ஞானவைரவர்

சாதாரணமாக எல்லா இடங்களிலும் காணப்படும் கடவுளாவர். இவரை நாம் விநாயகரை வணங்குவது போல தரிசனத்துக்கு இலகுவாக்குகிறோம். முழுமுதற் கடவுளாகிய சிவபெருமான் உலகத்துக்கு கர்த்தா என்று பதினெட்டாம் நூற்றாண்டில் வாழ்ந்த ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் அவர்கள் கூறியதுமன்றி அவருடைய திருக்குமாரர்களுள் வைரவக் கடவுளும் ஒன்றென்றார். எவ்வாறாக இம்மூர்த்தம் உண்டாயது என்பது அறியாவினாவாகும்.

ஒன்றாய், ஆதியாய், நிர்மலமாய், வேதங்களுமறிய முடியாத பரஞ்சுடராய், வெண்மதியும், புனைந்த குழைகளையுமுடைய பரம்பொருளாய், முன்னைப்பழம் பொருட்கும் முன்னைப்பழம் பொருளானவர். மாதவனும் மலரவனும் அறியமுடியாத ஒளிவளர் விளக்கு. பாரொடு விண்ணாய்ப் பரந்த பொருள். மாயையின் பிடியினின்று விலகமாட்டாதிருக்கும் எம்மனோர்க்கு எப்படி அறியமுடியும் இவரை.

நினைப்புமாய் மறப்புமாகி, நினைவினுக்கு எட்டாதொன்றாய், அனைத்துமாய் நின்று அருமறைக் கொழுந்தாய் உள்ளவர், கடுக்கையாங் கண்ணியோடு புனிற்று வெண்திங்கள் புனைந்த செஞ்சடை, அரவணிந்த அங்கம், பு ரமூன்றெரித்த புன்முறுவல், இவ்வாறாய சிவன் அடியார்களுக்கு அனுக்கிரகஞ் செய்யவும். துஷ்டரை நிக்கிரகஞ்செய்யவும் எடுத்த மூர்த்தங்களுள் வைரவக் கடவுளுமொருவர் ஆவர்.

சிவன் என்னும் நாமம் தனக்கேயுரிய செம்மேனியெம்மான் என்றும் சிவனோடொக்கும் தெய்வம் தேடினுமில்லை என்றும் தேவ தேவனென்றும் பலவாறாகப் போற்றுவர். நிறை மலம் அனாதியின் நீங்கி நிற்றலின் இறைவன் என்றார். வேதங்கள்

நான்கும் விரிவாக இவரின் பெருமையைக் கூறுகின்றன. வைரவக்கடவுள் என்ற பெயருடன் இவர் புகழ் கூறப்படுகின்றது.

கடவுள் நிறைந்த அன்பும், இன்பமும், தூய்மையும், ஆற்றலும் உள்ளவர். கடவுளுக்கு இரண்டு நிலைகள் உண்டு. ஒன்று சிறப்பு இயல்பு என்று கூறும் சொரூபலட்சணம். ஊரிலான், பேரிலான், குணமிலான் என்பதினாலே

**மைப்படிந்த கண்ணாளுந் தானுங் கச்சி**
**மயானத்தான் வார்சடையா னென்னினல்லான்**
**ஒப்புடைய னல்ல னொருவ னல்லன்**
**ஓரூர னல்லனோ ருவம னில்லி**
**அப்படியு மந்நிற மவ்வண்ணமு**
**மவனருளே கண்ணாகக் காணினல்லால்**
**இப்படிய னிந்நிறத்த னிவ் வண்ணத்த**
**னிவனிறைவ னென்றெழுதிக் காட்டொணாதே**

திருநாவுக்கரசு நாயனாரும் திருத்தாண்டகத்தில் கூறினார்.

இறைவனின் இரண்டாவது நிலை பொதுவியல்பு என்னும் தடத்த லட்சணம். இது ஆன்மாக்களுக்கு அருள் புரிய எழுந்தருளும் நிலை. "அறிதரு சிவனே எல்லாம் அறிந்து அறிவித்து நின்றவன் என்றார்" சிவஞான சித்தியார்.

இறைவன் அருவத்திருமேனி, அருவுருவத் திருமேனி, உருவத்திருமேனி என மூவகையுள் அடக்கலாம். நாதம், விந்து, சக்தி, சிவம் என்பன அருவத் திருமேனியுள் அடங்கும். சிவலிங்கம் அருவுருவத் திருமேனி, உருவத் திருமேனி போக வடிவம், கோரவடிவம், யோக வடிவம் என மூன்றாகும். இவற்றுள் சிவன் கோரவடிவமுடையவராய் ஆன்மாக்களுள்

துஷ்டரை நிக்கிரகஞ் செய்து சிஷ்ட பரிபாலனஞ் செய்பவராய் உள்ளவரே நாம் கூறும் வைரவக்கடவுள், ஆன்மாக்களின் வினைகள் கழிவதற்கு உபகரிப்பது வீரட்டானம். இது பற்றி வீரட்டானத்துறை அம்மானே என்றார்.

காசி காண்டம் வைரவரின் பெயரை எடுத்தருளுகிறது.

**"காண்டலோடு மலர்க் கிழவனுள்ள மதனிற் கனல் கொளுத்தி**
**தூண்டுமுனிவு பிடித்துந்தவெனது புருவந்துணை நாப்பண்**
**நீண்ட சடையினொடும் புதல்வனலையோ நீயென்ன**
**மூண்ட வெகுளி வயிரவனை முக்கட்கனியாண்டளித்ததுவே."**

ஒரு சமயம் பிரமாவுக்கு மயக்கம் காரணமாக அகந்தையுண்டாகவே அவரின் அறியாமையைப் போக்குவதற்கு வைரவமூர்த்தம் உண்டானது. இதன் விரிவை மான்மியத்தில் காணலாம்.

வைரவர் பொதுவாக நீலமேனியும், சிலம்பொலிக்கும் திருவடியும், பாம்புகள் பொருத்திய திருஅரையும், தலைமாலைகள் புரளும் திருமார்பும், சூலம், மழு, பாசம், உடுக்கு இவைகள் ஏந்திய திருக்கரங்களும் மூன்று கண்களும் பெரிய கோரப்பற்கள் இரண்டும். சிவந்த சடையும், கோபச்சிரிப்பும், உக்கிரவடிவுங் கொண்டவர். சர்வ சங்கார காலத்தில் பிரமா, விஷ்ணு முதலிய தேவர்களின் தலைகளைக் கொய்து புவனங்களை ஒடுக்கியவர். இக்காரணத்தினாலே காலவைரவர் என அழைக்கப்படுகிறார். வைரவ மூர்த்தத்தில் காலவைரவர், கற்பாந்த வைரவர், சங்கார வைரவர், உன்மத்த வைரவர், உக்கிர வைரவர், கண்ட வைரவர், ஞான வைரவர் என்பன காரணங் கருதி வந்தமைதல் காண்க.

திருநாவுக்கரசு நாயனார் தேவாரம்:

**தன்னடியார்க் கருள்புரிந்த தகவு தோன்றுஞ்**
**சதுர் முகனைத் தலையரிந்த தன்மை தோன்றும்**
**மின்னனைய நுண்ணிடையாள் பாகந் தோன்றும்**
**வேழத்தி னுரிவிரும்பிப் போர்த்த றோன்றும்**
**துன்னிய செஞ் சடை மேலோர் புனலும் பாம்புந்**
**தூயமா மதியுடனே வைத்த தோன்றும்**
**பொன்னனைய திருமேனி பொலிந்து தோன்றும்**
**பொழிறிகளும் பூவணத்தெம் புனிதனார்க்கே.**

சதுர்முகனைத் தலையரிந்த தன்மை. வேழத்தினுரி விரும்பிப் போர்த்தமை என்பன வைரவக் கடவுளால் செய்யப்பட்டன என்பதை திருமுறைகளிலும் காணலாம். காசி காண்டத்திலும்

**"இமையாப் பறவையேற் றெகினப் பாகனுள்ளச் செருக்கினையும்**
**துமியாத் திருப்பாற்கடற் சேர்ப்பனுள்ளச் செருக்கும்**
**தொலைத்தியென**
**அமையா வெகுளிக்கனல் கொள்ளுங்குமர லோன்னைந்தாந்**
**தலையதனை**
**கமை தீர்க்காரி தன்னிடக்கை யினுகிராற் கிள்ளிக் களிப்புற்றான்."**

காரி என்னும் வைரவ நாமமும், உகிராற் கிள்ளியதும் பெறப்பட்டன.

காவற் கடவுளாகக் கிராமங்கள் தோறும் சிறந்து விளங்கும் வைரவப் பெருமானின் பெருங்கருணையைப் போற்றி நிற்கிறோம். காசி, வைரவப் பொருமான் தனித்து ஆளும் திருத்தலமாக விளங்குகிறது. இதை காசியின் தனிச்சிறப்பு. காசி காண்டத்தில் வைரவர், என்னும் தலையங்கங்களில் சுவைக்கலாம்.

பிள்ளையாரைப் போல வைரவப் பெருமானும் வேம்பு, ஆல், மா, முதலிய மரங்களிலும் சூலாயுதத்தை அறிகுறியாக வைத்து வணங்கப்படுபவர்.

அக்கால அந்நியராட்சியால் நாம் துன்பமுறும் பொழுது காவற் தெய்வமாக விளங்கியவர் வைரவரே, அன்றியும் பிரமஹத்தி தோஷநிவிர்த்திக்கும் வைரவ வணக்கம் சிறந்தது என்பது புராணங்கள் வாயிலாக அறியுமாறுள்ளது.

பொங்கல், படையல், மடைபரவுதல், வடைமாலை சாத்துதல், செவ்வரத்தம் பூமாலையணிதல் என்பன எல்லா ஆலயங்களிலும் பொதுவாக நடைபெற்று வருவதைக் காணலாம். சித்திரைப் பரணி நாள் வைரவரின் விசேடநாளாகும். வெள்ளி, செவ்வாய் ஆகிய கிழமை நாட்களும் பிரதானம். வைரவர் பூசை நடக்கும் போது இடைமறித்தல், குறுக்கே போதல். கர்ப்பிணிகள் ஆலயங்களை வலம் வருதல் என்பன தவிர்க்கப்பட்டன.

அந்நியர் ஆட்சிக்காலத்தில் பூசை செய்ய சமயாசாரியர்கள் பயந்து மறுத்தனர். அதனால் சமயகுருமாராக பூசாரி என்று அழைக்கப்டுவோர் பூசை செய்தார்கள். இக்காலத்திலும் பூசாரியார் என்று அழைக்கும் வழக்கம் இருந்து வருகிறது.

வைரவ உபாசனை வீரம், ஞானம், தைரியம் போன்ற பாக்கியங்களை அளிக்க வல்லது. நல்லியல்புகளும் தர்மமும் நலிந்து அறியாமை ஆகிய இருள் கவ்விவரும் நாட்களில் மீண்டும் புத்தொளியும் புதுவாழ்வும். பெற வடுக நாதனை உபாசித்து வணங்க வேண்டியது அவசியமாகும். பரதகண்டத்திலுள்ள வைரவ சந்நிதிகளுள் காசியில் உள்ள காலவைரவர் கோவில் மிகப் பிரசித்தி பெற்றது. இதனைக் காசிகண்டத்தில் காலவைரவர் என்னும் கட்டுரை விளங்க

வைக்கும். காசிக்குச் செல்லும் எவரும் அப்பெருமானை வணங்காமல் வருவதில்லை. நாயன்மார்களது திருமுறைகளிலும் சிவனது மூர்த்தமாக வைரவக் கடவுள் வர்ணிக்கப்பட்டுள்ளார்.

காசியில் பாபத்துக்கு தண்டனை கொடுக்க இயமதர்மராசாவுக்கு அதிகாரங்கிடையாது. காசியில் யாராவது இறந்தால் யமவாதனை கிடையாது. காசியில் வைரவர்தான் சிட்ஷகர். காலவைரவர் காசிநகரின் சேனாபதி. "காசியின் தனிச்சிறப்பு" இதனை விளக்கமாகக் கூறும். வைரவ உபாசனை உக்கிரமானது. விரக்தன், கபாலிக்கன், வைராகி, போன்ற சாதகர்களால் சித்தி செய்யக்கூடியது. இது தேவதா உபாசனை, எல்லோரும் செய்யக்கூடாது. வேதங்களில் ரிக்வேதம், அதர்வணவேதம் என்பன வைரவரைப் பற்றி விரிவாகக்கூறும்.

காசிகண்டத்தில் வைரவரின் சரித்திரம் விஸ்தாரமாகக் கூறப்படுகிறது. பிரமன் சிவனை தூஷித்ததினால் வைரவராக வந்து அவன் தலையைக் கிள்ளி எறிந்து விடுகிறார். அதனால் பிரமஹத்தியைப் போக்குவதற்கு உலகம் பூராவும் அலைகிறார்.

இவ் வைரவர் நர்மதா நதிதீரத்தில் ரிஷிகளிடம் சென்று தன் குறையை முறையிடுகிறார். முனிவர்கள் அது சமயம் "காசி போவீராகில் உம் பிரமஹத்தி தீரும்" என்று கூறி காசி எங்கிருக்கிறது என்று கேட்பாயானால் ஆனந்த கானம் என்ற ஆரணியம் இருக்கிறது. அதற்கே காசி என்று பெயர்" என்று அநேக அடையாளங்களைக் கூறினார்கள். கடைசியாக "எந்த இடத்தில் உம் கையில் இருக்கும் கபாலம் தெறித்து விழுகிறதோ அது தான் காசி என்று புரிந்து கொள். கபாலம் விழுந்தால் பிரமஹத்தி நீங்கி விட்டது என்று எண்ணுவாயாக. கபாலம் கையில் இருப்பதால் கபாலவைரவர் என்று அழைப்பார்கள். எல்லாமும் இப்படியே நடந்தது. கபாலம்

தெறித்து விழுந்தது. உடனே இத தான் அனந்த கானம் என்று தெரிந்தார். விசாகமோசன தீர்த்தத்தில் ஸ்நானம் செய்து விஸ்வநாதரைப் பிரார்த்தித்து ஸ்தோத்திரம் செய்யப் பகவான் விஸ்வநாதர் வைரவரை அனுக்கிரகித்து இன்று முதல் காசியில் இருந்து கொண்டு காலன் அதிகாரம் இங்கு செல்லாததலால் காலனின் காரியத்தை நீயே கவனத்ததுக் கொள் என்று சொல்லி காலவைரவர் என்று பெயரையும் வைத்து காசிக்கு சேனாதிபதியாக்கினார்.

வைரவர்தான் பிரளய காலத்தில் சகல ஜகத்தையும் ஸம்ஹாரஞ் செய்து வந்தார் என்ற விஷயத்தை ஹரத்ததாசாரியார் சருதிஸரித்திமாலை என்ற கிரந்தத்தில் கூறி இருக்கிறார். அதன் சாராம்சம் எல்லோராலும் வைரவ உபாசனை தீவிரமாகச் செய்யக் கூடாது என்பதாகும். எனினும் தீமைகள் அகல பூஜிக்கப் படவேண்டிய தெய்வநிலைகளில் பூஜிக்க வேண்டும்.

காசி கண்டத்தில் (காண்டம் இக்காலத்தில் கண்டம் என வழங்கப்படுகிறது) காலவைரவர். கந்தபுராணத்தில் கபாலீஸ்வரர். காசியின் தனிச் சிறப்பு என்பன இலகுவாக விளங்கக் கூடியனவாக உள்ளன.

படைத்தல், காத்தல் ஆகிய தொழில்களைச் செய்கின்றவர்களாகிய திசைமுகனும் திருமாலும் இருந்து வந்தாலும் வைரவரின் அருட்கடாட்சம் அனைவரும் அறிய வேண்டும் என்று சிவம் எண்ணியதால்

**“தீய தன்றடுஞ் செயலும் நல்லரும்**
**ஆயின் ஆவிகள் அழிந்துந் தோன்றியும்**

**ஓய்வி லாதுழன் றுலைவு றாமலே**
**மாய்வு செய்திறை வருத்தம் மாற்றலாம்''**

என்னும் கந்தபுராணச் செய்யுளை நோக்கும் போது பிரமதேவனின் வரம் பெற்ற அவர் வாக்குக் கிணங்குவேன் என்று முடிவு செய்த கயாசுரன் சிவனைக் கண்டவுடனே வாக்குறுதியை மறந்து போரிட்டான். இதனால் தோல் உரிபட்டான். வைரவக் கடவுளின் பெருமையை விளக்க இக்கதை வேண்டப்பட்டது.

திருவிசைப்பாவில் திருமாளிகைத் தேவர் சிவனின் பெருமையினால் வைரவரைத் தொடர்ந்துள்ளார்.

**தக்கனற் றலையு மெச்சன வன்றலையும்**
**தாமரை நான்முகன் றலையு**
**மொக்க விண்டுருள வொண்டிருப்புருவ**
**நெரித் தரு ளியவுருத் திரனே**
**அக்களி புலித்தோ லாடைமே லாட**
**வாடப் பொன்னம்பலத் தாடுஞ்**
**சொக்கனே யெவர்க்குந் தொடர்வரி யாயைத்**
**தொண்டனேன் தொடருமா தொடரே**

என்றார்.

மணிவாசகப் பெருமான் திருப் பொற்சுண்ணத்தில் இடம் கொடுக்கிறார்.

**"அயன் தலை கொண்டு செண்டாடல் பாடி**
**அருக்கன் எயிறு பறித்தல் பாடிக்**
**கயன்தனைக் கொன்றுரி போர்த்தல் பாடிக்**
**காலனைக் காலால் உதைத்தல் பாடி**

**இயைந்தன முப்புரம் எய்தல் பாடி**
**ஏழை அடியோமை ஆண்டு கொண்ட**
**நயந்தனைப் பாடி நின் றாடியாடி**
**நாதர்க்குச் சுண்ணம் இடித்துநாமே"**

அயன் தலை கொண்டாடல், கயன்தனைக் கொன்றுரி போர்த்தல் என்பன இடம் பெற்றன.

திரு ஞானசம்பந்தமூர்த்தி நாயனாரால் திருப்பிரமபுரம் முதலாந் திருமுறையில் நாலாம் பா.

**"விண் மகிழ்ந்தமதி லெய்தது மன்றி விளங்குதலை யோட்டில்**
**உண்மகிழ்ந்து பலி தேரியவந்தென துள்ளங் கவர்கள்வன்**
**மண்மகிழ்ந்தவர வம்மலர்க் கொன்றை மலிந்தவரைமார்பிற்**
**பெண்மகிழ்ந்தபிர மாபுரமேவிய பெம்மானிவனன்றே"**

**"விளங்கு தலையோட்டில் உண்மகிழ்ந்து, பலிதேரியவன்"**

**"ஊனியன்ற தலையிற் பலிகொண்டுலகத்துள்ளவரேத்தக்**
**கானியன்ற கரியின்னுரி போர்த்துழல்கள்வன் சடைதன் மேல்**
**வானியன்ற பிறைவைத்த வெம்மாதி மகிழும் வலிதாயத்**
**தேனியன்ற நறுமா மலர்கொண்டுநின் றேத்தத் தெளிவாமே"**

"கானியன்ற கரியின்னுரி போர்த்துழல் கள்வன், தலையிற் பலியேற்றல்"

மூன்றாம் பதிகம், ஆறாம் பா

**"ஆறணி செஞ்சடையானழகார் புரமூன்றுமன்று வேவ**
**நீறணியாக வைத்தநிமிர் புன்சடையெம் மிறைவன்**

**பாறணி வெண்டலையிற் பகலே பலியென்று வந்துநின்ற**
**வேறணி கோலத்தினான் விரும்பும் புகலியதே"**

"பாறணி வெண்டலையிற் பகலே பலி"
(நூற்றி நாலாம் பதிகம், மூன்றாம் பா)

**"செய்யதிரு மேனி மிசை வெண்பொடியணிந்து கருமா**
**னுரிவை போர்த்**
**தையமிடு மென்று மடமங்கை யொடகந் திரியுமண்ணலிடமாம்**
**வையம்நிலை மாறிடினுமேறுபுகழ்மிக் கழிவிலாத வகையார்**
**வெய்ய மொழி தண்புலவருக்குரை செயாத வர் திருடியே"**
"கருமானுரிவை போர்த்தையமிடுமென்று
மடமங்கையொடகந்திரியும்"
(பதிகம் முன்னூற்று முப்பத்தாறு. ஆறாவது பா)

இவைகளினால் வைரவ மூர்த்தம் சிவாம்சம் உடையதென்பது தெளிவாகிறது.

திருநாவுக்கரசு நாயனார் ஆறாவது திருமுறை திருவாவடுதுறைப் பதிகம்

**"கோணாரணங்கத் தோள் மேற்கொண்டு**
**கொழுமலரான் தன் சிரத்தைக் கையிலேந்திக்**
**காணார் களிற்றுரிவைப் போர்வை மூடிக்**
**கங்காள வேடராய் எங்குஞ் செல்வீர்**
**நானாருமக் கோர் வினைக் கேடனே**
**னல்வினையும் தீவினையு மெல்லா முன்னே**
**ஆனாயடியேனை யஞ் சேலென்றா**
**யாவடு தண்டுறை யுமமரரேறே"**

"கொழுமலரான் சிரத்தைக் கையிலேந்தி"

சுந்தரமூர்த்தி நாயனார் தேவாரம்

திருவெஞ்சமாக்கூடல் என்னும் திருப்பதிகம். நாற்பத்திரெண்டாம் பா

**"கடமாகளியானை யுரித்தவனே கரிகாடிட மாவனல்வீசிநின்று**
**நடமாடவல்லாய் நரையேறுந் தாய் நல்லாய் நறுங் கொன்றை நயத்தவே**
**படமாயிரமாம்படுத்துத்திப் பைங்கண்பகுவாயெயிற் ரேடழலேயுமிழும்**
**விடவாரரவாவெஞ்சமாக்கூடல் விகிர்தாவடியேனையும் வேண்டுதியே"**

"கடமாகளியானை உரிபோர்த்தவனே"

இவ்வாறே திருமுறைகளிலும் வைரவமூர்த்தியின் நினைவினை குரவர்கள் நால்வரும் எடுத்தாண்டுள்ளார்கள்.

திருமுதுகுன்றப் பதிகம் நாற்பத்திமூன்று. பா மூன்று

**"தொண்டர்கள் பாட விண்ணோர்கள் தவுழிதர் வீர்**
**பண்டகந் தோறும் பலிக்குச் செல்வதும் பான்மையே**
**கண்டகர் வாளிகள் வில்லிகள் புறங்காக்குஞ் சீர்**
**மொண்டகை வேள்விமுழக்கருமுது குன்றரே"**

இப்பதிகத்தில் "பண்டகந்தோறும் பலிக்குச் செல்வதும் பான்மையே" என்ற காசி வாசியாயிருந்து பலியேற்றது ஞாபகமாகிறது.

இப்பதிகத்தில் எட்டாவது பா.

**"அந்தி திரிந்தடியாரு நீருமகந்தோறும்**
**சந்திக டோறும் பலிக்குச் செல்வது தக்கதே**
**மந்தி கடுவனுக் குண்பழநாடி மலைப்புறம்**
**முந்தியடி தொழ நின்ற சீர்முது குன்றமே"**

இங்கே "சந்திகள் தோறும் பலிக்குச் செல்வது தக்கதே" என்னும் இடத்தில் பலியேற்றது படிப்புக்குரியதாகும். திருக்கச்சியேகம்பம் என்னும் திருப்பதியினை நினைந்து பாடும் போது பதிகம் அறுபத்தி ஒன்று பா மூன்று

**"திரியுமுப்புரந் தீப்பிழம்பாகச் செங்கண் மால் விடை மேற்றிகழ் வானைக்**
**கரியினீருரி போர்த்து கந்தானைக் காமனைக் கனலாவிழித்தானை**
**வரிகொள் வெள்வளை யாளுமை நங்கை மருவியேத்தி வழிபடப் பெற்ற**
**பெரியகம்பனை யெங்கண்பிரானைக் காணக் கண்ணடியேன் பெற்ற வாறே"**

இப்பாவில் "கரியினுரி போர்தானை" என யானை உரிபோர்த்தல் காணப்படுகின்றது. இவ்வாறே பற்பலவான பதிகங்களின் பாக்களில் வைரவமூர்த்தம் போற்றப்படுகின்றது.

இனி நாம் ஸ்ரீகுமரகுருபர சுவாமிகள் வைரவரைப் பற்றி எப்படி ஞாபகப்படுத்துகிறார் என்பதைப் பார்ப்போம்.

**"இல்லாளே முப்பத்திரண்டறமுஞ் செய்திருப்பச்**
**செல்லார் பொழிற் காசிச் செல்வனார் - மெல்லப்**

**பரக்கின்ற புண்ணீர் படுதலை கொண்டையம்**
**இரக்கின்ற வாறென் சொல்கேன்''**

இவ்வெண்பாவில் இல்லாள் உமாதேவியார். இவர் நிலை பொருளில்லாதவராய் இருப்பவர் எனக் கருதுகிறார். செல்வனார் அகிலேசர் செல்வமுடையவர் எனக் கருதுகிறார். புண்ணீர் - இரத்தம், ஐயம் - பிச்சை எனப் பொருள் கொண்டு பொருளில்லாதவளான மனைவி முப்பத்திரண்டு அறங்களையும் செய்யும் செல்வராகிய கணவர் தலையோட்டால் பிச்சையெடுப்பது என்ன வியப்பு என்றபடி தலையோட்டால் இரத்தப் பிச்சை யெடுத்த காசி நகரில் சிவனே வைரவமூர்த்தமாக வந்து பிரமஹத்தி தோஷத்தை நிவிர்த்தி செய்வதற்காகவே.

"பங்கயாசனன் ஒரு தலை கிள்ளியது" வெளிப்படையாயிற்று இன்னும் ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள்.

காசியில் பாவஞ் செய்தவருக்கு யமதண்டனை இல்லை என்பது வைரவ தண்டனை மட்டும் உண்டு என்பதும் புராண வரலாறுகள். இதைத் தலைவி கூற்றாக

**"ஆமோ வவிமுத்தத் தையரே பெண்பழிவீண்**
**போமோ வயிரவர்தஞ் சாதனமும் பொய்யாமோ**
**தேமோது கொன்றை செழுந்தாம நல்காநீர்**
**தாமோ தருவீருமது பரந்தாமமே (655ம் பா)"**

"வயிரவர் தஞ்சாதனமும் பொய்யாமோ" என்று கூறுகிறார். திருநாகைக்காரோணப் புராணம் சுந்தரவிடங்கற் படலத்தில் களம் த.ச.மீனாட்சி சுந்தரம்பிள்ளையவர்கள்.

**"திரிபுர மெரித்தவாறுஞ் சிலைமதிற் காய்ந்தவாறுங்
கரியத ளுரித்த வாறுங் காலனைக் காய்ந்தவாறும்
விரிமலர்க் கிழவன் சென்னி விழுத்திய வாறுநெய்த் தோர்
அரியுடற் கவர்ந்த வாறும் மனத்தொடு வகையோர் பாட"**

எனக் கூறுகின்றார். சித்தாந்த சைவமணி த.சி.மீனாட்சி சுந்தரம்பிள்ளை அவர்கள்.

திரிபுர மெரித்தது அதிகை வீராட்டானம், சிலைமதிற் காய்ந்தது குறுக்கை வீராட்டானம், கரியதன் உரித்தது வழுவை வீரட்டானம், மலர்க்கிழவன் சென்னி விழுத்தியது கட்டியூர் வீரட்டானம், நெய்த்தோர் அரியுடற் கவர்ந்தமை வைரவக் கோலத்துடனாகும்.

# வைரவர் அகவல்

காப்பு

சீர்புகழ் வயிரவர் செந்தமி முரைக்கக்
கார்புகழ் மேனிக் கணபதி யருளே!

நூல்

ஆதி பராபரி அருளிய நுதல்விழி
சோதிபோ லெழுந்து சுடரொளி யாகி
வீதியி லெழும்பி விசும்பெலாங் கடந்து
ஓதிய மந்திர உச்சா டனமாய்
ஓங்கா ரங்கொண் டொருமுக மாகி
ஆங்கா ரங்கொண் டமரக மாகி
அக்கினிச் சொரூப வனல்பல கதிராய்
விக்கினந் தீர்க்கும் விறும வயிரவா
அப்பமு மவலு மாலங் காயும்
செப்பிய மாங்கனி திகழ்தட் டுறட்டியும்
தேங்கத லிப்பழம் செப்பிய பலாப்பழம்
அத்த னையெல்லா மருந்திய வயிரவா
ஐயுங் கிலியு மகோர வயிரவா
சவ்வுங் கிலியுங் சங்கார வயிரவா
சிறியுங் கிலியும் ஏறு வயிரவா
மௌவுங் கிலியு மான வயிரவா
முச்சூல வயிரவா முக்கணீ சுபரா
அக்கினி வயிரவா ஆனந்த வயிரவா
சத்தியோ டருள்புரி தற்பர னாகிப்
பாம்பெலும் பணிந்த பராபர வஸ்துவாய்ச்
சாம்பலு மணிந்து தலையோ டேந்திச்

சுடலையில் நின்று சுடலைகாத் தவனே
கெங்கைக் கரையிற் கிருபா கரனாய்
நம்பின பேர்க்கு நற்பத மருளிப்
பூமடை தன்னிற் பூசல் புரிந்து
ஆலை நிழலி லமர்ந்துறை சிவனே
பாதக் கொலுசு பளபளென் றிசைப்ப
நாதவீ ணைகள் நலம்பெற விளங்க
ஆதி சிவனா ரருள்புரி வயிரவா
செம்பொன் மேனியுந் திருநீற் றழகும்
உச்சிக் குடுமியும் உதிர வாயும்
அலறிய பல்லும் அண்ணாந்த பார்வையும்.
காலிற் றரித்த தண்டை பாடகமும்
கழுத்திற் கட்டிய கங்கண மாலையும்
கையிற் பிடித்த கண்டகோ டாலியும்
அரையிற் கட்டிய காவியொட்டி யாணமும்
அங்கம் முழுவதும் அணிந்த வெண்ணீறும்
அக்கினிக் கண்ணும் அரவணி குஞ்சியும்
குஞ்சிச் சடையிற் குலாவிய பிறையும்
பச்சை மேனியும் பரிந்த முகமும்
உச்சிக் குடுமியும் உதிர வாயும்
அக்கினிச் சுடலையி லவ்வேஷ மானாய்
திக்குப் பேய்களைச் சிதற அடித்துப்
பக்கப் பசாசைப் பறக்கத் துரத்தி
எற்றி மிதித்து ஈடழித் திடுவாய்
ஐயனே யுந்த னருளுண்டானால்
வையகப் பிணிபோய் வாதபித்த கபம்
துய்யவி யாதிகள் துகழ்போற் பறக்க

எதிர்க்கும் வியாதியை இருள்போல் வெட்டி
மெய்யனே யுன்னருள் மேதினி விளங்க
ஐந்தெழுத் துச்செபித் தன்போ டரனே
நம்பினே னுன்னை நமக்கருள் மேதினி விளங்க
கரிமுக முடைய கற்பகா வருள்தா
திருவருள் புரியுஞ் சிவனே யருள்தா
பார்பதி யிடமுறை பரனே யருள்தா
சித்த மிரங்குஞ் சிவனே போற்றி
மத்தணி மாலின் மருகா போற்றி
ஞாளியில் வந்து நமக்கருள் புரிந்து
கூளிகள் மாயக் குண்டெறிந் தவனே
அன்பாய் வந்து அடியேன் செய் பூசையை
நண்பா யேற்று நமக்கருள் புரிவாய்
ஆனக பாலமு மழகிய பிரம்பும்
ஞானபூ ஷணமும் நமக்கருள் காட்டி
சங்கூர்த்த மார்பில் தனியொளி காட்டி
எங்களை யிரட்சித் தருள்வாய் போற்றி
இன்பமாய் வந்து யான்செய் பூசையை
அன்பா யேற்பாய் நமஸ்தே நமஸ்து.

மட்டக்களப்பு
மண்டூர்
மணியப் பூசாரியார்

உ
சிவமயம்

# திருத்தலங்களில்
# வைரவப் பெருமானின் மகத்துவம்

## 1. கந்தபுராணம்

**பரமனை மதித்திடாப் பங்க யாசனன்**
**ஒருதலை கிள்ளியே யொழிந்த வானவர்**
**குருதியு மகந்தையுங் கொண்டு தண்டமுன்**
**புரிதரு வடுகனைப் போற்றி செய்குவாம்.**

முன்னொரு காலத்தில் சிவபெருமானை அவமதித்த தாமரை மலர் ஆசனனான பிரம்ம தேவனது ஒப்பற்ற நடுத்தலையைக் கிள்ளி மற்றைய தேவர்களது உதிரத்தையும் கர்வத்தையும் வாங்கிக் கொண்டு அவர்களுக்குத் தண்டனை புரிந்த வைரவக் கடவுளைத் துதிப்போம்.

**வெஞ்சிப் பரியழன் மீது போர்த்திடு**
**மஞ்சனப் புகையென வால மாமெனச்**
**செஞ்சுடர்ப் படிவமேற் செறித்த மாமணிக்**
**கஞ்சுகக் கடவுள் பொற்கழல் களேத்துவாம்.**

கடுங்கோபமுள்ள வடவாமுகாக்கினியானது தன்மீது போர்த்துக் கொண்ட கருநிறமமைந்த புகையைப் போலவும் ஆலகாலத்தைப் போலவும், சிவந்த பிரகாசமுடைய திருமேனியின் மீது விசேடித்த சிறப்பமைந்த நீலமணியின் நிறம் வாய்ந்த சட்டையணிந்துள்ள வைரவக் கடவுளின் பொன்மயமான திருவடிகளைத் துதிப்போம்.

## 2. பழைய காஞ்சிப்புராணம்

**கொச்சையறி வுற்பவமாங் கொள்கையினா**
**லரிபிரமர் கூடிவீணின்**
**மெய்ச்சமரம் புரிந்திகலி யொருவரொரு**
**வரை மிகவும் வெறுக்கு நாளி**
**லச்சுறவுற் றவரகந்தை விடுமாறு நெருக்கி**
**யினிதருளே செய்யுங்**
**கச்சிவடு கக்கடவுண் முச்சிகை வேற்**
**படையினையே கருதிவாழ்வாம்.**

அஃறிணை உயிராகிய அன்ன, வராகப் பிறப்படைந்ததனால் பிரம்ம, விஷ்ணுவும் சேர்ந்து சண்டையிட்டுப் பகைத்து ஒருவருக்கொருவர் மிகவும் வெறுத்துக் கொள்ளும் நாளில் அவர்களுடைய கர்வத்தை விடும்படியாக, நெருக்கியும் தாக்கியும் திருவருள் புரியும் காஞ்சி வடுகக் கடவுளின் முத்தலைச் சூலாயுதத்தினைப் போற்றுவாம்.

## 3. திருவாவடுதுறைப் புராணம்

**காலன் மார்பிற் கான்மலர் நீட்டிய**
**சீலன் கோயிற் றிறமிகழ்ந் தோர்களைச்**
**சூல மேற்றுஞ் சுழல் விழிக் கேத்திர**
**பாலன் பொற்பதம் பற்றிப் பணிகுவாம்**

எமனுடைய மார்பு முறியும்படி மலர் போன்ற காலைத் தூக்கி நீட்டி யுதைத்தருளிய குண சீலனாம் வடுகக்கடவுளின் கோயிற் பெருமைகளை இகழ்ந்து பேசியவர்களைச் சூலாயுதத்தால் குத்தும் சுழல் கண்ணனாகிய வைரவக்கடவுளின் பொன்னடிகளைப் பணிவோம்.

## 4. காஞ்சிப்புராணம்

**எளியரை வலியர் வாட்டின் வலியரையிருநீர் வைப்பி**
**னளியறத் தெய்வம் வாட்டு மெனுமுரைக் கமைய வன்றே**
**தெளியுமா வலியைச் சொற்றோற் செகுத்துரிக் கவயம்**
**வளியுளர் கச்சி காவல் வயிரவர்க் கன்பு செய்வோம்.**

கடல் சூழ்ந்த உலகத்தின் கண் விசுவாசமில்லாமல் எளியாரை வலியார் அடித்தால் வலியாரைத் தெய்வம் பார்த்து அடிக்கும் என்னும் பழமொழிக் கிணங்க மாவலி தலைமேல்கால் தூக்கிய வாமனனை அழித்து அவன் தோலைக் கவசமாகப் போர்த்துக் கொண்ட கச்சிக்காவலரும் காருண்ணிய மூர்த்தியுமான வயிரவ மூர்த்திக்கு அன்பு செலுத்துவோம்.

## 5. திருவானைக்காப் புராணம்

**உலக மளித்தல் சுதந்தர மன்றுவண**
**முயர்த் தோர்க் கெனவ வன்சே**
**யிலகு முருவம் பொடித்த வன்பா**
**லெழுந்து படைப்புஞ் சுதந்தரமன்**
**றலர்மெல் லணையாற் கெனவவனை**
**யரங்கத் திசைமாமு கனாக்கிப்**
**பலரும் வெருவப் பொழிநெய்த் தோர்ப்பயிக்கம்**
**புகுந்தோன் பதம் பணிவாம்.**

கருடக் கொடியோனாகிய மகா விஷ்ணுவுக்கு உலகம் அளித்து பாதுகாத்தல் சுதந்தரமான தன்றென்று கூறி உயிர்களைப் படைப்பதும் பதுமனுக்குச் சுதந்தரமான தன்றென்று பிரம்மதேவன் தலை அழிய நான்முகமுடையவனாக்கி. பலரும்

அஞ்சச் சிந்துமவ் இரத்தத்தில் பிச்சையெடுத்தோனாகிய முழுநீற்றுருவ வைரவ மூர்த்தியின் பாதம் பணிவாம்.

**கோணா ரணங்கத் தோண் மேற் கொண்டு**
**கொழுமலரான் தன்சிரத்தைக் கையிலேந்திக்**
**கானார் களிற்றுரிவைப் போர்வை மூடிக்**
**கங்காள வேடரா யெங்குஞ் செல்வீர்**
**நானா ருமக்கோர் வினைக் கேடனே**
**வல்வினையுந் தீவினையு மெல்லாமுன்னே**
**ஆனா யடியேனை யஞ்சே லென்னா**
**யாவடு தண்டுறையுறையு மமர ரேறே.**

திருமுறை 6வது
திருநாவுக்கரசு நாயனார் தேவாரம்

இத் திருத்தாண்டகத்திலும் கொழுமலரான்றன் சிரத்தை கையிலேந்திக் கானார் களிற்றுரிவைப் போர்வைமூடி இரண்டு திருவிளையாட்டை இயற்றிய சிவனே வைரவமூர்த்தியாக இயற்றினார் என்பது வெள்ளிடை.

### 6. திருப்பாதிரிப் புலியூர்ப் புராணம்

**தருணமலர்க் கோயிலிறை யுச்சிமூடிக்**
**கபாலத்தைத் தளிர்க்கை யேந்தி**
**யருணநீர் பலிக்கிமையோர் நடுங்கவலம்**
**வந்து மாற்காவி நல்கி**
**மருணனிசெய் மூவிலைவேண் மணிநாக**
**முடுக்கையிவை வயங்க வேந்திக்**
**கருணைமறம் பூண்டெழில் செய்கடைஞாழல்**
**வயிரவரைக் கருதி வாழ்வாம்.**

செந்தாமரையில் வாழ் பிரம்மனுடைய உச்சிமுடிக் கபாலத்தை உள்ளங்கையிலேந்திக் கொண்டு தேவர்கள் பயந்து நடுங்க வலம்வரும்படியாகச் சூரியோதய பலிப்பிச்சை எடுத்துத் திருமாலுக்கு ஆவி கொடுத்து, மயங்கிய போரை வெல்லத்தக்க மூவிலைச் சூலமும் மாணிக்கமுடைய பாம்பும் உடுக்கையுமாக இவை விளங்கத் தாங்கி மறக்கருணை பூண்டு, கொன்றைப் பூவணியும் வைரவ மூர்த்தியைக் கருதித் துதிப்போம்.

## 7. திருச்செந்தூர் புராணம்

**கிஞ்சு கந்தரு வாய்க்கலைக் கிள்ளையா**
**னஞ்சு கம்மிலொன் றற்றிடக் கிள்ளியே**
**மிஞ்சு கந்தொறு மிக்குறுங் கார்நிறக்**
**கஞ்சு கன்பொற் கழலிணை போற்றுவாம்.**

கிளியைப் போல வேதாத்தியனம் செய்யும் பிரம்ம தேவனுடைய ஐம்முகத்தில் ஒரு தலையற்று விழக் கிள்ளி மேகத்தினும் அதிகமான கருநிறங் கொண்ட யானைத்தோல் போர்த்துக் கொள்ளும் வைரவ மூர்த்தியின் பொன்னடிகளைப் போற்றுவோம்.

## 8. கடம்பவனப் புராணம்

**கருதரிய லளினதபர னெற்றியிற்றோன் றிச்சூல கபாலமேந்தி**
**வருபிரள யஞ்சுவற்றிப் பயிரவனாய ண்டதத்து வங்கண்மாற்றி**
**யரிசரும கஞ்சு கியாய் வேதவெகி னூர்த்து முன்போல வுண்டாக்கி**
**யிருமை பெறக் காத்தருளுங் கேத்திரபாலன் றிருத்தா ளேத்தல்**
**செய்வாம்.**

உமையம்மையின் நாயகராம் பரமசிவன் நெற்றியில் தோன்றிச் சூலமேந்தி பிரமனுடைய கபாலத்தை யேந்தி நரசிங்க மூர்த்தியின் உடலைக் கிழித்து அதன் தோலை இடுப்பில்

உடையாக அணிந்து வயிரவன் என்னும் பெயரைத் தாங்கி அண்ட தத்துவங்களை மாற்றியமைத்து சீவான்மாக்களை இருமை பெறக் காத்தருளும் கேத்திர பாலனாம் வயிரவ மூர்த்தியைப் போற்றி வணங்குவாம்.

**9. கடம்பர் கோயிற் புராணம்**

**கயிரவ நான்மலர்க் கவின்க ணார்மயற்**
**செயிரவ நாடொறு மியற்றி யேதிரி**
**யுயிரவ நானென வொறாது காத்தருள்**
**வயிரவ நாதனை வணங்கி வாழ்த்துவாம்.**

ஆம்பற் பூவைப் போலும் அலங்காரக் கண்களையுடைய மாதர்களின் நோயை எந்நாளுமே யுண்டாக்கித் திரியும் மனத்துள் நான் எனது என அலையாமல் இருக்க காத்து இரட்சிக்கும் வயிரவக் கடவுளை வணங்கி வாழ்த்துவாம்.

**10. புலியூர்ப் புராணம்**

**விதிப்பால வினைதவிர்க்கும் வியாக்கிரமா**
**புரத்தினிது மேவினோர்கண்**
**மதிப்பாலிற் செய்வினைக்கு மூவிலைவேற்**
**சூலத்தின் மருவ வைத்தே**
**யுதிப்பாலன்னையர் முலைகண் மீட்டருந்தா**
**வகை முத்தியுதவுந்தில்லை**
**பதிப்பால்வயிரவன்றன் பாதசரோ குகங்களென்றும்**
**பரவி வாழ்வாம்.**

விதியால் வந்த படைத்தலான பிறவி வினையைத் தவிர்க்கும் புலியூரின் கண் வாழப்பட்டவர்களுக்கு மதிப்பில்லாமல் துன்புறுத்தும் மலமாயா கன்மத்தை மூன்றிதழ்களுடைய

சூலாயுதத்தில் அடக்கி மீண்டும் பிறந்து தாயினர் முலைப் பாலை உண்ணாவண்ணம் பதமுத்தியை உபகரிக்கின்ற தில்லையம்பலத்து வைரவக் கடவுளின் பாதாம்புயங்களை என்றைக்கும் போற்றி வாழ்வாம்.

## 11. சீர்காழிப் புராணம்

**துங்க மாமணித் தூணில்வந் திரணியன் றோள்வலிதனை வாங்குஞ்**
**சிங்க வேற்றுரி யரைக்கசைத்து லகெலாந் தேர்ந்தளந்த வன்மேனி**
**யங்கம் யாவுமோர் கதையதாக் கொண்டத னங்கியாப் புனைதாழிச்**
**சங்க வார்குழைச் சட்டை நாயகன்றுணைத் தாமரைச் சரண் போற்றி.**

நவரத்தினங்கள் பதித்த தம்பத்தைப் பிளந்து கொண்டு வந்து இரணியன் வயிற்றைக் கிழித்து அவன் புயவலிமையை வாங்கும் நரசிங்கத்தைக் கொன்று, அதன் தோலை இடுப்புக்கு ஆடையாக அணிந்தவரும் ஈரடியாலே மூவுலகளந்தோனுமாகிய வாமனன் உடல் உறுப்புக்களை யெல்லாம் ஒரு கதாயுதம் கொண்டும் தோலை உடையாக உடுத்தவருமாகிய சீகாழிச் சங்கின் கவச குண்டலராகிய சட்டை நாயகருடைய இரண்டு பாதார விந்தங்களுக்கும் வணக்கம்.

## 12. திருப்பூவணப் புராணம்

**அரிபிரம ரகந்தை கெட வண்டங்க**
**ளுடைத் தெரியு மங்கிக் கோட்பட்**

**டுரியபல வுலகமெலா மொழிந் திடுநா**
**ளவர்கடம துடன் மேற் கொண்டு**
**குருதிவாய் கொப்பளிக்குங் கூரயின்மூ**
**விலைச்சூலங் கொண்ட திண்டோட்**
**கருவரைநேர் தருவடுகக் கடவுளமைப்**
**புரப்பக் கைகூப்புவாமே**

ஆகாயமெல்லாம் பற்றி எரியும் அக்கினிச் சுவாலைப்பட்டு சுந்தரமான பலஉலகங்களும் ஒழித்திடுங் காலத்திலே பிரம்மா விஷ்ணுக்களின் கர்வம் கெட்டொழியும் படியாக அவர்கள் தம் உடல் மேல் பாய்ந்து, இரத்தத்தைச் சொரிவிக்கும் கூரியவேலும் மூவிலைச் சூலமுங் கொண்ட (மலைபோலும்) புயவலிமையுடைய வடுகக்கடவுள், நம்மைக் காக்கும் படியாக நாம் அவருக்குக் கைகூப்பி அஞ்சலிப்போம்.

## 13. அவிநாசிப் புராணம்

**அஞ்சுகனை யாதிலகு மாடரவக்**
**கங்கணனை யகலும் வானில்**
**விஞ்சுகனை மாரிநிகர் மேனியனை**
**வாசியென விரைந்து தாவும்**
**பைஞ்சுகனை யேயெரித்த புக்கொளியா**
**ரெயில் காவல் பரிக்கும் வீரக்**
**கஞ்சுகனை வேணிமலர்க் கிஞ்சுகனைப்**
**பரசுகனைக் கழறல் செய்வாம்.**

அழகிய சுகங்குறையாது விளங்கியாடும் அரவாபரணனாய் பரந்த ஆகாசத்தின் மிகுந்த மழைபோலும் திருவருளுடைய திருமேனியனாய் பாணம் விடுத்துக் கொண்டே சமீபத்து வரும்

மன்மதனை எரித்து சிவபிரானுடைய எல்லைக்காவல் காக்கும் வீரவைரவனாய் விளங்கும் சிவந்த மலர் அணிந்த சடாதரனாம் பரமசுகனைத் துதிப்போம்.

**தன்னடியார்க் கருள் புரியுந் தகவு தோன்றுஞ்**
**சதுர்முகனைத் தலையரிந்த தன்மை தோன்றும்**
**மின்னனைய நுண்ணிடையாள் பாகன் தோன்றும்**
**வேழத்தி னுரிவிரும்பிப் போர்த்த றோன்றும்**
**துன்னியசெஞ் சடைமேலோர் புனலும் பாம்பும்**
**தூயமா மதியுடனே வைத்த தோன்றும்**
**பொன்னனைய திருமேனி பொலிந்து தோன்றும்**
**பொழி றிகழும் பூவணத்தெம் புனிதனார்க்கே**

திருப்பூவணம் 34ம் பக்கம்

திருப்பூவணத்தை நினைத்து தோத்தரிக்கும் போது திருநாவுக்கரசு நாயனார். சதுர்முகனைத் தலையரிந்த தன்மைதோன்றும் என்றார். வேழத்தி னுரிவிரும்பிப் போர்த்த றோன்றும் என்றவை நினைவுக்கு வரவேண்டியன.
இங்கேயும் வைரவக்கடவுள் குறிக்கப்பட்டமை காண்க.

## 14. பவானி கூடற் புராணம்

**பொருதலை யுகளும் வேணிப் புனிதனே பரமென் றுள்ளங்**
**கருதலை யயனீ யென்னக் குடிலையுங் கழலத் தேறா**
**வொருதலை யுகிராற் கிள்ளி யும்பர்மா லுதிரம் வாங்கும்**
**விரிதலை சூலச் செங்கை விமலனை வணக்கஞ் செய்வாம்.**

ஐம்முகம் பொருந்தி உள்ளதால் சிவபெருமானென்று கருதிக் கர்வித்தவனும் பிரணவத்துக்குப் பொருள் சொல்லாதவனும் நீதானென்னக் கூறி பிரம்மனின் ஒரு தலையை நகத்தினால் கிள்ளி திருமால் உதிரத்தை வாங்கும் மூவிலைச் சூலாயுத பாணியனாகிய வைரவனை வணங்குவாம்.

## 15. திருவோர்த்தூர் புராணம்

**வேரி மலர்ப் பண்ணவன்றன் சிரமொன்றை**
**நகநுதியால் வீட்டி யுற்ற**
**சோரிமலர் தலை நிலத்திற் பாயாதச்**
**சிரத் தேற்றுத் தொடர்ந்து போந்து**
**வாரிமலர் கண்வளர்மா னெற்றி யெற்றிக்**
**குருதிகொடு மமதை நீக்குங்**
**காரிமலர்க் கழலிரண்டுங் கரமிரண்டுங்**
**கூப்பி நிதம் கருதி வாழ்வாம்.**

செங்கமலாசனனாகிய பிரம்ம தேவனுடைய தலைகளில் ஒன்றை நகத்தினாற் கிள்ளி ஒழுகிய இரத்தம் பூமியில் விழாமற் படி அம்பில் கோர்த்துக் கொண்டு அதே விரைவில் போய்ச் சமுத்திரத்தில் பள்ளி கொள்ளும் திருமால் நெற்றிக்கிலக்காக விட்டு மூளையைப் பேர்த்துக் கர்வத்தைப் போக்கும் வைரவருடைய மலர்ப் பாதங்களிரண்டையும் எந்நாளும் இருகரங்களாலும் கூப்பி வணங்குவாம்.

## 16. மருதூர்ப் புராணம்

**கோணிலவு பிறைபொருவுங் கூரெயிற்று**
**வாய் மூடுவற் குதிரை யானைப்**

**பாணியிற்கங் கணம் புனைந்த வுரகமணி**
**வெயில் விரிக்கும் பண்பினானை**
**வேணியரன் திருக்கோயில் காப்பானை**
**நிருவாண வேடத்தானை**
**வாணிலவு மூத்தலைவேல் வடுகனைச் செந்**
**தமிழ்பாடி வணக்கஞ் செய்வாம்.**

கோணி வளைந்த மூன்றாம் பிறைச் சந்திரனைப் போல் கூரிய வக்கிர தந்தமுள்ள நாயைக் குதிரைவாகனமாய்க் கொண்டவனாய் கையில் கங்கணமாகக் கட்டிய அரவத்தின் மாணிக்கம் வெயில் போல் பிரகாசிக்கத் தக்கவனாய் சடாதரனாகிய சிவபெருமான் கோயிலை காக்கப்பட்டவனாய் விளங்கி நிர்வாணவேடங் கொண்டவனாய் வாழ்ந்து நிலைபெறும் முத்தலை வேல் வடுகனைச் செந்தமிழ்ப் பாமாலையால் துதித்து வணங்குவாம்.

## 17. ஆதித்தகிரிப் புராணம்

**பரநாத வரைமணிகிண் கிணி யொலிப்பப்**
**படமெடுத்துப் பார்க்குந் துத்தி**
**வரநாக கங்கணத்தான் மாலகந்தை**
**யிருளகற்ற வந்த ஜோதி**
**யுரனாகும் வித்துருமச் செஞ்ச**
**னருளத்தி யுயரா தித்த**
**புரமேவு மணிவரை வாழ் சட்டைநா**
**யகன் மலர்த்தாள் போற்றி வாழ்வாம்.**

பரநாத மணிச் சிலம்பு கிண்கிணியாக ஒலிக்கும் படியாக படமெடுத்தாடும் பொறிகளையுடைய அரவை ஆபரணமாக

அணிந்தவனாய் ஆணவ மலவிருளை நீக்கவரும் பரஞ்சோதியாய் மார்பினிடமாக அணியும் பவளம் போன்ற செஞ்சடைக் கடவுளின் அருளுடைய கங்கையின் வளப்பம் பெருகும் ஆதித்தபுரத் திருக்கோயிலில் வாழ் சட்டை நாயகனுடைய பாதாம் புயங்களைப் போற்றி வாழ்வாம்.

## 18. திருநெல்வேலிப் புராணம்

**பகருமறைப் பணைவனத்திற் பண்டிருந்த தாபதர்க**
**ணிகரிலவந் தவமெனவே நெறியிலவர் செயும் வேள்விப்**
**புகர் முகவெங் கரியுரித்த புரிசடையோ னெல் வேலி**
**நகரினிது புரந்த சட்டை நாதனிரு பதம் பணிவாம்.**

சொல்லா நின்ற வேதாரணியத்தில் பூர்வமிருந்த சைனமுனிவர்கள் பிரமாணமில்லாத அவத்தைத் தவமென்று நெறியில்லாமற் செய்யும் யாகத்தின் கரிய யானையை உரித்த சடாதரனாகிய ஈசுரனுடைய திருநெல்வேலித் தலத்தை இனிது காத்த சட்டைநாதர் திருவடியிணைகளைப் பாடிப்பணிவாம்.

## 19. மருதவனப் புராணம்

**மேலையோர் கற்பத் திருதியிற் கதிர்கண்**
**மேவுடுக் கணங்கள் கீழுறத் தீம்**
**பாலை யொத் திருசங் கீன்றமுத்தினங்கள்**
**பரந்திடப் புவியிடத் தெழுந்த**
**வேலையின் மிகுந்த புகலியந் தோணி**
**விளங்கிடு வடுகனாங் கடவுள்**
**காலை மென் போதை யுச்சியிற் கொள்வாங்**
**கடுந்துயர் மாலைதீர்ந்திடவே.**

முன் ஒரு கற்ப கால முடிவில் மூன்றொளிகளையுடைய நட்சத்திரக் கூட்டங்கள் கீழுதிர்த்தாற் போல பால் எனவெளுத்த சங்குகள் ஈனும் முத்துத் தினுசுகள் பரவும் படியாகப் பூமியைச் சுற்றி உள்ளம் மகிழும் காசியில் உறைகின்ற வைரவக் கடவுளது திருப்பாதங்களைச் சிரமேற்கொண்டு பிறவித் துயர் தீர்த்திடுவோம்.

## 20. திருநல்லூர்ப் பெருமணப் புராணம்

**புயற்காரின் வருமகவான் பணிவள்ளல்**
**பணிவிடைகள் பொருந்தி நாளுஞ்**
**செயற் காக வெங்கள் குலந்தனை**
**யடிமைக் கொண்டு வளர்தேவதே வ**
**னயற்காதி யமலனருள் செய்த புர**
**மெனவுலக மனைத்துங் கூறும்**
**வயற் காழி நகர்ச்சட்டை நாதனிரு**
**பாதமலரை வணங்கி வாழ்வாம்.**

மேகநாயகனாகிய இந்திரன் பணியும் வள்ளலாகிய சிவபெருமானுக்கு எந்நாளும் திருத்தொண்டு செய்வதற்காக நம்முடைய குலத்தை அடிமையாகக் கொண்டு வளருந் தேவதேவனும் பிரம்மாதிதேவர் முதலானவர்களுக்கும் வரம் அளிக்கும் முதல்வனாகிய பரமசிவன் ஏற்படுத்தியதாம் என உலகமெல்லாங் கொண்டாடும் வயல் வளப்பமுடைய சீகாழிச் சட்டை நாதனுமான வைரவ மூர்த்தியின் பாதாம் புயங்களிரண்டையும் வணங்குவாம்.

## 21. காசி ரகசியம்

**தளம் பொரிமலரோ னாதிவானவர் தாழ்ந்து போற்ற**
**வுளம் பொலி காசி மேவு முயிர்கள் செய்பாவ மெல்லாங்**

**களம் பொலியாது தண் டங் கண்டற லொழிந்து முத்தி**
**வளம் பொரிவகை செய்கால வயிரவற்கன்பு செய்வாம்.**

கமலாசனனாகிய பிரம்மாதி தேவர்கள் தாழ்ந்து போற்ற உள்ளம் மகிழும் காசியில் வாழ்கின்ற சீவாத்துமாக்கள் செய்த பாவங்களையெல்லாம் தண்டிக்காது, பணிந்து தண்டனிடக் கண்டு அவர்கள் பாவங்களை ஒழித்து முத்தி சாம்ராச்சியம் அடைய வழிகாட்டும் காலவயிரவற்கு அன்பு பூண்டொழுகுவாம்.

### 22. திருநாகைக்காரோணப் புராணம்

**பெருகுதன் புகழுளேனோர் பிரதாப மடக்கி யாங்கு**
**முருகுதங் கலரின் மேலான் முண்ட வெண்கபாலத் தூடு**
**கருகுபைங் கொண்டன் மேனி கவிழ்த்திடு செந்நீரேற்ற**
**திருகுதீர் வடுகப் புத்தேள் சேவடி சென்னி சேர்ப்பாம்.**

பெருகிய தன் பிரதாபத்துள் மற்றவர்களுடைய புகழை அடக்கிக் கமலாசனத்தின் மேல்வரும் பிரம்மனுடைய முண்டமான கபால ஓட்டில் கருகிய நீலமேக சரீரம் கவிழ்ந்து புரண்டாலன்ன சிவந்த இரத்தங் கொண்ட கள்ளமில்லா வடுகக் கடவுளின் சேவடிகளைச் சிரமேற் கொள்வாம்.

### 23. திருக்குடந்தைப் புராணம்

**எழுவகைத் தாதுங் கூடினியங்கிடு முயிரொான் றேனு**
**நழுவிடி னியங்காவென்று நவிறலை வெளிசெய் தாங்கு**
**முழுவலி நெடியோ னாதி மொய்த்த வானவர்மெய் நெய்த்தோர்**
**வழுவறக் கபாலத் தேற்ற வடுகனை வணங்கி வாழ்வாம்.**

இரதம், இரத்தம், சுக்கிலம், மூளை, தசை, எலும்பு, தோல், ஆய தாதுவகை ஏழுங்கூடித்தான் உயிர்கள் நடைபெறும்

இல்லாவிட்டால் ஒன்றும் நடைபெறமாட்டா என்று சொல்லுவதைப் பிரசிப்படுத்தி முழு வன்மையுடைய மகாவிஷ்ணு முதலான தேவகூடங்களின் தேக இரத்தத்தைக் குற்றமற்ற பிரம்ம கபாலத்தில் ஏந்திய வடுக நாதக் கடவுளை வணங்குவாம்.

திருநாகைக்காரோணம் கோயில் கொண்ட ஐயனை நினைந்து பாடும் போது திசைமுகன் சிரமொன்றேந்தும் ஐயனைக்குறித்த சிறப்பு காண்க.

**திருநாகைக்காரோணப் புராணம்**

**வையனை வையமுண்ட மாலங்க மேற்கொண்ட**
**செய்யனைச் செய்ய போதித் திசைமுகன் சிரமொன்றேந்தும்**
**கையனைக் கடல் சூழ் நாகைக்காரோணக் கோயில் கொண்ட**
**ஐயனை நினைந்த நெஞ்சேயம்மநா முற்றவாறே.**

**வெம்பனைக் கருங்கையானை வெருவவன்றுரிவை போர்த்த**
**கம்பனைக் காலாற் காய்ந்த காலனை ஞாலமேத்தும்**
**உம்பனை உம்பர்கோனை நாகைக்கா ரோணமேய**
**செம்பொனை நினைத்த நெஞ்சே திண்ணநா, முற்றவாறே.**

இங்கேயும் திருநாகைக்காரோணத் தானைத் துதிக்கும் போது வெம்பனைக் கரங்கையானை வெருவவன் றுரிவை போர்த்த சிவனே வைரவராக நாமமேந்தினார் என்பது விளங்குகிறது.

**24. மாயூரப் புராணம்**

**ஓங்குநாற் படை முன்னஞ்சு மொள்ளுகிர் படையுந் தேசு**
**வீங்குசக் கரமுன்னாள் வெம்படை அஞ்சுமஞ்சுந்**

**தாங்குசூற் படையுங் கொண்டோர் தலைக்கல நெந்தோரேற்ற**
**பாங்குசேர் வடுக்கப்புத்தேள் பதமலர்க் கன்பு செய்வாம்.**

ஓங்கிய சதுரங்கசேனைகளும் அஞ்சத்தக்க நகக் கூர்மையும் அழகிய சங்கு, சக்கரம், வாள், கோதண்டம், கதையாய ஐம்படையையும் பயப்படத்தக்க சூலாயுதத்தையும் தாங்கிக் கொண்டு பிரம்மகபாலத்தில் இரத்தம் கொட்டிப் பாய்ச்சும் பெருந்தகையனாம் வடுக நாதக் கடவுளின் பாத தாமரைக்கு அன்பு செலுத்துவாம்.

## 25. உறையூர்ப் புராணம்

**உலக மூன்றி னுக்குந்தானே யொருமுத தெரிந்தாங்**
**கலகிறீப் பொறிக டும்பி யலங்கமுத் தலைவேறாங்கி**
**வலனுடை மாயனாதி வானவர் செருக்கு மாறப்**
**பலருமுன் னஞ்ச நெயத்தோர் பலிக்கொண்டோன்**
**சரணஞ்சார்வாம்.**

சுவர்க்க, மத்திய, பாதாள மென்ற திரிலோகங்களுக்கும் தானே ஒரு முதல்வனெனத் தெரிவித்துக்கையில் அளவில்லாத தீப் பொறிகளைச் சிந்திப் பிரகாசிக்கும் முத்தலை வேலாயுதத்தை தாங்கி வலம்புரிச் சங்குமேந்திய மாயோன் முதலான வானவர்களின் கர்வமடங்கவும், அவர்கள் பற்பலவுமாகப் பயப்படவுமாக இரத்தப் பலி வாங்கும் வைரவக்கடவுளின் சரணார விந்தங்களைச் சார்ந்தடைவாம்.

## 26. திருவம்பர்ப் புராணம்

**சுவைமுனந் தெரிந்து பின்புதற் குதவுந்**
**தூத்தவ வேட்டுவர் பொருவச்**

**செவைமலர் கிழவன் றலைச்சுவை முன்னத்**
**தெரிந்து பின்னக் குதவுகிரு**
**நவை கொண்மா னெய்த் தோர்ச் சுவைமுனந் தெரிந்து**
**நயந்து பினத்தலைக் குதவுங்**
**கவைபடு திறற் சூலமுங்கரங் கொண்ட**
**கடவுடன் சேவடி போற்றி.**

முன்னே சுவை பார்த்த பின்னே தனக்குதவுங் கண்ணப்ப நாயனாரைப் போலச் செந்தாமரையனாகிய பிரமன் தலைச் சுவையை முன்னேயுணர்ந்ததால் பின்னும் வளர்ந்த நகமும், பழியா நின்ற திருமால் உதிரத்தைச் சுவைத்து முன்னமினிமையடைந்ததால் பின்னுமத்தகைய சமயங்கட்குதவா காரண பெற்றியுடைய சூலாயுதமும் கையிற் கொண்டேற்றும் வைரவக் கடவுளின் சேவடிகளைப் போற்றுவாம்.

## 27. திருவாளொளிப் புற்றூர்ப் புராணம்

**மறைகமழ் கபாலத் தோடு மாயவன் மேனிநெய் த்தோர்**
**துறைகமழ் கொடிய வெந்தீச் சூலமுங் கரத்திற்றாங்கி**
**முறைகமழ் உலகில் யார்க்குமூடிய பேருக்கு மாய்க்கு**
**மிறைகமழ் வடுகப் புத்தே ளிணையடிக்கன்பு செய்வாம்.**

பிரம்மாவின் கபாலவோட்டில் மகாவிஷ்ணுவின் உதிரத்தை வாங்கும் கொடிய வெந்தீச் சூலத்தைக் கையில் தாங்கிக் கொண்டு உலகத்திலே யாரார்க்கும் கர்வம் மூடியதோ அக்கர்வத்தை மாய்க்கும் இறைவனான வடுகப் பெருமானுடைய திருவடி இணைகளுக்கு அன்பு பூண்டு ஒழுகுவாம்.

## 28. விளத்தொட்டிப் புராணம்

**இருட்பெரு நிரய மேவற் கேது வாஞ் செருக்கு மேவில்**
**வெருட் பெருந் தண்டமேவு மகவுமென் றுணர்த்தி யாங்கு**

**மிருட் பெருஞ் செயலி னீங்கா மாலுடம்புரித்துப் போர்த்த**
**வருட்பெரு வடுகன் செம்பொனம்புயப் பாதம் போற்றி.**

அதியந்தகாரமான நரகம் அடைவதற்கு காரணமாம் கர்வத்தைப் படைத்தால் மிகவும் கொடுரமான தண்டனைக்குட்பட வேண்டுமென்று தெரிவித்துமயக்கமான கொடுஞ் செயல் விட்டு நீங்கா உக்கிர நரசிங்கத்தைப் பிளந்து தோலையுரித்துப் போர்த்த பேரருள் உடையோனாகிய வடுகக் கடவுளின் பொற்பாத கமலங்களைப் போற்றுவாம்.

## 29. கோயிலூர்ப் புராணம்

**தெருட்பெரு நலனை வாவித் தீவிர தரத்துற்றோர்க்கு**
**மருட் பெரு மாயை நூறி வல்வினைப் படலங் கீறிச்**
**பெருங் கொடிய துக்க நிவர்த்தியுஞ் சுகத்தின் பேறு**
**மருட்பெருஞ் செயலானல்கும் வடுகனையடைந்து வாழ்வாம்.**

தெளிந்ததோர் பேரின்பத்தை இச்சித்து தீவிர தாகத்தை அடைந்தோர்களின் பெரு மயக்கமான மாயையை அழித்து வல்வினை என்னும் படலத்தைக் கீறி சுருள் போல் பெருகுங் கொடுந்துக்க நிவாரணமும் பரமசுகத்தின் முத்திப் பேறும் திருவருட் செயலால் அருள்புரியும் வடுகக் கடவுளை அடைக்கலம் புகுந்து வாழ்வாம்.

## 30. திருக்குறுக்கைப் புராணம்

**ஆக்கும் வினைமலர வனதன் றென்றற**
**கவனுத் தமாங்க நான்குங்**
**காக்கும் வினைமாய வனதன் றென்றற்**
**கவன் மேனி கழிநெய் தோரும்**

**தாக்கும் வினையாள ருந்தேர் சான்றுரைக்கக்**
**கூர்கொளு கிர்ச்சாங்கத் தோடு**
**போக்கும் வினைச் சூற் படையுபாங்கமுங் கொள்**
**வடுகனடி போற்றி வாழ்வாம்.**

தாழ்ந்த சிறுத் தொண்டருமறிந்து சாட்சி கூற உண்டாக்கும் படைப்புத் தொழில் பிரம்ம தேவனுடையதல்ல வென்பதாய் அவனுடைய நான்கு முகம்மும் பாதுகாக்குந் திதித்தொழில் விஷ்ணுவினுடையதல்லவென்பதாய் அவனுடைய இரத்தம் ஒழுகும் தேகமும் விளங்கும் கூரிய நகவொழுங்கும் உயிரைப் போக்கத்தக்க சூலாயுதமேந்திய கையும் கொண்ட வைரவருடைய திருவடிகளைப் போற்றி வாழ்வாம்.

## 31. தனியூர்ப் புராணம்

**மறைபுகழ் தானேயோம்ப வயங்க கேத்திரத்தினெல்லை**
**பொறையுடல் விடுத்தோர் பாவப் புணர்ப்பினுக் கேற்றதண்டங்**
**குறையற வியற்று தண்டதரன்குறுகாது தானே**
**முறையுற வுஞற்றிப் போக்கு முதல்வனை வணக்கஞ் செய்வாம்.**

வேதங்களால் புகழ்ந்து கொண்டாடத் தக்க சிவபெருமான் கோயில் எல்லையருகில் உடலை விட்டிறந்தவர்களின் பாவ சம்பந்தத்துக் கீடான தண்டனையைக் குறைவில்லாமல் நிறைவேற்றும் எமன் நெருங்காத வண்ணம் எல்லாந்தானே நெறி முறையாகச்செய்து பாவத்தைப் போக்கி முத்தி தரும் வடுகநாதக் கடவுளை வணங்குவாம்.

நன்றி: .இரா.மயில்வாகனம்
வைரவமான்மியம்.

# ஸ்ரீ ஞானபைரவர் 108 போற்றி

| | | |
|---|---|---|
| ஓம் | ஞான பைரவனே | போற்றி |
| ஓம் | பயநாசகனே | போற்றி |
| ஓம் | அஷ்டரூபனே | போற்றி |
| ஓம் | அஷ்டமித் தோன்றலே | போற்றி |
| ஓம் | அயன்குருவே | போற்றி |
| ஓம் | அறக்காலனே | போற்றி |
| ஓம் | அகந்தையழிப்பவனே | போற்றி |
| ஓம் | அடங்காரின் அழிவே | போற்றி |
| ஓம் | அற்புதனே | போற்றி |
| ஓம் | அசிதாங்க பைரவனே | போற்றி |
| ஓம் | ஆனந்த பைரவனே | போற்றி |
| ஓம் | ஆலயக் காவலனே | போற்றி |
| ஓம் | இன்னல் பொடிப்பவனே | போற்றி |
| ஓம் | இடுகாட்டு இருப்பவனே | போற்றி |
| ஓம் | உக்ரபைரவனே | போற்றி |
| ஓம் | உடுக்கையேந்தியவனே | போற்றி |
| ஓம் | உதிரங்குடித்தவனே | போற்றி |
| ஓம் | உன்மத்த பைரவனே | போற்றி |
| ஓம் | உறங்கையில் காப்பவனே | போற்றி |
| ஓம் | ஊழித்தருள்வோனே | போற்றி |
| ஓம் | எல்லைத் தேவனே | போற்றி |
| ஓம் | எளிதில் இரங்குபவனே | போற்றி |
| ஓம் | கபாலதாரியே | போற்றி |
| ஓம் | கங்காள மூர்த்தியே | போற்றி |
| ஓம் | கர்வபங்கனே | போற்றி |
| ஓம் | கல்பாந்தபைரவனே | போற்றி |

ஓம் கதாயுதனே போற்றி
ஓம் கனல் வீசுங் கண்ணனே போற்றி
ஓம் கருமேக நிறனே போற்றி
ஓம் கட்வாங்கதாரியே போற்றி
ஓம் களவைக்குலைப்போனே போற்றி
ஓம் கருணா மூர்த்தியே போற்றி
ஓம் காலபைரவனே போற்றி
ஓம் காபாலிகர்தேவனே போற்றி
ஓம் கார்த்திகையில் பிறந்தவனே போற்றி
ஓம் காளாஷ்டமிநாதனே போற்றி
ஓம் காசிநாதனே போற்றி
ஓம் காவல் தெய்வமே போற்றி
ஓம் குரோத பைரவனே போற்றி
ஓம் கொன்றைப்பிரியனே போற்றி
ஓம் சண்ட பைரவனே போற்றி
ஓம் சட்டை நாதனே போற்றி
ஓம் சம்ஹார பைரவனே போற்றி
ஓம் சம்ஹாரகால பைரவனே போற்றி
ஓம் சிவத்தோன்றலே போற்றி
ஓம் சிவாலயத்திருப்போனே போற்றி
ஓம் சிக்ஷகனே போற்றி
ஓம் சீகாழித்தேவனே போற்றி
ஓம் சுடர்ச்சடையனே போற்றி
ஓம் சுதந்திர பைரவனே போற்றி
ஓம் சிவ அம்சனே போற்றி
ஓம் சுவேச்சர பைரவனே போற்றி
ஓம் சூலதாரியே போற்றி
ஓம் சூழ் வினையறுப்பவனே போற்றி

| | | |
|---|---|---|
| ஓம் | செம்மேனியனே | போற்றி |
| ஓம் | ஷேத்ரபாலனே | போற்றி |
| ஓம் | தனிச்சன்னதியுளானே | போற்றி |
| ஓம் | தலங்களின் காவலனே | போற்றி |
| ஓம் | தீதழிப்பவனே | போற்றி |
| ஓம் | துஸ்வப்னநாசகனே | போற்றி |
| ஓம் | தெற்கு நோக்கனே | போற்றி |
| ஓம் | தைரியமளிப்பவனே | போற்றி |
| ஓம் | நவரஸரூபனே | போற்றி |
| ஓம் | நரசிம்மரூபனே | போற்றி |
| ஓம் | நள்ளிரவு நாயகனே | போற்றி |
| ஓம் | நரகம் நீக்குபவனே | போற்றி |
| ஓம் | நாய் வாகனனே | போற்றி |
| ஓம் | நாடியருள்வோனே | போற்றி |
| ஓம் | நிமலனே | போற்றி |
| ஓம் | நிர்வாணனே | போற்றி |
| ஓம் | நிறைவளிப்பவனே | போற்றி |
| ஓம் | நின்றருள் வோனே | போற்றி |
| ஓம் | பயங்கர ஆயுதனே | போற்றி |
| ஓம் | பகையழிப்பவனே | போற்றி |
| ஓம் | பரசு ஏந்தியவனே | போற்றி |
| ஓம் | பலிபீடத்துறைவோனே | போற்றி |
| ஓம் | பாபக்ஷயனே | போற்றி |
| ஓம் | பாசம் குலைப்போனே | போற்றி |
| ஓம் | பால பைரவனே | போற்றி |
| ஓம் | பாம்பணியனே | போற்றி |
| ஓம் | பிரளயகாலனே | போற்றி |
| ஓம் | பிரம்மசிரச்சேதனே | போற்றி |

| | | |
|---|---|---|
| ஓம் | பூஷண பைரவனே | போற்றி |
| ஓம் | பூதப்ரேதநாதனே | போற்றி |
| ஓம் | பெரியவனே | போற்றி |
| ஓம் | பைராகியர்நாதனே | போற்றி |
| ஓம் | மல நாசகனே | போற்றி |
| ஓம் | மஹா பைரவனே | போற்றி |
| ஓம் | மணிஞானனே | போற்றி |
| ஓம் | மகர குண்டலனே | போற்றி |
| ஓம் | மகோதரனே | போற்றி |
| ஓம் | மார்த்தாண்ட பைரவனே | போற்றி |
| ஓம் | முக்கண்ணனே | போற்றி |
| ஓம் | முனிஸ்வரனே | போற்றி |
| ஓம் | மூலமூர்த்தியே | போற்றி |
| ஓம் | யமவாதனை நீக்குபவனே | போற்றி |
| ஓம் | யாவர்க்கும் எளியனே | போற்றி |
| ஓம் | ருத்ரனே | போற்றி |
| ஓம் | ருத்ராஷதாரியே | போற்றி |
| ஓம் | வடுக பைரவனே | போற்றி |
| ஓம் | வடுகூர்நாதனே | போற்றி |
| ஓம் | வடகிழக்கருள்வோனே | போற்றி |
| ஓம் | வடைமாலைப்பிரியனே | போற்றி |
| ஓம் | வாரணாசி வேந்தே | போற்றி |
| ஓம் | வாமனர்க்கருளியவனே | போற்றி |
| ஓம் | விபீஷண பைரவனே | போற்றி |
| ஓம் | வீழாமல் காப்பவனே | போற்றி |
| ஓம் | ஸ்வர்ண வயிரவனே | போற்றி போற்றி |

உ
சிவமயம்

# வைரவக் கடவுள்

பிரதிஷ்டா கலாநிதி வேதமாமணி
ஈசான சிவசிவ ஸ்ரீ சி.குஞ்சிதபாதக் குருக்கள்
பிரதம சிவாசாரியார் - ஸ்ரீ பொன்னம்பலவாணேஸ்வரர்
தேவஸ்தானம்

வைரவ மூர்த்தம் சிவாம்ச மூர்த்தமாகும். இம்மூர்த்தம் சம்ஹாரருத்திரர் எனவும் கூறப்படும். வைரவக் கடவுள் சத்துவ தாமச குணத்தவர், உடற்பற்றை விட்டபடியால் வைரவர் நிர்வாண கோலத்துடன் உள்ளார். வினை நீங்கும் போது உடற்பற்றும் நீங்குகிறது. அவற்றை அழிக்கும் கோலத்தைக் காட்டுவதே நிர்வாண வடிவம் ஆகும். இவ்வடிவமானது கோரரூபங் கொண்ட வடிவமாக உள்ளமையை நாம் நோக்கலாம்.

## வைரவ கோயில்

ஆலயங்களில் வடக்குக்கும் வடகிழக்குக்கும் இடைப்பட்ட இடத்தில் பரிவார மூர்த்தியாக வைரவக் கடவுள் எழுந்தருளி இருந்து அருளிபாலிப்பதை நாம் அறிவோம். அங்கு வைரவ விக்கிரகம் அல்லது திரிசூலம் பிரதிட்டை செய்யப்பட்டிருக்கும். அவரே ஆலயத்தின் காவலர் ஆனமையின் அவர் ஷேத்திரபாலர் என அழைக்கப்படுகிறார். காசியில் கால வைரவராகவும் சிதம்பரத்தில் சுவர்ண வைரவராகவும் சிறப்பாகக் காட்சியளிக்கிறார். எமது நாட்டில் பெரும்பாலும் ஞானவைரவ வழிபாடு எங்கும் உள்ளது. சிதம்பரத்து பொன்னம்பலத்தின் பெயரைத் தாங்கிச் சிவாகம முறைகளுக்கமைய

பெருங்கோவிலாகக் கொழும்பில் உள்ள ஸ்ரீ பொன்னம் பலவாணேஸ்வரத்தில் ஷேத்திரபாலருக்கு அருகே சுவர்ணவைரவர் அம்பாளுடன் அருட்கோலங் கொண்டு பரிவார மூர்த்தியாக உள்ளமையை இங்கு காணலாம். தனி வைரவ ஆலயங்களாக ஞானவைரவர், நரசிங்க வைரவர் போன்ற ஆலயங்கள் இலங்கையில் உள்ளன.

### காவற் தெய்வம்

வைரவ வழிபாடு இலங்கையில் இயற்கையோடிணைந்த ஓர் வழிபாடாக உள்ளமையையும் நாம் காணமுடியும். ஆகமங்களில் கூறப்பட்டுள்ளவாறு அவர் கிராமபாலகர், ஊர்ப்பாதுகாவலர். ஆகவே பிள்ளையார் கோவில்களைப் போல வைரவ கோவில்களும் கிராமங்கள் தோறும் உள்ளன. இலந்தையடி வைரவர், புளியடிவைரவர், ஆலடி வைரவர், காட்டுவைரவர் என்று மரங்களுக்கு மத்தியில் ஆலயங்கள் அமைக்கப்பட்டு சகலரும் இந்தக் காவற் தெய்வத்தை வழிபடும் வழக்கம் இன்றும் எம்மத்தியில் உள்ளது.

### வைரவ வழிபாடு

ஆலயங்களில் விசேட கிரியைகள் ஆரம்பமாகும் போது வைரவ வழிபாடுகள் சிறப்பாகச் செய்யப்படுகின்றன. கிராமசாந்தியில் எட்டுத்திக்குப் பாலகர்களையும் வைரவரையும் சாந்திப்படுத்த மந்திரபூர்வமான பூசைகளுடன் நீற்றுப்பூசணி வெட்டுதல், வடைமாலை சாத்துதல், சாதம், வெற்றிலை பாக்கு, பழம், எலுமிச்சம் பழம் போன்றவற்றை அர்ப்பணித்து வழிபாடுகள் செய்யப்படுகின்றன. இதே போன்றே வாஸ்து சாந்தியின் போதும் வைரவ வழிபாடுகள் செய்யப்படுகின்றன.

கோவிற் கட்டட அத்திவாரம், உற்சவ ஆரம்பம், புதிய தேர் அமைப்பு தேர்த் திருவிழா, உற்சவ முடிவு. புதிய வீடு கட்ட அத்திவாரம் போடுதல், வீடு கட்டுதல் போன்ற பல்வேறு காலங்களிலும் வைரவருக்கு உரிய முறையிலான வழிபாடுகள் செய்யப்பட்டு அவரது அநுக்கிரகத்தைப் பெற்ற பின்பே கிரியைகள் ஆரம்பிக்கப்படுகின்றன.

## நித்திய பூஜை

வைரவக் கடவுளுக்குக் காலையிலும் மாலையிலும் பூசைகள் உள்ளன. அர்த்த ஜாமப் பூசையிலும் அதிகாலைப் பூசையிலும் வைரவசுவாமிக்கு விசேட பூசைகள் நிகழ்கின்றன. அர்த்த ஜாமப் பூசையிலேயே எல்லா ஆலயங்களும் பூட்டப்பட்டு ஆலயத்திறப்புகள் வைரவரிடம் ஒப்படைக்கப்படுகின்றன. அப்போது சாதம், வடை, வெற்றிலை, பாக்கு, பழம் என்பன. நைவேதிக்கப்பட்டு கோயிலையும், ஊரையும் பாதுகாத்தருளும்படி வேண்டப்படுகின்றது. அதனை முத்திரா தண்ட வழிபாடு எனவும் அழைப்பர். முத்திரை திறப்பு என்பதைக் கவசம் எனவும் கொள்ளலாம். காலையில் கோவில் திறக்கப்படும் போது பசும்பால், தாம்பூலம், பழம் என்பன நைவேதிக்கப்படுகின்றன. அவரது அனுமதியுடன் திறப்புகளை எடுத்து முதலில் பள்ளியறை திறக்கப்படுகிறது. இவ்வேளையில் மூர்த்தி, சாந்நித்தியம் பெறுகின்றதெனலாம்.

## விரத நாட்கள்

சித்திரைப்பரணி, ஐப்பசிப்பரணி, தைமாத முதல் செவ்வாய் முதல் அதாவது ஒவ்வொரு செவ்வாயும் ஆகிய தினங்கள் வைரவ சுவாமிக்கான விரத நாட்களாகும். இக்காலங்களில்

முறைப்படி விரதமிருந்து சிவப்புப்பட்டு, சிவப்புமாலை, வடைமாலை என்பனவற்றைச் சாத்தி வழிபாடுகள் செய்து விரதத்தை நிறைவேற்றலாம்.

**வைரவ பொங்கல்**

ஏலவே கூறிய விரத நாட்களிலும், மாதப்பிறப்பு, வெள்ளிக்கிழமைகளிலும், விசேடமாக தைப்பொங்கல், சித்திரை வருடப்பிறப்பு தினங்களிலும் வைரவ சுவாமிக்கு சிறப்பாகப் பொங்கல் படைக்கப்படுகின்றது. பொங்கல் படையலுடன்பெருமடை போடப்படுவது வழக்கம். வாழைக்குலை, பலாப்பழம், மாம்பழம், எலுமிச்சம்பழம், தாம்பூலம், வடை, முறுக்கு, அப்பம் முதலான பல்வேறு நைவேதனப் பொருட்கள் மடையில் சிறப்பாக இடம் பெறுவது ஓர் சிறப்பாகும்.

**புராண நோக்கு**

முன்னொருகால் தேவரும், முனிவரும் திருமாலிடமும் திசைமுகனிடமும் கடவுள் யார் என்பதைக் கூறும்படி விண்ணப்பித்தனர். அவர்கள் தாமே முழு முதற் கடவுள் எனக் கூறினர். அவ்வேளையில் வேதமும் பிரணவமும் நீங்கள் தர்க்கிக்க வேண்டாம், சிவபெருமான் ஒருவரே முழுமுதற் கடவுள் எனக்கூறினர். இவர்களது மமதையை அடக்கச் சிவபிரான் ஜோதி வடிவெடுத்து அதனுள்ளே சிவபார்வதி வடிவத்தைக் காட்டினார். அதனைக் கண்டு விஷ்ணு வணங்கினார். ஆனால் சிவபெருமானைப் போலவே எனக்கும் ஐந்து தலைகள் உள்ளன எனத் தனது உச்சிச் சிரசால் சிவபிரானை பிரமா இகழ்ந்தார். சிவபிரான் முன் ஒருகால் தாருகனைக் கொன்ற சக்தியின் கோபத் தீ குழந்தையுருக் கொண்டது. காளி அதை

வளர்த்தாள். அதைச் சிவன் இருதயத்தில் ஒடுக்கி வைத்திருந்தார். அந்தச் சக்தியை வைரவ மூர்த்தியாக இருதயத்திலிருந்து தோற்றுவித்தார். இந்த மூர்த்தி சிவமூர்த்தியின் சகல அம்சங்களையும் கொண்டு விளங்கிற்று. சிவபிரானின் ஆஞ்ஞைப்படி வைரவர் நீல நிறத்திருமேனியுடன் சூலம், பாசம், பரசு, உடுக்கு என்பவற்றைக் கரங்களிலேந்தி மூன்று கண்களுடனும் இரத்த நிறச் சுவாலை போன்ற சடையுடனும் உக்கிரரூபியாகி நிர்வாணக் கோலத்துடன் காட்சி கொடுத்தார். வேத வடிவான நாயைத் தமது வாகனமாகக் கொண்டிருந்தார். சிவபெருமானின் அருளாணைப்படி பிரமாவின் ஒரு சிரசினைக் கொய்து அவரது அகந்தையை அடக்கினார்.

மேருமலையில் இருந்து நீங்கி வைரவர் தேவர் முனிவர்களின் பிக்ஷையை ஏற்றார். அவர்கள் உயிர்த்தெழுந்தனர். வைகுண்டத்தில் விஷ்ணுவுக்கு உயிர் கொடுத்தார். பிரம்மா படைத்தற்கடவுள் அல்லவா? ஆகவே அவரது சிரசைக் கொய்த இரத்தம் உலகெங்கும் சென்றது. அதனைத் தமது நெற்றி விழியால் வைரவர் வற்றச் செய்தார். வைரவர் பன்னிரண்டு வருடங்கள் பிரமகத்தியை ஏற்று எல்லாவுலகுஞ் செல்கையில் வைகுண்டமுஞ் சென்றார். அங்கு வைரவரை விஷ்வசேனர் எதிர்த்தார். அவரைத் தமது சூலத்தால் கொய்து தூக்கிக் கொண்டு விஷ்ணு மூாத்தியிடஞ் செல்ல அங்கு விஷ்ணுவின் சிரசிலிருந்து ஆயிரம் தேவ வருடம் உதிரம் சொரியவே விஷ்ணு மூர்ச்சித்தார். இதனைக் கண்ணுற்ற பூமாதேவி வைரவரை வேண்டவே விஷ்ணுவுக்கு உயிர் கொடுத்து காசி சேத்திரஞ் சென்று கபாலத்தை விட்டு அங்கு காலவைரவராக எழுந்தருளினார்.

சிவபெருமானின் ஆஞ்ஞைப்படி சர்வசம்ஹார காலத்தில் வேதப் பொருளைக் கொண்ட நாயை வாகனமாக்கிக் கொண்டு தீமைகளை தமது நெற்றிக் கண்ணினால் உலகில் இல்லாமற் செய்தார் வைரவக் கடவுள்.

**சிறப்பம்சம்**

வைரவர் காவற் தெய்வம், வீட்டுக் காவல், ஊர்க்காவல், கோயிற் காவல் போன்றவை அவரின் சிறப்பம்சங்களாகும். உலகில் நோய், பிணி ஏற்பட்டாலும் அவர் பிணிதீர்க்கும் வைரவராக உள்ளார். யாத்திரை செல்பவர்களும், தூர இடங்களுக்குச் செல்பவர்களும் வைரவரின் நூலினைக் கட்டிக் கொண்டு செல்வர். காசியில் காலவைரவரின் கறுப்பு நூல் எல்லோராலும் பக்தியுடன் அணியப்படுகிறது.

சகல விதத்திலும் சிவப் பொலிவுடன் காவல் செய்து எல்லோருக்கும் அருள் பாலிக்கும் வைரவ சுவாமியை நாம் விரத அநுட்டானங்களுடன் வழிபட்டு இஷ்ட சித்திகளைப் பெறுவோமாக.

**பரமனை மதித்திடாப் பங்கயாசனன்**
**ஒருதலை கிள்ளியே ஒழிந்த வானவர்**
**குருதியும் அகந்தையும் கொண்டு தண்டமுன்**
**புரிதரு வடுகனைப் போற்றி செய்குவாம்.**

சுபம்

# தில்லையில் காலவைரவர்

ஸ்ரீ நடராஜர் இருக்கும் இடத்திற்குக் கீழ்ப்புறம் சிற்சபையில் உள்ள மூர்த்தி தான் காலபைரவர். முன்னாளிலே இந்த மூர்த்தி நாள்தோறும் பூசை செய்பவர்கட்கு பொன்னாலாய காசு (படிக்காசு) வழங்கியதால் இந்த மூர்த்திக்குச் சுவர்ண காலபைரவர் என்றும் பெயர் சொல்வர். இப்போது பொற்காசு வழங்கி வருவது இல்லையெனினும் பெயர் வழக்கம் தொடர்ந்து நிலவி வருகிறது. இந்த மூர்த்திக்குத் தனிப்பட வேண்டுதல் செய்து கொண்ட அன்பர்கள் அபிஷேகஞ் செய்து வடைமாலை சாத்தி விசேட வழிபாடுகள் செய்வர். சந்திரமௌலீசுர ஸ்படிக லிங்கத்துக்கு ஆறுகால அபிஷேகம் நடக்கும் போது மட்டுமே இதற்கு அபிஷேகம் செய்வர். மற்ற நேரங்களில் செய்யும் வழக்கம் இல்லை.

காசியில் இறந்தவர்களுக்கு எமவாதனை இல்லை என்றும் அங்குள்ள காலவைரவருடைய சூலத்தின் நுனியிலே எண்ணில் காலம் நரகங்களில் கிடந்து அனுபவிக்கும் துன்பங்களைச் சிறிய நேரத்தில் அகல்வித்து வீடு பேறெய்தும் நிலை எய்துவர் என்பது வழக்கம்.

அதனையொட்டிச் சிதம்பரத்திலுள்ள ஆன்மாக்கள் எண்ணில் காலம் அனுபவிக்கும் நரக வேதனைகளை இந்தக் கால வைரவருடைய சூலநுனியால் நொடிப் பொழுதில் அனுபவித்த பின்பு வீடுபேறெய்துவர் என்று புராணம் கூறுகிறது.

உ

# காசி விஸ்வநாதரும் பைரவரும்

கோயிலுக்குச் சென்று திரும்பும் போது நாம் சண்டேஸ்வரரிடம் கையைத் தட்டி விடைபெற்று வணங்கி வருகின்றோம். அதைப் போல காசிக்குச் சென்று திரும்புகிற பக்தர்கள் விடை பெற வேண்டிய முக்கியமான ஆலயம் காலபைரவர் ஆலயம். இது விசுவேசுவரர் ஆலயத்துக்கு வடக்கே ஒருமைல் தொலைவில் இருக்கிறது. காசிப் பட்டணத்துக்கு இவர் தான் காவற்காரர் என்று சொல்லுவார்கள்.

காலவைரவ மூர்த்திக்கு நாய் தான் வாகனம். சூலமும் உடுக்கையும் மழுவும், பாசக்கயிறும் ஏந்திய ஈசனின் திருவுருவமாகவே காலபைரவரைக் கருதுகிறார்கள். அவர் உள்ள இடத்தில் யமனும் இல்லை என்பது ஐதீகம். நாம் செய்த பாவங்களை அவர் போக்கி விடுவதாக நம்பிக்கை உண்டு. ஆலயத்தில் இதற்காக நம்மை மயில் இறகால் தட்டி ஆசிர்வதிக்கிறார்கள். கையில் காசிக் கயிறு கட்டிவிடுகிறார்கள். இது தோஷங்களை நீக்குவதற்கு உரியது என்று கூறுகிறார்கள். இந்தியாவிற்கு யாத்திரைக்காகப் போய் வருபவர்கள் கண்டிப்பாகக் கொண்டு வருவனவற்றுள் காசிக் கயிறு முக்கிய இடம் பெறுகிறது. இக்கயிறு பல ஆண்டுகளுக்கு அறுந்து போகாமல் இருக்கும் தன்மை கொண்டது. இதைக் கையில் கட்டிக்கொண்டால் ஒரு காப்பு ஏற்பட்டது போன்ற உணர்வு உண்டாகிறது. வைரவக் கடவுளுக்கு எந்த அளவு வணக்கம் நடைபெறுகிறதோ அதேபோல அவருடைய அவதார தெய்வமான காளிமாதாவின் ஆலயத்துக்கும் உண்டு. வாள், சூலம், வில், அம்பு ஆகியவற்றை ஏந்திய அம்பிகை இவர் மகிஷாசுரமர்த்தனியான சக்தி வடிவமாகத்தோன்றுகிறாள்.

கால வைரவரைத் தரிசிக்காமல் காசியில் இருந்து திரும்பக் கூடாது என்ற நம்பிக்கை இப்போதும் உண்டு. வைரவருக்கு வாகனம் நாய் என்பதால் இங்கே நாய்க்கு அன்னமிடுவது விசேடமாகக் கருதப்படுகிறது.

கபீர், துளசிதாசர், ஜெயதேவர், ஆதிசங்கரர் போன்ற மகான்களின் காலடி பட்டபூமி, கங்கைக்கரையில் ஈசனே தேவியுடன் நடனம் ஆடியதாக சாஸ்திரங்கள் கூறுகின்றன. வாழ்வில் ஒரு முறையாவது கங்கையில் நீராடி காசியில் ஆலயங்களை தரிசிக்க வேண்டியது ஒவ்வொரு இந்துவினதும் கடமையாகும்.

வைரவர் திருவுருவம் கோரமூர்த்தமாகும் இவர் செஞ்சடையும் முக்கண்ணும் நீலத்திருமேனியும் கொண்டவர். சூலம், பிரமகபாலம், பாசம், உடுக்கை ஆகிய நான்கையும் திருக்கரங்களில் ஏந்தியவர். கோபக்குறிப்புடன் கூடிய சிரிப்பு கொண்ட திருமுகத்தினர். சிவத்தினின்றும் தோன்றிய காரணத்தால் சிவகுமாரனாகவே இவர் கருதப்படுகிறார். வைரவருக்கு ஊரின் பாதுகாப்பின் பொருட்டும், துன்ப நீக்கத்தின் பொருட்டும், பிணி நீக்கத்தின் பொருட்டும். பாயசான்னியத்தால் பலி சமைக்க வேண்டும் என்று ஆகமங்கள் கூறுகின்றன. இன்றளவும் காசித்திருத்தலமும், கங்கை நீராட்டும் காலவைரவர் வழிபாடும் அவர் திருவடிகளில் சார்த்தி எடுக்கும் காசிக்கயிறு அணிந்து பேறு பெறுதலும் தமிழ் மக்களால் போற்றப் பெறுவன. தமிழ் நாட்டுக்குப் பன்னூறு கல் தொலைவில் உள்ள காசித் திருத் தலத்து வைரவரை ஸ்ரீ சிவஞான தேசிக சுவாமிகள் போற்றிப் பாடிய திருவருட்பா தமிழ் நாட்டிலும் வைரவர் தோத்திரமாக விளங்குகிறது.

# ஸ்ரீகால பைரவாஷ்டகம்

காசியிலுள்ள கால பைரவரைக் குறித்து

## ஸ்ரீ சங்கராச்சாரியர்

அருளிச்செய்த ஸ்தோத்திரம்

தேவராஜ ஸேவ்யமாந பாவநாங்க்ரி பங்கஜம்
வ்யால யக்ஞஸூத்ர மிந்துசேகரம் க்ருபாகரம்/
நாரதாதி யோகிப்ருந்த வந்தினம் திகம்பரம்
காசிகாபுராதி நாத காலபைரவம் பஜே//

பானுகோடி - பாஸ்வரம் பவாப்தி காரகம்பரம்
நீலகண்ட - மீப்ஸிதார்த - தாயகம் த்ரிலோசனம்/
காலகால - மம்புஜாக்ஷ மக்ஷசூல மக்ஷரம்
காசிகா புராதிநாத காலபைரவம் பஜே//

சூலடங்க - பாச - தண்ட பாணி மாதிகாரணம்
ச்யாமகாய - மாதிதேவ மக்ஷரம் நிராமயம்/
பீமவிக்ரமம் ப்ரபும் விசித்ர - தாண்டவப்ரியம்
காசிகா புராதிநாத காலபைரவம் பஜே//

புக்திமுக்தி தாயகம் ப்ரசஸ்த சாருவிக்ரஹம்
பக்தவத்ஸலம் ஸ்திதம் ஸமஸ்தலோக - விக்ரஹம்/
நிக்வணன் - மனோஜ்ஞஹேம - கிங்கிணி லஸத்கடிம்
காசிகா புராதிநாத காலபைரவம் பஜே//

தர்மஸே பாலகம் த்வதர்மமார்க்க நாசகம்
கர்மபாசமோசகம் ஸுசர்மதாயகம் விபும்/

ஸ்வர்ணவர்ண சேஷபாச - சோபிதாங்கமண்டலம்
காசிகா புராதிநாத காலபைரவம் பஜே//

ரத்னபாதுகா - ப்ரபாபிராமபாத யுக்மகம்
நித்யமத்வீதிய - மிஷ்டதைவதம் நிரஞ்ஜனம்/
ம்ருத்யுதர்ப்ப - நாசகம் கராலதம்ஷ்ட்ர - மோக்ஷணம்
காசிகா புராதிநாத காலபைரவம் பஜே//

அட்டஹாஸ - பின்ன பத்மஜாண்ட - கோசஸந்ததிம்
த்ருஷ்டிபாத நஷ்டபாப ஜாலமுக்ரசாஸனம்/
அஷ்டஸித்தி - தாயகம் கபாலி மாலிகந்தரம்
காசிகா புராதிநாத காலபைரவம் பஜே//

பூதஸங்க - நாயகம் விசாலகீர்த்திதாயகம்
காசிவாஸ - லோகபுண்ய பாபசோதகம் விஷம்/
நீதிமார்க்க கோவிதம் புராதனம் ஜகத்பதிம்
காசிகா புராதிநாத காலபைரவம் பஜே//

காலபைரவாஸ்டகம் படந்தி யே மனோஹரம்பீ
ஜ்ஞானமுக்திஸாதனம் விசித்ர - புண்ய வர்த்தனம்/
சோகமோஹ தைனலோப கோபதாபநாசனம்
தே ப்ரயாந்தி காலபைரவாங்க்ரிஸந்நிதிம் த்ருவம்//

**ஸ்ரீ காலபைரவாஷ்டகம் ஸம்பூர்ணம்**

# ஸ்ரீகால பைரவாஷ்டகம்

காசியிலுள்ள கால பைரவரைக் குறித்து ஸ்ரீ சங்கராச்சாரியர்
அருளிச்செய்த ஸ்தோத்திரத்தின்
தமிழாக்கம்

1. தேவேந்திரனால் பூசிக்கப்படுகின்றவரும், பாவத்தை நீக்கி அருளுகின்ற தாமரை மலர் போன்ற திருவடியும், சர்ப்பமாகிய யஞ்ஞோ பரீதத்தையும் இளம் பிறைச் சந்திரனைத் தரித்தவரும். கிருபைக்கடலும் நாரதர் முதலிய முனிவர்களால் நன்கு சேவிக்கப்படுபவரும் நிர்வாணியுமாகிய காசிப்பதியில் எழுந்தருளி இருப்பவரும் எப்பொருட்கும் இறைவருமாகிய காலபைரவரை வணங்குகிறேன்.

2. கோடி இளஞ்சூரியர்களை ஒத்த திருமேனியும், பிறவிப்பிணியை நீக்குகிறவரும், பிரணவப் பொருளாயும், பரம்பொருளாயும், உள்ள நீலகண்டராகிய சிவபெருமானால் விரும்பத் தகுந்த நாயகரும், மூன்று திருக்கண்களையுடையவரும், காசிப்பதியில் எழுந்தருளியிருப்பவரும் ஆகிய காலபைரவரை வணங்குகிறேன்.

3. சூலம், உடுக்கு, பாசம், தண்டம் இவற்றைத் திருக்கரத்திலே ஏந்திய ஆதிகர்த்தாவும் கரிய திருமேனியை உடையவரும் பிரணவப் பொருளாய் உள்ளவரும், நிர்மலரும். மிக்க பெலசாலியும், பிரபுவும், நூதனமான தாண்டவத்தில் பிரியருமாகியவரும் காசியில் எழுந்தருளியிருப்பவருமாகிய காலபைரவரை வணங்குகிறேன்.

4. புத்தி, முக்தி, ஆகிய மோட்ஷத்திற்கு இருப்பிடமானவரும், தெளிவான அழகிய திருமேனியை உடையவரும் கிருபைக்கடலும், மங்களமானவரும், சகல லோகத்தவராலும் வந்திக்கப்படுபவரும், பொன்னாலான கிங்கிணி மாலைகள் இலங்குகின்ற இடுப்பை உடையவருமாகிய காசிப்பதியில் எழுந்தருளியிருக்கும் காலபைரவரை வணங்குகிறேன்.

5. புண்ணியமாகிய, சே வாகிய காசியைக் காப்பாற்றுபவரும் புன்னெறி செல்லும் மார்க்கத்தை நாசம் செய்கிறவரும், கர்ம பாசத்தை நீக்குகிறபவரும் நிர்மலரும், செஞ்சுடர் வர்ணத்தை ஒத்த குற்றமற்ற கேச பாரத்தால் ஸோபிக்கிறவரும் காசிப்பதியில் எழுந்தருளியிருப்பவருமாகிய காலபைரவரை வணங்குகிறேன்.

6. இரத்தினமயமான மிதியடிகளால் பிரகாசிக்கின்ற இரு திருவடிகளையுடையவரும் நித்தியரும், குல தெய்வமும், நிர்மலரும், ஆகியவரும் காசிப்பதியில் எழுந்தருளி இருப்பவருமாகிய காலவைரவரை வணங்குகிறேன்.

7. அட்டகாசச் சிரிப்பையுடையவரும், திட்டி தோஷத்தை நீக்குபவரும் உக்கிரமான பாவக்கூட்டத்தை நீக்குபவரும் அட்ட சித்திகளை கொடுப்பவரும் பிரம்ம கபால மாலையைத் தரித்தவரும் காசியில் எழுந்தருளி இருப்பவரும் ஆகிய காலபைரவரை வணங்குகிறேன்.

8. பூதக் கூட்டத்திற்குத் தலைவரும், விசாலமான புகழுக்கு இருப்பிடமானவரும் காசிப்புண்ணிய ஷேத்திரத்தில் வசிப்பவர்கள் புண்ணிய பாவங்களை பரீட்சிக்கிறவரும், மலமற்றவரும், நீதிமார்க்கத்திற்குத் தலைவரும் பழைமையானவரும் உலக கர்த்தாவுமாகியவரும் காசிப்பதியில் எழுந்தருளி இருப்பவருமாகிய கால வைரவரை வணங்குகிறேன்.

9. எவனொருவன் மனப்பிரீதியோடு கால வைரவ தோத்திரத்தைப் பாராயணஞ் செய்கிறானோ அவனுக்கு ஞானம், முத்தி, சாதகமாகும். நல்ல புண்ணியம் விருத்தியடையும், இன்பம், ஆசை, கோபம், தாபம், நாசமடையும் அவர்கள் காலவைரவருடைய உலகத்தைச் சென்றடைவர்.

தமிழாக்கம்

கு.வை.சி ஸ்ரீ கனகசபைக்குருக்கள்

அச்சுவேலி.

# பிரயோக ஜோதி

இந்த ஸ்வர்ணாகர்ஷண பைரவ அஷ்டகம் செழிப்பைத் தருவது. வெள்ளிக்கிழமை, திங்கட் கிழமை இரண்டு நாட்களிலும் சந்தியா காலங்களில் படிப்பவர்கள் வாழ்க்கையில் வெற்றியையும் தனவிருத்தியையும் அடைவார்கள்.

பௌர்ணமியன்று இரவு எட்டு மணிக்கு தீபத்தை ஏற்றிக்கொண்டு பதினெட்டுத் தடவை பாராயணம் செய்ய வேண்டும். இவ்விதம் ஒன்பது பௌர்ணமி பாராயணம் செய்தால் கண்டிப்பாக தன வரத்தை அடைவார்கள். நீண்ட நாளாக பிடித்துக் கொண்ட வறுமையிலிருந்து விடுபடுவார்கள். ஒன்பதாவது பௌர்ணமியன்று அவலில் பாயாசம் செய்து நிவேதிக்கலாம். வசதிக்கும் வாய்ப்புக்கும் ஏற்ப நிவேதனப் பொருளைக் கூட்டிக் கொள்ளலாம். அளவற்ற கீர்த்தியையும், தனத்தையும் தரும் இந்த பௌர்ணமி பூஜையை விடாமல் செய்பவர்களுக்கு சந்தோஷம் நிரந்தரமாக இருக்கும்.

தீராத நோய், மன, உடல், சிந்தனை பாதிப்புக்கள் மற்றும் கடன் பிணி, வறுமை நிவர்த்தியாகி காரியத் தடையின்றி தொழில் சிறக்கவும், சுவர்ணாகர்ஷண பைரவ அனுக்கிரகம் ஏற்படவும், பயம், பீதி, செய்வினை, பில்லி, சூனிய, ஏவல் பாதிப்புக்களிலிருந்து நிவர்த்தி தெய்வமாம் ஸ்ரீ பைரவ வழிபாடு தேய்பிறை அஷ்டமியில் உத்தமமாகும்.

# ஸ்வர்ணாகர்ஷண
# பைரவ அஷ்டகம்

தனந்தரும் வயிரவன் தளிரடி பணிந்திடின்
        தளர்வுகள் தீர்ந்து விடும்
மனந்திறந் தவன்பதம் மலரிட்டு வாழ்த்திடின்
        மகிழ்வுகள் வந்து விடும்
சினந்தவிர்த் தன்னையின் சின்மயப் புன்னகை
        சிந்தையில் ஏற்றவனே
தனக்கிலை யீடு யாருமே என்பான்
        தனமழை பெய்திடுவான்

வாழ்வினில் வளந்தர வையகம் நடந்தான்
        வாரியே வழங்கிடுவான்
தாழ்வுகள் தீர்ந்திட தளர்வுகள் மறைந்திட
        தானென வந்திடுவான்
காழ்ப்புகள் தீர்த்தான் கானகம் நின்றான்
        காவலாய் வந்திடுவான்
தனக்கிலை யீடு யாருமே என்பான்
        தனமழை பெய்திடுவான்.

முழுநில வதனில் முறையொடு பூஜைகள்
        முடித்திட அருளிடுவான்
உழுதவன் விதைப்பான் உடமைகள் காப்பான்
        உயர்வுறச் செய்திடுவான்
முழுமலர்த் தாமரை மாலையை ஜெபித்து
        முடியினில் சூடிடுவான்

தனக்கிலை யீடு யாருமே என்பான்
    தனமழை பெய்திடுவான்

நான்மறை ஓதுவார் நடுவினில் இருப்பான்
    நான்முகன் நானென்பான்
தேனினில் பழத்தைச் சேர்ந்தவன் ருசிப்பான்
    தேவைகள் நிறைத்திடுவான்
வான்மழை எனவே வளங்களைப் பொழிவான்
    வாழ்த்திட வாழ்த்திடுவான்
தனக்கிலை யீடு யாருமே என்பான்
    தனமழை பெய்திடுவான்

பூதங்கள் யாவும் தனக்குள்ளே வைப்பான்
    பூரணன் நான்என்பான்
நாதங்கள் ஒலிக்கும் நால்வகை மணிகளை
    நாணினில் பூட்டிடுவான்
காதங்கள் கடந்து கட்டிடும் மாயம்
    யாவையும் போக்கிடுவான்
தனக்கிலை யீடு யாருமே என்பான்
    தனமழை பெய்திடுவான்

பொழில்களில் மணப்பான் பூசைகள் ஏற்பான்
    பொன்குடம் ஏந்திடுவான்
கழல்களில் தண்டை கைகளில் மணியணி
    கனகனாய் இருந்திடுவான்
நிழல் தரும் கற்பகம் நினைத்திட பொழிந்திடும்
    நின்மலன் நானென்பான்

தனக்கிலை யீடு யாருமே என்பான்
தனமழை பெய்திடுவான்

சதுர்முகன் ஆணவத் தலையினைக் கொய்தான்
சத்தொடு சித்தானான்
புதரினில் பாம்பைத் தலையினில் வைத்தான்
புண்ணியம் செய்யென்றான்
பதரினைக் குவித்து செம்பினை எரித்தான்
பசும்பொன் இதுவென்றான்
தனக்கிலை யீடு யாருமே என்பான்
தனமழை பெய்திடுவான்

ஜெயஜெய வடுக நாதனே சரணம்
வந்தருள் செய்திடுவாய்
ஜெயஜெய ஷேத்திர பாலனே சரணம்
ஜெயங்களைத் தந்திடுவாய்
ஜெயஜெய வயிரவா செகம்புகழ் தேவா
செல்வங்கள் தந்திடுவாய்
தனக்கிலை யீடு யாருமே என்பான்
தனமழை பெய்திடுவான்

# யாழ்ப்பாணத்தில் வைரவ வழிபாடு

யாழ்ப்பாணக் குடாநாட்டிலே வைரவர் வழிபாடு தனித்துவமான ஒரு நிலையில் காணப்படுகிறது. சாதாரணமாக ஒரு மரத்தின் கீழ் திரிசூல வடிவில் இருப்பது முதல், சகல பரிவாரக் கோயில்களுக்கும் மத்தியிற் கர்ப்பக்கிருக மூர்த்தியாக வைரவர் விளங்குதல் வரை வைரவ தலங்கள் பல்வேறு நிலைகளில் உள்ளன. குறிப்பிட்ட சில தினங்களில் மட்டும் விளக்கேற்றும் நிலை முதல் நித்திய நைமித்திய நெறியில் பிரமோற்சவம் நடத்தும் நிலையீறாக வைரவர் வழிபாடு நடைபெற்று வருகின்றது வைரவர் கிராமத் தெய்வம், காவற்தெய்வம், இரத்தப் பலியேற்கும் தெய்வம் என்பன போன்ற கருத்து நிலைகளும் நம்மவர்களிடம் உண்டு. அவர் சிவகுமாரர் நல்வரில் ஒருவர் ஆதலால் சாஷாத் சிவபெருமானே அவர் என்ற கருத்தும் ஒருபுறும் உண்டு.

வைரவர் தோற்றம் மூவேறு தடவைகளில் மூவேறு காலங்களில் நிகழ்ந்ததாகச் சொல்லப்படுகிறது. மூன்றும், தீய செயல்களில் ஈடுபட்டவரை நிக்கிரகஞ் செய்யத் தோன்றிய உக்கிர வடிவங்களாகவே இருப்பதைக் காணக்கூடியதாக உள்ளது. பிரமன் அகந்தையால் சிவநிந்தை செய்தபோது அவன் தலையைக் கிள்ளிய வடிவம் ஒன்று. சிவ பக்தர்களைத் துன்புறுத்திய கஜாசுரன் என்ற ஆனையை நிக்கிரகிக்கத் தோன்றிய வடிவம் ஒன்று, இரணிய வதத்தினாற் கர்வம் கொண்ட நரசிம்ம வடிவினனாகிய விஷ்ணுவைத் தோலுரித்து நிக்கிரகித்த வடிவம் ஒன்று என மூன்று வடிவங்கள்

பேசப்படுகின்றன. இம்மூன்று வைபவங்களிலும் சிவனிடமிருந்தே வைரவ மூர்த்தம் தோற்றம் பெற்றதாக அறியப்படுகிறது.

சிவபெருமானின் அருள் வடிவங்களில் ஒன்றே வைரவ வடிவமாகும். எத்தனைய கொடியவர்களையும் தம் மறக்கருணையால் அடியவராக்கி ஆட்கொள்ளும் பொருட்டுச் சிவபெருமானே பல்வேறு மூர்த்திகளாகவும் வடிவம் கொண்டுள்ளார் என்பதைப் புராண வரலாறுகளினூடாக அறிகிறோம். சிவனே முருகனாகிச் சூரசங்காரம் செய்ததையும், வினாயகராகிக் கஜமுகாசுரனின் அகங்காரத்தை அடக்கியதையும், வீரபத்திர வடிவம் தாங்கித் தக்கனின் செருக்கை அடக்கியதையும் வைரவராகிப் பிரம்மா முதலிய தேவர்களின் அகந்தையை அடக்கியதையும், புராணங்களிலே நாம் காண்கிறோம்.

ஒவ்வொருவருடைய மனப்பக்குவத்திற்கும் இயல்புக்கும் ஏற்ப எந்த மூர்த்தியைத் தொழுதாலும் அந்த மூர்த்தியினிடமாக நின்று அப்பரம்பொருளே வேண்டியதை வேண்டியாங்கு அருளுவார்.

**யாதொரு தெய்வங்கொண்டீர் அத்தெய்வமாகியாங்கே**
**மாதொரு பாகனார் தாம் வருவர்**

என்பது சித்தாந்த சாஸ்திரங்களில் ஒன்றாகிய சிவஞான சித்தியாரின் கூற்றாகும்.

**பரித்ரானாய ஸாதூனாம் வினாசாய சதுஷ்க்ருதாம்**
**தர்மஸம்ஸ் தாபனார்த்தாய ஸம்பவாமி யுகே யுகே**

- பகவத்கீதை

எப்பொழுது அறம் அழிந்து மறம் மேலெழுகிறதோ அப்பொழுது என்னை நான் பிறப்பித்துக்கொள்கிறேன். என்பது பகவத்கீதையில் கிருஷ்ணபரமாத்மா போர்க்களத்தில் மனச்சோர்வுடன் நின்ற அருச்சுனனுக்குத் தைரியமூட்டக் கூறிய வாசகங்களாகும் துஷ்டநிக்ரஹ சிஷ்ட பரிபாலனம் செய்வதற்காகவே தான் அவதாரம் எடுத்ததாகவும் கீதையிலே கண்ணன் பார்த்தனுக்குக் கூறுகிறார்.

இவ்வாறே துஷ்ட நிக்ரஹம் செய்து சிஷ்ட பரிபாலனம் செய்கின்ற சிவனின் ஓர் வடிவமாகவே வைரவ மூர்த்தம் காணப்படுகிறது. சிவபெருமான் பிரமனின் பாவத்தைத் தொலைக்கவும் மற்றத் தேவர்களின் செருக்கை அகற்றவும் திருவுளம் பற்றினார். அப்போது சிவபெருமானின் இதயத்திலிருந்து வைரவக் கடவுள் தோன்றினார். நீல நிறத் திருமேனியும், சூலம், பரசு, பாசம், உடுக்கு என்ற நான்கு ஆயுதங்களைத் தரித்த நான்கு திருக்கரங்களும் மூன்று திருக்கண்களும் திருச்சடையுமுடைய உக்கிர வடிவம்கொண்டு விளங்கினார்.

**பரமனை மதித்திடாப் பங்கயாசனன்**
**ஒருதலைக்கிள்ளியே ஒழிந்த வானவர்**
**குருதியு மகந்தையுங் கொண்டு தண்டமுன்**
**புரிதரு வடுகனைப் போற்றி செய்குவாம்**

என்ற கந்தபுராணப் பாடல் வைரவர் வடிவம் தாங்கிச் சிவன் செய்த செயல் நமக்குத் தெளிவாகக் காட்டுகிறது.

வைரவப் பெருமானுக்குச் சேத்திர பாலர் என்ற ஒரு பெயரும் உண்டு. சேத்திர பாலர் என்பதற்குக் கோயிலைக் காப்பவர் என்பது பொருளாகும். ஆலயங்களிலே நடைபெறும் கிரியை நிழ்ச்சிகளிலே முதலிடம் விநாயகப் பெருமானுக்கு இருப்பது போல பூசையின் முடிவிலே வைரவப் பெருமானின் வணக்கமும் முக்கிய இடம்பெறுகின்றது. ஆலயங்களின் காவல் தெய்வமாக மாத்திரமல்லாது கிராமங்களின் காவல் தெய்வமாகவும் வயிரவப் பெருமான் வணக்கம் இருந்து வந்தது. யாழ்ப்பாணக் குடாநாட்டின் வைரவப் பெருமானுக்குக் கோயில் இல்லாத கிராமங்களே இல்லை எனலாம்.

ஆகம நெறி தவறாத வழிபாட்டுடன் அமைந்த வைரவர் கோயில்களும் உண்டு. கிராமிய வழிபாட்டு அம்சங்களுடன் கூடிய வைரவர் ஆலயங்களும் பல யாழ்ப்பாணத்தில் உண்டு. கிராமிய வழிபாட்டுடன் இருந்து பல வைரவர் ஆலயங்கள் இன்று ஆகம வழிபாட்டுத் தலங்களாக மாற்றம் பெற்றிருக்கின்றன. வீமன்காமத்திலே சிறப்பான சிற்ப வேலைப்பாடுகளுடன் கூடிய கருங்கல்லால் ஆக்கப்பட்ட சிறந்ததோர் ஆலயம் இருக்கிறது. சங்கானையிலும் சிறுப்பிட்டியிலும் உள்ள வைரவர் ஆலயங்களில் தேரோட்டம் திருவிழாக்களும் நடைபெறுகின்றன.

அந்நியர்களாகிய போர்த்துக்கேயர் இந்நாட்டைக் கைப்பற்றி ஆட்சி செய்த காலத்தில் சைவாலயங்களை இடித்து தரைமட்டமாக்கினார்கள். சைவாசாரத்தை அடியோடு ஒழித்துக்

கட்ட கங்கணம் கட்டி நின்றனர். தமது மதத்தைப் பரப்புவதற்காகவும் நமது நாட்டின் பொருளாதாரத்தைச் சுரண்டுவதற்காகவும் எமது நாட்டிற்கு வருகை தந்த அந்நியர்களின் ஆட்சிக் காலத்தில் மதக்கொடுமை தலைவிரித்துத் தாண்டவமாடியது. உருவ வழிபாட்டை வெறுப்பவர்களான அவர்கள் இலங்கை வாழ்மக்களை வலுக்கட்டாயமாகக் கிறிஸ்தவர்களாக்க முனைந்தனர். யாழ்ப்பாணத்தின் ஆட்சிப் பொறுப்பை ஏற்ற போத்தக்கீசத் தளபதியாகிய 'Bஓலிவரோ' என்பவன் தனது ஆளுமைக்கு உட்பட்ட பிரதேசமெல்லாம் இருக்கின்ற சைவக் கோயில்கள் அனைத்தையும் இடித்துத் தரைமட்டமாக்குப்படி தனது படையினருக்குக் கட்டளையிட்டான். புகழ்பூத்த சைவாலயங்கள் எல்லாம் இடித்துத் தரை மட்டமாக்கப்பட்டன. சைவ மக்கள் சிவசின்னங்கள் அணிவது தடுக்கப்பட்டது. சிவசின்னங்களை அணிந்தவர்கள் தண்டனைக்குள்ளாக்கப்பட்டார்கள். வாழையிலையில் உணவு படைத்து உண்ணக் கூடாது எனத்தடை விதித்தனர். விரத காலத்தில் வாழையிலையில் உணவு அருந்திய சைவர்கள் தாம் சாப்பிட்ட இலைகளைக் கூரைகளிலே செருகி வைக்க வேண்டிய பரிதாபகரமான நிலை இருந்தது. இத்தனை இம்சைகளுக்கு மத்தியிலும் நமது முன்னோர் சைவசமயத்தை மறைமுகமாக விடாது கைக்கொண்டு வாழ்ந்து வந்தார்கள் என்றால் அதுவும் இறைவனது மறக்கருணையின் அருட்செயலென்றுதான் கொள்ள வேண்டும்.

சிவபிரானுக்கும் வைரவப் பெருமானுக்கும் கையில் தரிக்கும் ஆயுதமாக அமைவதே மூவிலைச் சூலம் ஆகும். அவர்களுடைய

அதிகாரம் பெற்ற அஸ்திர தேவராக வழிபாடு செய்வதற்கும் உரியது சூலம் ஆகும். இந்துக்களின் தொன்மைசார் தொட்டிலாகிய சிந்துவெளி நாகரிகத்தில் புதையுண்டிருந்த மொஹஞ்சதாரோ, ஹரப்பா ஆகிய நகரங்களில் கண்டு பிடிக்கப்பட்ட முத்திரைகளில் வழிபாட்டுக்குரிய சூலங்கள் காணப்படுகின்றன. மத சுதந்திரம் மறுக்கப்பட்டு வாழ்ந்து வந்த யாழ்ப்பாண மக்கள் போர்த்துக்கீசருடைய ஆட்சிக் காலத்தில் சிவனிலிருந்து வேறாகார வைரவ சூலத்தை கிணற்றடியிலும் மரங்களினடியிலும் வீட்டு வளவு தோட்டங்களிலும் நாட்டி வைத்து வணங்கினர். வைரவப் பெருமானின் வணக்கமே சைவசமயத்தையும் சைவரையும் அந்நியரிடமிருந்து காப்பாற்றியது.

அந்நியர்களுடைய கழுகுக்கண் பார்வையிலிருந்து தப்புவதற்காக நமது முன்னோர்கள் தமது வழிபாட்டில் சிலதந்திரங்களைக் கையாண்டனர். பரம்பரையாக வழிபாடு செய்து வந்த இடங்களில் சிவபிரானுக்குரிய சின்னமாகிய மூவிலைச் சூலத்தை நட்டு அதன் பக்கச்சுடர்களையும் துணியால் மறைத்த வெளியே காண்பவர்கள் கிறிஸ்தவ சிலுவை வழிபாடு செய்கிறார்கள் எனநினைக்குப்படி செய்து சைவவழிபாட்டை மறைமுகமாக நம்மவர்கள் கடைப்பிடித்து வந்தார்கள்.

இப்படியாக யாழ்ப்பாணத்தில் சைவகலாச்சாரத்தை பாதுகாக்கவும் எமது சமய பாரம்பரியம் மீண்டும் புத்துயிர்பெறவும், நாம் இன்றும் சைவர்களாகவே வாழவும் வழிவகுத்த வைரவப்பெருமானின் அருட்கடாட்சத்தை நாம் என்றுமே மறக்க முடியாது.

வைரவப் பெருமானுக்குரிய மந்திரங்களையும் அவரைப் போற்றித் துதிக்கும் பாடல்களையும் பக்தி சிரத்தையோடு ஆசாரசீலராய் இருந்து பாராயணம் செய்வோர் மரண பயம் ஒழிவர் இஷ்டசித்திகளைப் பெறுவர். முன்செய்த பாவங்களை அனைத்தும் ஒழிந்து தூயவராவர். அவரை நினைத்து அவருக்குரிய மந்திரங்களை ஓதி விபூதி தரிக்கின்ற சரீரத்தில் உள்ள நோய்கள் நீங்கிச் சுகம் பெறுவர் என்று சிவாகமங்கள் கூறுகின்றன.

**இன்பம் பெருக்கி இருளகற்றி எஞ்ஞான்றும்**
**துன்பம் தொடர்வறுத்துச் சோதியாய் - அன்பமைத்துச்**
**சீரார் பெருந்துறையான் என்னுடைய சிந்தையே**
**ஊராகக் கொண்டான் உவந்து**

சிவமகாலிங்கம்.B.A
ஆசிரியர்: இந்துக்கல்லூரி

எனவே இத்தனை இன்னல்களுக்கு மத்தியிலும் தமது முன்னோர் வழிவந்த சமய நம்பிக்கையை உறுதியாகக் கடைப்பிடித்து நமது சமயத்தை அழிந்துவிடாமல் காப்பாற்றி வந்தமையையிட்டு சைவமக்களாகிய நாம் பெருமைப்பட்டுக் கொள்ளும் வேளையில் எம்மத்தியில் எம் மக்களில் சிலர் நமது சமயத்தைவிட்டு நீங்குவது எமக்கு மிகவும் வேதனை தரும் விடயமாக உள்ளது. இதை அனைவரும் கவனத்திற் கொள்வதும் அவசியம்.

உ

# மானிடப்பிறவியின் தாற்பரியங்கள்

சூல மேற்றுஞ் சுழல் விழிக்கேத்திர
பாலன் பொற்பதம் பற்றிப் பணிகுவாம்.

"மானிடப்பிறவி கொண்டவன் தனது குலதெய்வத்தை மதித்து அதன் கண் தான் பிறந்த ஊரை (கிராமத்தை / தேசத்தை) மதிப்பதே" அவனது முதற்கடமையாகும். பெற்றதாயும், தந்தையும், பிறந்த ஊரும், தன்னகத்தே கொள் மானிடனே - (ஆன்றோர்வாக்கு) ஆன்மாக்களை உய்விக்க வழிகாட்டும் இறைவனுக்கு ஆலயம் அமைத்தலும், ஆலயத்தைப் புதுப்பித்தலும், பூசை முதலிய நித்திய நைமத்திய கருமங்களைக் குறைவறச் செய்தலும் 'பதிநல்வினை' என ஆகமங்கள் கூறுகின்றன. சிவபெருமானின் குமாரர்களில் ஒருவரே வைரவப்பெருமான். குற்றம் பொறுக்காத தெய்வமானதினால் வழிபாட்டுக்கு வேண்டப்படுவன அகச்சுத்தம், புறச்சுத்தம், திரிகரணசுத்தம், ஆகியனவேயாம். இவற்றை வழுவாது கடைப்பிடித்து இறுகிப்பற்றிக் கொண்டால் அவரின் திருவருள் நிச்சயம் கைகூடும்.

நாய் வாகனத்துடன் நிர்வாண கோலமாகக் காட்சி தருபவர் தான் வைரவர், கோவிலையும், கிராமத்தையும், பாதுகாக்கும் காவற்தெய்வம் வைரவரே, இவரைச் சூலவடிவத்திலும் வழிபடுவது உண்டு.

இன்ன வழியால் இன்ன இடத்திற்குப் போகலாம் என்று பாதையைக் காட்டி நிற்றல் மட்டுமன்றி இன்ன வாகனத்திலேறி இப்படிப் போகவேண்டுமென்று வழி முறைகளையும் சொல்லித் தருகிறது சைவசமயம்.

பொருள்களைப் படங்கள் வரைந்து அதன் மூலம் விளங்கச் செய்வது போலவும் செயல்முறைப் பரிசோதனை மூலம் சில முடிவுகளைக் கண்டறிவது போலவும், நாம் ஞானக்கண்ணால் கண்டறிய வேண்டிய இறைவனுக்கு சில உருவப்பிரதிமைகளை நமது ஊனக்கண்களுக்குத் தெரியும்படி அமைத்து அத்திருவுருவங்களை வைத்துச் சில கிரியைகளைச் செய்கிறோம்.

வைரவ வழிபாடு இன்று கிராம மட்டத்துக்குரிய தொன்றாகக் காணப்படுகின்றதெனினும் அது சிவ வழிபாட்டின் வரலாற்றில் மிக முக்கியமானதொன்றாகும். அர்த்த ஜாமப் பூஜை முடிந்து கோவில் கதவுகளைப்பூட்டி வைரவக்கடவுளிடம் ஒப்படைப்பது நடைமுறையிலுள்ளது. இவ்வகையில் வைரவர்காவல் தெய்வமாகக் கருதப்படுகிறார்.

நாவலர் பெருமான் சைவ வினாவிடையில் சிவபெருமானுடைய திருக்குமாரர்கள் விநாயகக்கடவுள், சுப்பிரமணியக்கடவுள், வைரவக்கடவுள், வீரபத்திரகடவுள் என்னும் நால்வர் என்கிறார். சிவபெருமானின் திருக்குமாரர்களாகக் குறிக்கப்பெறும், விநாயகர், சுப்பிரமணியர், வீரபத்திரர், வைரவர், ஆகிய மூர்த்திகள் சிவபிரானின் வேறு வடிவங்களே அன்றி அவரினும் வேறானவரல்லர் -

இறைவன் முருகப் பெருமானின் இயல்பினை உமையம்மைக்கு எடுத்துரைக்குமிடத்து

**........ நமது சக்தி அறுமுகன் அவனும் யாமும்**
**பேதகமன்றால் நம்போல் பிரிவிலன் யாண்டும் நின்றன்.**

எனக்கூறியதனால் தமக்கும் முருகனுக்கும் உள்ள அபேத நிலையைப் புலப்படுத்தியருளினார். இவ்வாறே சிவபெருமானும்

ஏனைய மூர்த்திகளும் பேதகம் அல்ல என்பதை உணரக்கூடியதாக உள்ளது.

வைரவர் வழிபாடு ஈழத்தில் பெருவழக்குப் பெற்றவரலாறு அனைவரும் அறிந்ததே- வழிபாடு பிரபலமுற்றதாயினும் வைரவமூர்த்தியின் மகிமைகள் அவ்வளவாகத் தெரிந்தில. உக்கிரமூர்த்தியான வைரவரின் உபாசனை தீமைகளில் இருந்து எங்களைக் காத்தருள்வது - நாமும் வைரவப்பெருமானின் பாதாரவிந்தங்களைப் பற்றி இன்னருள் பெற்றுய்வோமாக -

> **"அவரவர் பிராப்த்த பிரகாரம் அதற்கானவன்**
> **ஆங்காங்கிருந்து ஆட்டுவிப்பான், என்றும்**
> **நடவாதது என்ன முயற்சிக்கினும் நடவாது"**

இதுவேதிண்ணம். என்பது ரமணமகரிசி உயிர் வாக்கு. ஆன்மீக வாழ்க்கைக்குப் புலனடக்கம் அவசியம் என்பதை தாயுமான சுவாமிகள் இவ்வாறு கூறுகின்றார்.

**யாவையும் வைத்துக்கட்டு இங்கு ஆராய அடிக்கடி**
**சுற்றுகிறாய். உன் அவல மதிக்கு ஓர் ஆயிரம் புத்தி**
**சொன்னாலும் ஓர் கிளை ஓ கெடுவாய் பாராய்**
**உனைக் கொல்லுவேன் அருள்பாங்கு கொண்டே**

**குணமில்லா மனமெனும் பேய்க் குரங்கின்**
**பின்னே மாறாத கவலையுடன் சுழல எனை**
**வைத்தனையே! பஞ்சாய்ப் பறக்கும் நெஞ்சும்**
**பாவியே னைக் கூவி ஐயா அஞ்சாதே என்று**
**இன்னருள் செய்யவும் காண்பேனோ!.**

## வைரவருக்குரிய விரதங்கள்

மங்கள வாரவிரதம், சித்திரைப்பரணி, ஐப்பசிப்பரணி அட்டமித்திதி விரதங்கள் வைரவருக்குரிய விரதங்கள். மங்கல வாரவிரதம், தைமாதத்து முதல் செவ்வாய் தொடங்கி செவ்வாய் தோறும் அனுட்டிப்பது. பரணி நட்சத்திரத்தில் தான் பைரவர் அவதரித்தார். எனவே பரணி நட்சத்திரத்தில் வைரவரை விரமிருந்து வழிபடலாம்.

அட்டமித்திதியில் வைரவரை வணங்கினால் ஐஸ்வரியம், சுகம், பொன், பொருளைத் தருகின்றார். காரணம் அட்டமித்திதியில் அஷ்டலஷ்மிகளும் வைரவரை வணங்கி வைரவரின் அருளால் தன்னை வணங்கும் பக்தர்களுக்கு அஷ்டலஷ்மிகளின் அருள்புரிவதால் அட்டமித்திதி வழிபாடும் சிறந்தது.

### ஸ்ரீ வைரவர் காயத்ரீ மந்திரம்

ஓம் ஸ்வானத்வஜாய வித்மஹே!
ஸூலஹஸ்தாய தீமஹி!
தன்நோ வைரவப்: ப்ரசோதயாத்

வே. திருநீலகண்டன்

# திருப்புகலூர்ப் பதிகம்

*முதுமையில், பாயில் படுத்துத் துன்புறாது, நோயில் கிடந்து துயர்உறாது, அமைதியாகச் சிவன்தாள் மலர்களில் கலந்து இன்புற ஓத வேண்டிய பதிகம்.*

*திருநாவுக்கரசு நாயனார்* — *6ந் திருமுறை*

*திருச்சிற்றம்பலம்*

எண்ணுகேன் என்சொல்லி எண்ணு கேனோ
எம்பெருமான் திருவடியே எண்ணி னல்லால்
கண்ணிலேன் மற்றோர் களைகண் இல்லேன்
கழலடியே கைதொழுது காணின் அல்லால்
ஒண்ணுளே ஒன்பது வாசல் வைத்தாய்
ஒக்க அடைக்கும்போ துணர மாட்டேன்
புண்ணியா உன்னடிக்கே போது கின்றேன்
பூம்புகலூர் மேவிய புண்ணி யனே 01

அங்கமே பூண்டாய் அனலா டினாய்
ஆதிரையாய் ஆல்நிழலாய் ஆனே றூர்ந்தாய்
பங்கமொன் றில்லாத படர்ச டையினாய்
பாம்பொடு திங்கள் பகைதீர்த் தாண்டாய்
சங்கையொன் றின்றியே தேவர் வேண்டச்
சமுத்திரத்தின் நஞ்சுண்டு சாவா மூவாச்
சிங்கமே உன்னடிக்கே போது கின்றேன்
திருப்புகலூர் மேவிய தேவ தேவே 02

பையரவக் கச்சையாய்ப் பால்வெண் ணீற்றாய்
பளிக்குக் குழையினாய் பண்ணா ரின்சொல்

மைவிரவு கண்ணானைப் பாகங் கொண்டாய்
மான்மறிகை ஏந்தினாய் வஞ்சக் கள்வர்
ஐவரையும் என்மேற் றரவ றுத்தாய்
அவர்வேண்டுங் காரியமிங் காவ தில்லை
பொய்யுரையா துன்னடிக்கே போது கின்றேன்
பூம்புகலூர் மேவிய புண்ணி யனே 03

தெருளாதார் மூவெயிலுந் தீயில் வேவச்
சிலைவளைத்துச் செங்கணையாற் செற்ற தேவே
மருளாதார் தம்மனத்தில் வாட்டந் தீர்ப்பாய்
மருந்தாய்ப் பிணிதீர்ப்பாய் வானோர்க் கென்றும்
அருளாகி ஆதியாய் வேத மாகி
அலர்மேலான் நீர்மேலான் ஆய்ந்துங் காணாப்
பொருளாவாய் உன்னடிக்கே போது கின்றேன்
பூம்புகலூர் மேவிய புண்ணி யனே 04

நீரேறு செஞ்சடைமேல் நிலாவெண் திங்கள்
நீங்காமை வைத்துகந்த நீதி யானே
பாரேறு படுதலையிற் பலிகொள் வானே
பண்டநங்கற் காய்ந்தானே பாவ நாசா
காரேறு முகிலனைய கண்டத் தானே
கருங்கைக் களிற்றுரிவை கதறப் போர்த்த
போரேறே உன்னடிக்கே போது கின்றேன்
பூம்புகலூர் மேவிய புண்ணி யனே 05

விரிசடையாய் வேதியனே வேத கீதா
விரிபொழில்சூழ் வெண்காட்டாய் மீயச் சூராய்

திரிபுரங்கள் எரிசெய்த தேவ தேவே
திருவாரூர்த் திருமூலட் டானம் மேயாய்
மருவினியார் மனத்துளாய் மாகா ளத்தாய்
வலஞ்சுழியாய் மாமறைக்காட் டெந்தா யென்றும்
புரிசடையாய் உன்னடிக்கே போது கின்றேன்
பூம்புகலூர் மேவிய புண்ணி யனே 06

தேவார்ந்த தேவனைத் தேவ ரெல்லாந்
திருவடிமேல் அலரிட்டு தேடி நின்று
நாவார்ந்த மறைபாடி நட்டம் ஆடி
நான்முகனும் இந்திரனும் மாலும் போற்றக்
காவார்ந்த பொழிற்சோலைக் கானப் பேராய்
கழுக்குன்றத் துச்சியாய் கடவு ளேநின்
பூவார்ந்த பொன்னடிக்கே போது கின்றேன்
பூம்புகலூர் மேவிய புண்ணி யனே. 07

நெய்யாடி நின்மலனே நீல கண்டா
நிறைவுடையாய் மறைவல்லாய் நீதி யானே
மையாடு கண்மடவாள் பாகத் தானே
மான்தோல் உடையாய் மகிழ்ந்து நின்றாய்
கொய்யாடு கூவிளங் கொன்றை மாலை
கொண்டடியேன் நானிட்டுக் கூறி நின்று
பொய்யாத சேவடிக்கே போது கின்றேன்
பூம்புகலூர் மேவிய புண்ணி யனே 08

துன்னஞ்சேர் கோவணத்தாய் தூய நீற்றாய்
துதைந்திலங்கு வெண்மழுவாள் கையி லேந்தித்

தன்னனையுந் தண்மதியும் பாம்பும் நீருஞ்
சடைமுடிமேல் வைத்துகந்த தன்மை யானே
அன்னநடை மடவாள் பாகத் தானே
யக்காரம் பூண்டானே ஆதி யானே
பொன்னங் கழலடிக்கே போது கின்றேன்
பூம்புகலூர் மேவிய புண்ணி யனே 09

ஒருவரையும் அல்லா துணரா துள்ளம்
உணர்ச்சித் தடுமாற்றத் துள்ளே நின்ற
இருவரையும் மூவரையும் என்மேல் ஏவி
இல்லாத தரவறுத்தாய்க் கில்லேன் ஏலக்
கருவரைசூழ் கானல் இலங்கை வேந்தன்
கடுந்தேர்மீ தோடாமைக் காலாற் செற்ற
பொருவரையாய் உன்னடிக்கே போது கின்றேன்
பூம்புகலூர் மேவிய புண்ணி யனே 10

*திருச்சிற்றம்பலம்*

# பஞ்சாக்கரத் திருப்பதிகம்

*இம்மை, மறுமையில் பரிபூரணமான இன்பம் பெற்று வாழ ஓதவேண்டிய பதிகம்.*

**அஞ்செழுத்துண்மை**

திருஞானசம்பந்தர் *மூர்த்தி நாயனார்* 3ந் திருமுறை

துஞ்சலுந் துஞ்சலலி லாத போழ்தினும்
நெஞ்சக நைந்து நினைமின் நாள்தொறும்
வஞ்சகம் அற்றடி வாழ்த்த வந்தகூற்று
அஞ்ச உதைத்தன அஞ்செ ழுத்துமே. 01

மந்திர நான்மறை யாகி வானவர்
சிந்தையுள் நின்றவர் தம்மை யாள்வன
செந்தழல் ஓம்பிய செம்மை வேதியர்க்கு
அந்தியுள் மந்திரம் அஞ்செ ழுத்துமே. 02

ஊனில் உயிர்ப்பை ஒடுக்கி ஒண்சுடர்
ஞானவி ளக்கினை யேற்றி நன்புலத்து
ஏனை வழிதிறந் தேத்து வார்க்கிடர்
ஆன கெடுப்பன அஞ்செ ழுத்துமே. 03

நல்லவர் தீயர் எனாது நச்சினர்
செல்லல் கெடச்சிவமுத்தி காட்டுவர்
கொல்ல நமன்தமர் கொண்டு போமிடத்து
அல்லல் கெடுப்பன அஞ்செ ழுத்துமே. 04

கொங்கலர் வன்மதன் வாளி யைந்தகத்து
அங்குள பூதமும் அஞ்ச வைம்பொழில்
தங்கர வின்படம் அஞ்சுந் தம்முடை
அங்கையில் ஐவிரல் அஞ்செ ழுத்துமே. 05

தும்மல் இருமல் தொடர்ந்த போழ்தினும்
வெம்மை நரகம் விளைந்த போழ்தினும்
இம்மை வினையடர்த் துஎய்தும் போழ்தினும்
அம்மையி னுந்துணை அஞ்செ ழுத்துமே. 06

வீடுபி றப்பை யறுத்து மெச்சினர்
பீடைகெ டுப்பன பின்னை நாள்தொறும்
மாடுகொ டுப்பன மன்னு மாநடம்
ஆடியு கப்பன அஞ்செ ழுத்துமே. 07

வண்டமர் ஓதி மடந்தை பேணின
பண்டையி ராவணன் பாடி யுய்ந்தன
தொண்டர்கள் கொண்டு துதித்த பின்னவர்க்கு
அண்டம் அளிப்பன அஞ்செ ழுத்துமே. 08

கார்வணன் நான்முகன் காணு தற்கொணாச்
சீர்வணச் சேவடி செவ்வி நாள்தொறும்
பேர்வணம் பேசிப் பிதற்றும் பித்தர்கட்கு
ஆர்வணம் ஆவன அஞ்செ ழுத்துமே. 09

புத்தர்ச மண்கழுக் கையர் பொய்கொளாச்
சித்தத் தவர்கள் தெளிந்து தேறின
வித்தக நீறணி வார்வி னைப்பகைக்கு
அத்திர மாவன அஞ்செ ழுத்துமே. 10

நற்றமிழ் ஞானசம் பந்தன் நான்மறை
கற்றவன் காழியர் மன்னன் உன்னிய
அற்றமில் மாலையீ ரைந்தும் அஞ்செழுத்து
உற்றன வல்லவர் உம்ப ராவரே. 11

# கோளறு திருப்பதிகம்

*நவக்கிரகங்களின் ஆட்சியாலும், பெயர்ச்சியாலும், தீய பார்வையாலும், பிறவகையாலும் வரும் துன்பங்கள் அனைத்தும் நீங்க ஓத வேண்டிய பதிகம்*

*திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார்* *2ந் திருமுறை*

*திருச்சிற்றம்பலம்*

வேயுறு தோளிபங்கன் விடமுண்ட கண்டன்
மிகநல்ல வீணை தடவி
மாசறு திங்கள்கங்கை முடிமே லணிந்தென்
னுளமே புகுந்த அதனால்
ஞாயிறு திங்கள்செவ்வாய் புதன்வியாழம் வெள்ளி
சனிபாம் பிரண்டு முடனே
ஆசறு நல்லநல்ல அவைநல்ல நல்ல
அடியா ரவர்க்கு மிகவே. 01

என்பொடு கொம்பொடாமை யிவைமார் பிலங்க
எருதேறி யேழை யுடனே
பொன்பொதி மத்தமாலை புனல்சூடி வந்தென்
னுளமே புகுந்த அதனால்
ஒன்பதொ டொன்றொடேழு பதினெட் டொடாறு
முடனாய நாள்க ளவைதாம்
அன்பொடு நல்லநல்ல அவைநல்ல நல்ல
அடியா ரவர்க்கு மிகவே. 02

உருவளர் பவளமேனி ஒளிநீ றணிந்து
உமையோடும் வெள்ளை விடைமேல்
முருகலர் கொன்றைதிங்கள் முடிமே லணிந்தென்
னுளமே புகுந்த அதனால்

திருமகள் கலையதூர்த்தி செயமாது பூமி
திசைதெய்வ மான பலவும்
அருநெறி நல்லநல்ல அவைநல்ல நல்ல
அடியா ரவர்க்கு மிகவே. 03

மதிநுதல் மங்கையோடு வடபா லிருந்து
மறையோது மெங்கள் பரமன்
நதியொடு கொன்றைமாலை முடிமே லணிந்தென்
னுளமே புகுந்த அதனால்
கொதியுறு காலனங்கி நமனோடு தூதர்
கொடுநோய்க ளான பலவும்
அதிகுண நல்லநல்ல அவைநல்ல நல்ல
அடியா ரவர்க்கு மிகவே. 04

நஞ்சணி கண்டனெந்தை மடவாள்த னோடும்
விடையேறு நங்கள் பரமன்
துஞ்சிருள் வன்னிகொன்றை முடிமே லணிந்தென்
னுளமே புகுந்த அதனால்
வெஞ்சின அவுணரோடும் முருமிடியு மின்னும்
மிகையான பூத மவையும்
அஞ்சிடும் நல்லநல்ல அவைநல்ல நல்ல
அடியா ரவர்க்கு மிகவே. 05

வாள்வரி யதளதாடை வரிகோ வணத்தர்
மடவாள்த னோடு முடனாய்
நாண்மலர் வன்னிகொன்றை நதிசூடி வந்தெ
னுளமே புகுந்த அதனால்

கோளரி யுழுவையோடு கொலையானை கேழல்
கொடுநாக மோடு கரடி
ஆளரி நல்லநல்ல அவைநல்ல நல்ல
அடியா ரவர்க்கு மிகவே. 06

செப்பிள முலைநன் மங்கையொரு பாகமாக
விடையேறு செல்வ னடைவார்
ஒப்பிள மதியுமப்பு முடிமே லணிந்தெ
னுளமே புகுந்த அதனால்
வெப்பொடு குளிரும்வாத மிகையான பித்தும்
வினையான வந்து நலியா
அப்படி நல்லநல்ல அவைநல்ல நல்ல
அடியா ரவர்க்கு மிகவே. 07

வேள்பட விழிசெய்தன்று விடைமே லிருந்து
மடவாள்த னோடு முடனாய்
வான்மதி வன்னிகொன்றை மலர்சூடி வந்தெ
னுளமே புகுந்த அதனால்
ஏழ்கடல் சூழிலங்கை அரையன்ற னோடு
மிடரான வந்து நலியா
ஆழ்கடல் நல்லநல்ல அவைநல்ல நல்ல
அடியா ரவர்க்கு மிகவே. 08

பலபல வேடமாகும் பரனாரி பாகன்
பசுவேறு மெங்கள் பரமன்
சலமக ளோடெருக்கு முடிமே லணிந்தெ
னுளமே புகுந்த அதனால்

மலர்மிசை யோனுமாலும் மறையோடு தேவர்
வருகால மான பலவும்
அலைகடல் மேருநல்ல அவைநல்ல நல்ல
அடியா ரவர்க்கு மிகவே. 09

கொத்தலர் குழலியோடு விசையற்கு நல்கு
குணமாய வேட விகிர்தன்
மத்தமு மதியுநாக முடிமே லணிந்தென்
னுளமே புகுந்த அதனால்
புத்தரொ டமணைவாதி லழிவிக்கு மண்ணல்
திருநீறு செம்மை திடமே
அத்தகு நல்லநல்ல அவைநல்ல நல்ல
அடியா ரவர்க்கு மிகவே. 10

தேனமர் பொழில்கொளாலை விளைசெந்நெல் துன்னி
வளர்செம்பொ னெங்கும் நிகழ
நான்முக னாதியாய பிரமா புரத்து
மறைஞான ஞான முனிவன்
தானுறு கோளுநாளு மடியாரை வந்து
நலியாத வண்ண முரைசெய்
ஆனசொல் மாலையோது மடியார்கள் வானில்
அரசாள்வ ராணை நமதே 11

*திருச்சிற்றம்பலம்*

# நமச்சிவாயத் திருப்பதிகம்

*நாள்தோறும் உணவும் உறக்கமும் சீராகப்பெறுவதற்கும் இறைவழிபாட்டில் ஈடுபாடு இருப்பதற்கும் மறுபிறப்பைத் தவிர்ப்பதற்கும் ஓதவேண்டிய பதிகம்.*

*திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார்* *3ம் திருமுறை*

*திருச்சிற்றம்பலம்*

காத லாகிக் கசிந்துகண் ணீர்மல்கி
ஓது வார்தமை நன்னெறிக் குய்ப்பது
வேத நான்கினு மெய்பொரு ளாவது
நாதன் நாமம் நமச்சி வாயவே. 01

நம்பு வாரவர் நாவி னவிற்றினால்
வம்பு நாண்மலர் வார்மது வொப்பது
செம்பொ னார்தில கம்முல குக்கெலாம்
நம்பன் நாமம் நமச்சி வாயவே. 02

நெக்குள் ஆர்வம் மிகப்பெருகி, நினைந்து
அக்கு மாலை கொண்டங்கையில் எண்ணுவார்
தக்க வானவராத் தகுவிப்பது
நக்கன் நாமம் நமச்சி வாயவே. 03

இயமன் தூதரு மஞ்சு வரின்சொலால்
நயம்வந் தோதவல் லார்தமை நண்ணினால்
நியமந் தான்நினை வார்க்கினி யான்நெற்றி
நயனன் நாமம் நமச்சி வாயவே. 04

கொல்வா ரேனுங் குணம்பல நன்மைகள்
இல்லா ரேனு மியம்புவ ராயிடின்
எல்லாத் தீங்கையு நீங்குவ ரென்பரால்
நல்லார் நாமம் நமச்சி வாயவே. 05

மந்த ரம்மன பாவங்கள் மேவிய
பந்த னையவர் தாமும் பகர்வரேல்
சிந்தும் வல்வினை செல்வமு மல்குமால்
நந்தி நாமம் நமச்சி வாயவே. 06

நரக மேழ்புக நாடின ராயினும்
உரைசெய் வாயின ராயி னுருத்திரர்
விரவி யேபுகு வித்திடு மென்பரால்
வரதன் நாமம் நமச்சி வாயவே. 07

இலங்கை மன்ன னெடுத்த அடுக்கன்மேல்
தலங்கொள் கால்விரல் சங்கர னூன்றலும்
மலங்கி வாய்மொழி செய்தவ னுய்வகை
நலங்கொள் நாம நமச்சி வாயவே. 08

போதன் போதன கண்ணனு மண்ணல்தன்
பாதந் தான்முடி நேடிய பண்பராய்
யாதுங் காண்பரி தாகி யலந்தவர்
ஓதும் நாம நமச்சி வாயவே. 09

கஞ்சி மண்டையர் கையிலுண் கையர்கள்
செஞ்சொல் மிண்டர் விரவில ரென்பரால்
விஞ்சை யண்டர்கள் வேண்ட அமுதுசெய்
நஞ்சுண் கண்டன் நமச்சி வாயவே. 10

நந்தி நாம நமச்சிவ யவெனும்
சந்தை யாற்றமிழ் ஞானசம் பந்தன்சொல்
சிந்தை யால்மகிழ்ந் தேத்தவல் லாரெலாம்
பந்த பாசம் அறுக்கவல் லார்களே. 11

*திருச்சிற்றம்பலம்*

19 OCT 2019
~~[illegible]~~ 18358

